# தமிழரசு

ஜூன் 2010
ரூ.10/-

செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு


















## கலைஞர் அரசின் நான்காண்டுச் சாதனை மலர்

தொகுதி - இரண்டு


உடல்ஊனமுற்றோர் சங்கங்களின்















# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி - ஆனி
ஜூன் 2010
மலர் : 41 இதழ் : 12

**விலை ரூ.10/-**

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :
திரு. **கா.பாஸ்கரன்**, எம்.ஏ.,பி.எல்.,
இயக்குநர் (பொ) மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்
துரை. தாமரைச்செல்வம்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்
க. குமாரவேலு
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ச. ஜெயலலிதா
ஆர்.சேகர்

உதவி ஆசிரியர்கள்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்
த.கலைச்செல்வன்
வ.பாலசுப்பிரமணியன்

நிருபர்கள்
கோ. சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்
தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ. ஜெயசிம்ஹன்

கணினி வடிவமைப்பு
அ. மதன்,
உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
ஆர். பாலாஜி
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை -
தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in

**தொகுதி - இரண்டு**



**சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்**
**தாழா துஞற்று பவர்க்கு**

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து

1. மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சர்
திரு. **இ. பெரியசாமி** அவர்கள்
வீட்டுவசதி ------------ 3-4

2. மாண்புமிகு சுற்றுலா (ம) பதிவுத்துறை அமைச்சர்
திரு. **என். சுரேஷ்ராஜன்** அவர்கள்
சுற்றுலா மற்றும் பதிவு ------------ 5-15

3. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள்
செய்தி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி ------------ 16-27

4. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
திரு. **எ.வ. வேலு** அவர்கள்
உணவு ------------ 28-29

5. மாண்புமிகு குடிசை மாற்று வாரியம் (ம)
இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. **சுப. தங்கவேலன்** அவர்கள்
குடிசைமாற்று வாரியம் (ம)
இடவசதிக் கட்டுப்பாடு ------------ 30

6. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்கள்
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்,
சிறுபான்மையினர் நலம் மற்றும்
கைத்தறி ------------ 31-38

7. மாண்புமிகு தொழிலாளர் நலன் (ம)
வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்
திரு. **தா.மோ. அன்பரசன்** அவர்கள்
தொழிலாளர் நலன் மற்றும்
வேலைவாய்ப்பு ------------ 39-44

8. மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **கே ஆர். பெரியகருப்பன்** அவர்கள்
இந்து சமயம் மற்றும்
அறநிலையங்கள் ------------ 45-50

9. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள்
பள்ளிக்கல்வி ------------ 51-53

10. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
திரு. **எஸ்.என்.எம். உபயதுல்லா** அவர்கள்
வணிகவரி ------------ 54-56

11. மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்
திரு. **டி.பி.எம். மைதீன்கான்** அவர்கள்
சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாடு ------------ 57-62

12. மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. **என்.செல்வராஜ்** அவர்கள்
வனம் ------------ 63-67

13. மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
திரு. **வெள்ளக்கோயில் மு.பெ.சாமிநாதன்** அவர்கள்
நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் ------------ 68-70

14. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்
டாக்டர். திருமதி. **பூங்கோதை** அவர்கள்
தகவல் தொழில்நுட்பம் ------------ 71-74

15. மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி. **பி. கீதா ஜீவன்** அவர்கள்
சமூகநலம் மற்றும் சத்துணவு ------------ 75-80

16. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி. **ஆ. தமிழரசி** அவர்கள்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் ------------ 81-86

17. மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு. **கே.பி.பி.சாமி** அவர்கள்
மீன்வளம் ------------ 87-88

18. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. **உ. மதிவாணன்** அவர்கள்
பால்வளம் ------------ 89-93

19. மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திரு. **கா.இராமச்சந்திரன்** அவர்கள்
கதர், கிராமத்தொழில்கள் ------------ 94



# புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் உருவாக்கம்

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர்

திரு. **இ.பெரியசாமி** அவர்கள்

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 2006–2007 முதல் 2009–2010 வரை 1,823 மனைகளையும் (குடிசைமாற்று குடியிருப்பு உட்பட) 4,796 அடுக்குமாடிக் குடியிருப்புகளையும் மற்றும் 641 வீடுகளையும் வாரியம் உருவாக்கியுள்ளது.

★ 2009–2010ஆம் ஆண்டில் ரூ.126.69 கோடி மதிப்பீட்டில் 2,307 அலகுகள் கட்டுவதற்காக வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் 2010–11ஆம் ஆண்டில் 12,721 அலகுகள் கட்ட திட்டக் கருத்துரு தயாரிப்பில் உள்ளது.

★ நகர்ப்புர ஏழை மக்களுக்கு வீடு கட்ட அல்லது வாங்குவதற்கு வட்டி மானியத்துடன் வீடு கட்ட கடன் வழங்கும் (ISHUP) திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பொறுப்பு நிறுவனமாக (Nodal Agency) நியமிக்கப்பட்டுள்ளது. இதுவரை 31,256 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 7,592 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

★ மதுரையில் ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் மற்றும் வணிக வளாகம் மற்றும் சென்னை பெசன்ட் நகரில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் ஆகிய திட்டங்களுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன.

★ தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமத்தில் அகில இந்திய அமைச்சுப் பணியாளர்களுக்கென ரூ.9.74 கோடி மதிப்பீட்டில் 32 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் பிப்ரவரி மாதம் 2008இல் முடிவுற்று, குடியேற ஒப்படைக்கப்பட்டன.

★ தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ், விழுப்புரத்தில் 12 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் பெரம்பலூரில் 18 குடியிருப்புகளும் ரூ. 272.26 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த 2010–2011ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு பதவி உயர்வளிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 298 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் 323 தொழில்நுட்பம் அல்லாத பணியாளர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

★ பணியிலிருந்த போது இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் 10 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

★ சொந்த அலுவலின் பொருட்டு ஈட்டா விடுப்பை ஒப்புவிப்பு செய்து பணம் பெறும் சலுகை மீண்டும் வழங்கப்பட்டது.

★ மருத்துவ நல நிதி சலுகை மீண்டும் வழங்கப்பட்டு வருவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதன் சலுகைகள் வழங்கப்பட்டன.

★ களப்பணியாளர்களுக்கு சீருடை, காலணி மற்றும் கைவிளக்கு வழங்கப்பட்டது.

★ வாரியப்பணியாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு ஒதுக்கீட்டில் வழங்கப்பட்ட 2 சதவீத ஒதுக்கீடு 3 சதவீதமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ வீட்டு வசதிக் கடன் / திருமணக் கடன் மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

★ ஒவ்வொரு வருடமும் "சி" மற்றும் "டி" பிரிவு பணியாளர்களுக்கு வருடாந்திர ஊக்கத் தொகை (Bonus) மற்றும் "ஏ" மற்றும் "பி" பிரிவு பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

★ 1.6.2006 முதல் 31.3.2010 வரையிலான கடந்த 4 ஆண்டுகளில் ரூ.1,383.07 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

★ 2006–2007 முதல் 2009–2010 வரையிலான 4 ஆண்டுகளில் 17,930 அலகுகள் ரூ.513.06 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

★ 2006–2007 முதல் 2009–2010 வரையிலான 4 ஆண்டுகளில் 73,024 ஒதுக்கீட்டுதாரர்களுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக கடந்த 4 ஆண்டுகளில் பகுதி–I மற்றும் II திட்டத்தின் கீழ் 7,299.33 இலட்சம் ரூபாய் அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, முழுத்தொகையும் செலவிடப்பட்டது.

★ கடந்த 4 ஆண்டுகளில் அலுவலக உபயோகத்திற்காக 25 புதிய மகிழுந்துகள் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**போக்குவரத்து மேலாண்மைத் திட்டம்**

★ போக்குவரத்து மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாநகராட்சி / நகராட்சியிலும் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள

75% நகர் ஊரமைப்பு வாரிய நிதியிலிருந்து மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 25% தொகையினை உள்ளாட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளும். அதனடிப்படையில் இதுவரையில் 23 நகராட்சிகள் / மாநகராட்சிகளுக்கு ரூ.1,34,44,300 நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து உள்ளாட்சிகளுக்கு மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டில் தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திருமங்கலம் நகராட்சிகளுக்கு முறையே ரூ.5 இலட்சம், ரூ.15 இலட்சம் மற்றும் ரூ.8 இலட்சம் போக்குவரத்து மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ளது.

★ புராதன நகரங்களைப் பாதுகாக்கும் நோக்கில் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து, அதிகபட்சம் ரூ.50 இலட்சம் வீதம் அரசால் அறிவிப்பு செய்யப்பட்ட புராதன நகரங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

★ புராதன நகர மேம்பாட்டுக்காக நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை ரூ.514.97 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**புதிய மண்டல அலுவலகங்கள் தோற்றுவித்தல்**

★ அரசாணை எண் 411, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, நாள் 24.12.2007–இன்படி திருச்சி மண்டல அலுவலகம் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 3 மண்டல அலுவலகங்களாகவும், வேலூர் மண்டல அலுவலகமானது தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய 2 மண்டல அலுவலகங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் புதிய மண்டலங்களாக இயங்கி வருகிறது.

★ 13.05.2006 முதல் 31.03.2010 வரை இத்துறையில் 112 பேர் பணி அமர்த்தப்பட்டுள்ளனர் .

★ பல்வேறு நகரங்களின் வளர்ச்சி மற்றும் மக்கள்தொகை அடிப்படையில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் தேவையான நிதி ஆதாரங்களை அளிக்க உள்கட்டமைப்பு வசதி கட்டணம் வசூலித்திட நகர் ஊரமைப்புச் சட்டத்தின்படி உரிய விதிகளின் கீழ் வசூலிக்க ஜூலை 2007 முதல் அரசு அனுமதித்துள்ளது.

★ அதன்படி டிசம்பர் 2009 வரை, 186 கோடி ரூபாய் உள்கட்டமைப்பு வசதிகள் கட்டணமாக இத்துறையில் வசூலிக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தால் டிசம்பர் 2009 வரை ரூ.340 கோடி உட்கட்டமைப்பு வசதிக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 25.11.2009ஆம் நாளிட்ட அரசாணையின்படி நிதிக்கணக்கு பராமரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தனி வைப்பு நிதிக் கணக்கில் வைப்பு வைக்கப்பட்டிருந்த நகர் ஊரமைப்புத் துறை மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுவின் தொகைகளை அரசுக் கணக்குத் தலைப்பில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புத் துறை மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மொத்தம் ரூ.562.00 கோடி 31.3.2010 வரை வசூலிக்கப்பட்டுள்ளது.

★ நகர் ஊரமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்ய அரசு முடிவெடுத்து, அதற்காக நீதியரசர் திரு.எஸ்.மோகன்(ஓய்வு) அவர்கள் தலைமையில் மறுஆய்வு செய்ய ஒரு குழு 1.6.2009இல் நியமிக்கப்பட்டு மறுஆய்வுப்பணி நடைபெற்று வருகிறது.

**கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம்**

★ தமிழக அரசின் 2008–2009ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி நகர்ப்புர மற்றும் வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிடமிருந்து வீடு கட்டுவதற்கு கடன் பெற்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் உள்ள சிரமங்களைக் குறைப்பதற்காகவும் 31.3.2008இல் இருந்த நிலுவைக்கடன் நிலுவைத் தொகைகளை வசூலித்திடவும் பல சலுகைகள் 20.5.2008இல் வழங்கப்பட்டன.

★ அவை, பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளியோர் (Economically Weaker Section) ரூ.25,000 வரை கடன் பெற்று திருப்பிச் செலுத்த இயலாமல் நிலுவையில் உள்ள கடன் தொகை முழுவதும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ ரூ.25,000க்கு மேல் ரூ.1,00,000 வரை கடன் பெற்றவர்கள் நிலுவையிலுள்ள கடனைத் திருப்பிச் செலுத்தும் போது அவர்களுக்கு அபராத வட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டதோடு, வட்டியிலும் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்பட்டது.

★ ரூ.1,00,000க்கு மேல் ரூ.2,00,000 வரை கடன் பெற்றவர்கள் நிலுவையிலுள்ள கடனைத் திருப்பிச் செலுத்தும் போது அவர்களுக்கு அபராத வட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டதோடு, வட்டியிலும் 25 விழுக்காடு தள்ளுபடி செய்யப்பட்டது.

★ ரூ.2,00,000க்கு மேல் ரூ.7,00,000 வரை கடன் பெற்றவர்கள் நிலுவையிலுள்ள கடனை திருப்பிச் செலுத்த முன்வந்தவர்களுக்கும், அபராத வட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டதோடு, வட்டியிலும் 10 விழுக்காடு தள்ளுபடி செய்யப்பட்டது.

★ இச்சலுகைத் திட்டத்தின் கீழ் 31.03.2008 தேதியில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரின் கடன் நிலுவை ரூ.683 கோடி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் 4,40,419 பேர் பயனடைந்துள்ளனர். மேலும், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் மொத்தம் 34,527 பேர் பயனடைந்துள்ளனர். அவர்களிடமிருந்து மொத்தம் ரூ.182.71 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

★ 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை ரூ.228.15 கோடி மதிப்பீட்டில் 12,733 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ★



# உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
**திரு. என்.சுரேஷ்ராஜன்** அவர்கள்

★ தமிழகத்திற்குச் சுற்றுலாப் பயணிகள் வருகை 2005ஆம் ஆண்டில் 7.7 சதவீதமாக இருந்தது. புதிய அரசு பொறுப்பேற்று சுற்றுலாத் திட்டங்களைத் தீவிரமாக செயல்படுத்தி நவீன விளம்பர நடவடிக்கைகளால் 2006ஆம் ஆண்டில் 21 சதவீதமாக அதிகரித்தது. வருகை 2007ஆம் ஆண்டில் 29.2 சதவீதமாகவும், 2008இல் 23.4 சதவீதமாகவும், 2009ஆம் ஆண்டில் 24.3 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.

★ தமிழகத்தில் சுற்றுலாத் திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ததால் 2004இல் ரூ.31.29 கோடி என்பதை 2008–2009இல் ரூ.62.09 கோடியாகவும், 2009–2010இல் ரூ.65.54 கோடியாகவும் தமிழகச் சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தியதால் தமிழகம் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகையில் 3ஆம் இடத்தையும், உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகையில் 3ஆம் இடத்தையும் வகிக்கிறது.

★ பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்திட முடிவு செய்து மைய அரசு நிதி உதவித் திட்டத்தில் 2006–2007ஆம் ஆண்டு ரூ.1,841.41 இலட்சம், 2007–2008ஆம் ஆண்டு ரூ.2,748.91 இலட்சம், 2008–2009ஆம் ஆண்டு ரூ.2,270.00 இலட்சம், 2009–2010ஆம் ஆண்டில் பல்வேறு சுற்றுலா இடங்களை மேம்படுத்தவும், அடிப்படை வசதிகளைப் பெருக்கிடவும், ரூ.2,516 இலட்சத்திற்கான ஒப்பளிக்கப்பட்ட சுற்றுலாத் திட்டங்களில் முதல்கட்டமாக ரூ.2,351.88 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

★ மாநில அரசு நிதியில் 2006–2007ஆம் ஆண்டில் ரூ.1,206.18 இலட்சம், 2007–2008ஆம் ஆண்டில் ரூ.1,212.14 இலட்சம், 2008–2009ஆம் ஆண்டு ரூ.1,557.47 இலட்சம், 2009–2010ஆம் ஆண்டில் பல்வேறு வகையான சுற்றுலா இடங்களுக்கான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடும் திட்டங்களுக்கு மாநில அரசு ரூ.11.45 கோடி ஒப்பளிப்பு செய்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ 2009–2010 நிதியாண்டில் பல்வேறு சுற்றுலா இடங்களை இணைக்கும் சாலை வசதியை மேம்படுத்த மாநில அரசு மூலம் ரூ.1,013.85 இலட்சம் நிதியுதவி சுற்றுலாத்துறை பெற்றுள்ளது.

★ 2009 சீனாவில் ஹாங் செள–ல் நடைபெற்ற படா (PATA) மாநாட்டில் மாமல்லபுரத்தின் பாரம்பரிய மதிப்பு குறித்து, 'சிறந்த படைப்பு' மற்றும் விளம்பரத்திற்காக 'பாடா தங்க விருது' என்ற பன்னாட்டு விருதினை தமிழ்நாடு சுற்றுலா வென்றுள்ளது.

★ கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைப் பகுதியைச் சுற்றிலும் கூடுதல் வசதிகள் ரூ.39 இலட்சத்தில் செய்யப்பட்டு பணிகள் நிறைவுற்று பயன்பாட்டில் உள்ளன.

★ மேதகு ஆளுநர் அவர்கள் 24.5.2006 அன்று, சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி தமிழ்நாட்டில் சுற்றுலாப் பெருந்திட்டம் தயாரிக்கும் பணி ஹட்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு சுற்றுலாப் பெருந்திட்டத்திற்கான அறிக்கை ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

★ மேதகு ஆளுநர் அவர்கள் 24.5.2006 அன்று, சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச் சென்று வருவதற்கு புதிய கப்பல்கள் வாங்கப்பட்டு கன்னியாகுமரி பூம்புகார் கப்பல் போக்குவரத்து நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன.

★ சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் மூலம் 400 படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளித்த ஆணையின்படி 236 நபர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் விளம்பர முகாம்களில் காண்பிக்கும் வகையில் குறும்படம் ஒன்று தயாரிக்கப்படும். பணிகள் முடிவுற்று சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப் படுகிறது.

★ சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.498.20 இலட்சத்தில் பிச்சாவரம், முத்துப்பேட்டை, கோடியக்கரை, எலகிரி, பழவேற்காடு போன்ற இடங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ 23.7.2006 அன்று தொடங்கப்பட்ட 'விருந்தினர் போற்றுதும் விருந்தினர் போற்றுதும்' விளம்பர முகாம்

தொடர்ந்து சென்னை, மாமல்லபுரம், காஞ்சிபுரம், வேலூர், மதுரை, தேனி, கோவை, கன்னியாகுமரி, கடலூர், விழுப்புரம், தருமபுரி, உதகமண்டலம், கொடைக்கானல், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர் போன்ற நகரங்களில் சிறப்புற நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

★ சுற்றுலாப் பயணிகள், சொகுசு வசதிகள் நிறைந்த "வால்வோ" பேருந்துகளையே அதிகம் விரும்புவதால், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் "வால்வோ" பேருந்துகள் ரூ.61.25 இலட்சத்தில் வாங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது.

★ தமிழ்நாட்டில், சுற்றுலாத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளை விளக்கும் வகையில் சுற்றுலாக் கொள்கை (Tourism Policy) ஒன்று வகுக்கப்படும்.

★ தமிழ்நாடு அரசு 48 இடங்களை பாரம்பரிய நகரங்கள் என அறிவித்து அதில் 19 இடங்களின் மேம்பாட்டிற்கு ரூ. 823.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ தஞ்சாவூரில், மாமன்னன் இராஜராஜ சோழனின் சிறப்புக்களை எடுத்துக்கூறும் வகையில் தஞ்சை பெரிய கோயிலில் ரூ.150 இலட்சம் செலவில் ஒலி–ஒளிக் காட்சிக்கான பணிகள் தொடங்கப்பட உள்ளன.

★ தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் மருத்துவத் தகவல் மையம் (Medical Desk) ஒன்று கடந்த 22.9.2007 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சென்னை, மதுரை நகரங்களில் உள்ள முக்கிய மருத்துவமனைகளில் சுற்றுலாத் தகவல் மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ சுற்றுச்சூழல் சுற்றுலா (Eco Tourism) வை மேம்படுத்தும் நோக்கில், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் சுற்றுச் சூழல் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ ஆண்டுதோறும் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் நம் சுற்றுலா வளத்தைச் சுட்டிக் காட்டும் வகையில் வண்ணப் புகைப்படங்களுடன் நாட்காட்டி 2007 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

★ சுற்றுலாத்துறை, சுற்றுலாச் செய்தி (News Letter) மடலை காலாண்டு இதழாக 29.3.2007 அன்று முதல் தொடர்ச்சியாக வெளியிட்டு கொண்டிருக்கிறது. அதன் மூலம் நம் மாநில சுற்றுலா மேம்பாடுகளைப் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

★ தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழ்ப் பண்பாட்டையும், இலக்கியத்தையும் பெரிதும் கண்டுகளிக்கும் பொருட்டு சென்னையில், தனியார்கள் ஒத்துழைப்புடன் 'பண்பாட்டுப் பெருவிழா' நடத்தப்பட்டும், சுற்றுலாத் துறையின் ஒத்துழைப்போடு சென்னை சங்கமம் 2007–2008 முதல் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

★ சுற்றுலா வளர்ச்சிக் கருதி, புதிய சுற்றுலாத் தலங்களில் மக்களைக் கவரும் விதத்தில் தொடங்கப்படும் ஓட்டல், பொழுதுபோக்குப் பூங்கா, படகுத்துறை போன்ற சுற்றுலாத் திட்டங்களுக்கு (Tourism Projects) மொத்த முதலீட்டில் 10 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். மானியத்தொகை அதிகபட்சமாக ஒரு கோடி ரூபாய் வரை அளிக்கப்படும். முதல் ஐந்தாண்டு காலத்திற்கு செலுத்தும் விற்பனை வரிக்கு மென்கடன் அளிக்கவும், அந்தக் கடனை அடுத்த ஐந்தாண்டுகளில் 0.1 வட்டி விகிதத்தில் திருப்பி செலுத்தவும் புதிய கொள்கை உருவாக்கப்படும்.

★ பாரம்பரிய ஓட்டல்களை நிர்மாணிப்பதற்கும், பாரம்பரிய கட்டடங்களை ஓட்டல்களாக மாற்றியமைப்பதற்கும், பாரம்பரிய கட்டடங்களை பாரம்பரிய ஓட்டல்களாக மாற்றியமைக்க தேவைப்படும் மொத்த முதலீட்டில் 10 சதவிகிதத்தை திட்டம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.100 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

★ மலேசியா மற்றும் தென் ஆப்பிரிக்க சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க நவக்கிரக ஆலயங்கள், அறுபடை வீடுகள் பற்றிய குறும்படம் தயாரிக்கப்பட்டு விளம்பர முகாம்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

★ சமண ஆலயங்கள் பற்றிய கையேடு வெளியிடப்பட்டு பிற மாநிலங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படுகிறது.

★ மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை வளாகத்தில் தடையில்லா மின்வசதியை அளிப்பதற்காக 250 KVA ஜெனரேட்டர் ஒன்று ரூ.18 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு உள்ளது.

★ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை வளாகத்தில் 37 குடில்களை ரூ.180 இலட்சம் செலவில் புதுப்பித்தும், ரூ.200 இலட்சம் செலவில் 20 சிக்கனக் குடில்களைப் புதுப்பித்தும், மேலும் கூடுதலாக 20 புதியக் குடில்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் முட்டுக்காட்டில் நடத்தப்பட்டு வரும் படகுக் குழாமில் போதுமான அளவு வாகன நிறுத்துமிட வசதிகளுடன் கூடிய மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.45 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

★ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியமான ஓட்டல்களுக்கு 1,066 லேடெக்ஸ்,

பின்கோர் வகை மெத்தைகள் ரூ.59 இலட்சத்திற்கு வாங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது.

★ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தால் நடத்தப்படுகின்ற படகு இல்லங்களின் பயன்பாட்டிற்காக 55 புதிய படகுகள் ரூ.30 இலட்சத்தில் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

★ உதகமண்டலத்தில் உள்ள ஒட்டல் தமிழ்நாடு ரூ.31 இலட்சம் செலவில் மின் தூக்கி அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

★ தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களை ஒரே இடத்தில் கண்டு களிக்கும் வகையில் கையளவு தமிழகம் (Miniature Tamil Nadu) ஒன்று உருவாக்கப்படும் திட்டத்தினை செயல்படுத்த அதற்கான நிலம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல் வடிவம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலாத் தகவல் மையங்களான மாமல்லபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி இரயில் நிலையம், மதுரை ரெயில் நிலையம், திருவனந்தபுரம் ஆகிய இடங்களுக்கு ரூ.30 இலட்சம் செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ சுற்றுலா இயக்ககம் மற்றும் சுற்றுலா அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக புதிய கணினி, துணை சாதனங்கள் மற்றும் நிகரி இயந்திரம் ரூ.8.20 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது.

★ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 10 மடிக்கணினிகள் ரூ.3.50 இலட்சத்தில் வாங்கப்பட்டு சுற்றுலா ஆணையரகம் மற்றும் சுற்றுலா அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

★ துல்லிய நிழற்படக் கருவிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வாங்கப்பட்டு சுற்றுலா அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

★ சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா வழிகாட்டும் தகவல் பலகைகள் மற்றும் ஒளிரும் பலகைள் ரூ.100.01 இலட்சத்தில் நிறுவப்படும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

★ ஒய்வு பெற்ற விருப்பம் உள்ள அரசு ஊழியர்கள் / ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களை அந்த ஊரின் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகளாகச் செயல்பட 14 நபர்களுக்கு அண்ணா மேலாண்மை நிறுவனம் மூலம் ஐந்து நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டுவிட்டது.

★ வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், செட்டிநாடு ஆகிய நான்கு இடங்களில் புதிய சுற்றுலா அலுவலகங்கள் ரூ.36 இலட்சத்தில் திறக்கப்பட்டு, சுற்றுலா அலுவலர்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

★ மே, ஆகஸ்ட், அக்டோபர் திங்கள்களில் கூடுதலாகப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

★ சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் பெரிதும் பயன் பெறும் வகையில் சென்னை மாநகரில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை தோறும் மாநகரில் உள்ள பூங்காக்களில் ஏதாவது ஒன்றில் ‘பூங்காவில் பூங்காற்று’ என்ற தலைப்பில் இசைநிகழ்ச்சிகளும், கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகிறது.

★ தங்கும் விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த தங்க அட்டைகள் மற்றும் பிளாட்டினம் அட்டைகள் online (கணினி) மூலம் பெறும் திட்டம் 17.2.2010 அன்று துவங்கப்பட்டது.

★ இரயில் மற்றும் சாலை சுற்றுலாப் பயணத் திட்டம் ஆந்திர மாநிலம் ஐதராபாத்திலிருந்தும் தொடங்கப்பட்டுள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் சுற்றுலாத்துறையில் உள்ள பல்வேறு பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகவும், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும், கருணை அடிப்படை வாயிலாக சுமார் 16 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை குளிர்சாதனப் பேருந்துகளில் எங்கும் ஏறி, எங்கும் இறங்கும் வசதியுடைய புதுமையான சுற்றுலாத்திட்டம் தொடங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

★ அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர, தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைத்து சிறந்த பயணத்திட்டத்தை இணையதளத்திலும் குறுந்தட்டுகளிலும் சுற்றுலாத்தலத்தை நேரில் காண்கின்ற சிந்தனையை சுற்றுலாப்பயணிகள் பெறக்கூடிய வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் துவங்கி செயல்படுத்தி வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழில் வலைதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ சுற்றுலாத் துறை தனியார் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டில் கலை மற்றும் பண்பாட்டைச் சித்தரிக்கும் வகையில் சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கிய ஓவியங்கள் தீட்டப்பட்டு “தூரிகையில் தமிழகம்” என்ற அழகிய ‘காபி மேசை புத்தகம்’ தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் ஜெர்மானிய மொழிகளில் அவற்றிலுள்ள ஓவியங்கள் குறித்த சிறு தகவல்களுடனும், தமிழ்நாட்டில் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் வெளியிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டிற்கு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அகமதாபாத், மும்பை, சண்டிகார், புதுதில்லி, கொல்கத்தா, ஜெய்ப்பூர், பெங்களூரு, லக்னோ, ஹைதராபாத், ஆக்ரா ஆகிய இடங்களில் விளம்பர முகாம்கள் சிறப்பாக நடத்தப்பட்டன.

★ வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க கடந்த நான்கு ஆண்டுகளில், உலக வர்த்தக மாநாடு (WTM) லண்டன், ITB பெர்லின், பசிபிக் ஆசிய பயணக் கருத்தரங்கு (PATA) இந்தோனேசியா, ஹைதராபாத் (இந்தியா), ஹிலாங்சூ (சீனா), SAARC வர்த்தகப் பயண சந்தை, பூடான் ஆகிய பன்னாட்டு பயணச் சந்தைகளில் சுற்றுலாத்துறை கலந்து கொண்டது.

★ மாமல்லபுரம் நாட்டிய விழா – இந்திய நாட்டிய விழாவாகப் புதுப்பொலிவுடன் மிகச்சிறப்புடன் மாமல்லபுரத்தில் ஒரு மாதத்திற்கு நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்று சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## கலை பண்பாட்டுத்துறை

### 2006–2007 திட்டத்தின் விவரம்

★ மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் ரூ.20 இலட்சம் செலவில் நூலகம் மற்றும் கணினிமையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டது.

★ சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியில் சுவரோவியங்கள் வரைய ரூ.10 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டது.

★ தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் ரூ.3.50 இலட்சம் செலவில் தோற்பாவைக் கூத்து, பொம்மலாட்டம் ஆகிய கலைகள் ஊக்குவிக்கப்பட்டன.

★ 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கும், நான்கு அரசு இசைக்கல்லூரிகளுக்கும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ரூ.8.10 இலட்சம் செலவில் பரதநாட்டிய அணிகலன்கள் வாங்கப்பட்டன.

★ அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களுக்கும் ரூ.5 இலட்சம் செலவில் பயிற்சிப் பொருட்கள் வாங்கப்பட்டன.

★ 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளிலும் ரூ.52.70 இலட்சம் செலவில் வயலின், மிருதங்கம் பிரிவுகள் புதியதாகத் தொடங்கப்பட்டன.

★ தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்திற்கு ரூ.15 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது.

### 2007–2008 திட்டத்தின் விவரம்

★ மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியால் ரூ.87 இலட்சம் செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு செம்மொழி சிற்பப்பூங்கா என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டது.

★ கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு புதிதாக தமிழ் வளர்ச்சி வளாகத்தில் இரண்டாம் தளம் கட்டப்பெற ரூ.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

★ மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு ரூ.5 இலட்சம் செலவில் மரத்தளவாடங்கள் வாங்கப்பட்டன.

★ கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டிற்கு ரூ.2 இலட்சம் செலவில் புகைப்பட துணைக் கருவிகள் வாங்கப்பட்டன.

★ சென்னை, அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் உள்ள தாகூர் கலையரங்கில் ரூ.5 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்பட்டது.

### 2008–2009 திட்டத்தின் விவரம்

★ மாவட்ட அரசு இசைப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ரூ.5 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் மூலம் ரூ.4 இலட்சம் செலவில் புதுப்பாணி ஓவியக் கலைஞர்கள் முகாம் நடத்தப்பட்டது.

★ சவகர் சிறுவர் மன்றம் மூலம் ரூ.4 இலட்சம் செலவில் மாவட்டந்தோறும், மாநில அளவிலும் கலைப்போட்டிகள் நடத்தப்பட்டன.

★ தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் மூலம் ரூ.2 இலட்சம் செலவில் குடிசை மற்றும் தெருவோரச் சிறார்களுக்கு கைவினைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மூலம் ரூ.4 இலட்சம் செலவில் கிராமங்கள்தோறும் கலை விழாக்கள் நடத்தப்பட்டன.

★ சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளுக்கு ரூ.5 இலட்சம் செலவில் இசைக்கருவிகள் வாங்கப்பட்டன.

★ சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளுக்கு ரூ.3.15 இலட்சம் செலவில் கணினிகள், கணினி அச்சுகள் மற்றும் துணைபாகங்கள் வாங்கப்பட்டன.

★ சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியின் பழமைமிக்க கட்டடங்களைப் புதுப்பிக்க ரூ.100 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

**2009–2010 திட்டத்தின் விவரம்**

★ கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியில் கலைக்கூடம், அருங்காட்சியகத்திற்கு ரூ.50 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

★ சென்னை, கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலைப் பிரிவில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு ரூ.3.50 இலட்சம் செலவில் காஸ்ட்டிம்ஸ் பௌண்டரி அமைக்கப்பட்டன. ரூ.7.45 இலட்சம் செலவில் ஓவியம் மற்றும் சிற்பம் வரைவதற்கு வரைவு மேசைகள், நாற்காலிகள் வாங்கப்பட்டன. ரூ.2.25 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

★ சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியின் சுடுமண் பிரிவிற்கு சூட்டடுப்பு (Kiln) வாங்கப்பெற ரூ.6.65 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

★ சென்னை, அரசு இசைக்கல்லூரி நூலகப் பயன்பாட்டிற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவில் பீரோக்கள், நீண்ட மேசைகள், பெஞ்சுகள் உள்ளிட்ட மரத்தளவாடங்கள் வாங்கப்பட்டன.

★ கலை பண்பாட்டு இயக்ககப் பயன்பாட்டிற்கு ரூ.3.50 இலட்சம் செலவில் கணினிகள், கணினி அச்சுகள் வாங்கப்பட்டன.

★ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் மறைந்த கலைஞர்களின் வரலாற்றைத் தொகுத்து நூலாக வெளியிட ரூ.2 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

★ மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கலைக்கண்காட்சி நடத்தப்பட்டது.

★ தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழுவின் மூலம் மரபுவழி, நவீன கலைப்பிரிவினைச் சார்ந்த புகழ் பெற்ற ஓவிய சிற்பக்கலை வல்லுநர்கள் அவரவர்கள் துறையில் புரிந்து வரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் கலைச்செம்மல் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் இதுவரை 12 கலைஞர்களுக்கு கலைச்செம்மல் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

★ கலைத்துறையில், செயற்கரிய சேவை செய்து புகழ் பெற்ற கலைஞர்களைப் பாராட்டி சிறப்புச் செய்யும் பொருட்டு அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் 128 கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

★ கலை பண்பாட்டுத்துறைக்கு, அதன் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி 2006–2007ஆம் ஆண்டு ரூ.16 கோடியே 27 இலட்சத்து 75 ஆயிரமும், 2007–2008ஆம் ஆண்டு ரூ. 20 கோடியே 38 இலட்சத்து 97 ஆயிரமும், 2008–2009ஆம் ஆண்டு ரூ. 22 கோடியே 48 இலட்சத்து 67 ஆயிரமும், 2009–2010ஆம் ஆண்டு ரூ.23 கோடியே 98 இலட்சத்து 95 ஆயிரமும், 2010–2011 ஆம் ஆண்டு ரூ.27 கோடியே 98 இலட்சத்து 44 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நலிந்த நிலையில் வாழும் வயோதிகக் கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் நலிந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் வழங்கப்பட்டுவரும் நிதியுதவித் தொகை ரூ.500லிருந்து ரூ.1,000ஆக 2006ஆம் நிதியாண்டிலிருந்து வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஊதிய விகிதத்தில் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக 6,474 நலிந்த கலைஞர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

★ தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் மூலம் 2,381 பயனாளிகளுக்கு ரூ.32.09 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

★ காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பெற ரூ.92.92 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ திருச்சிராப்பள்ளி மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பெற ரூ.96 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

★ சென்னை, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் நடுவண் அரசின் நிதி உதவியோடு ரூ.368.08 இலட்சம் செலவில் திறந்தவெளிக் கலையரங்கம் அமைக்கப்பட உள்ளது. முதற்கட்டமாக ரூ.294.46 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரி வளாகத்தில் அருங்காட்சியகக் கலைக்கூடம் கட்டடப்பட ரூ.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்விக் கோட்டம், தஞ்சாவூர் அவர்களால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியின் தொன்மையான கட்டடங்களைப் புதுப்பிக்க ரூ.100 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ சென்னை, அரசு இசைக்கல்லூரியின் தொன்மையான கட்டடங்கள் ரூ.33 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டன.

★ சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியின் சிற்பக்கலை மற்றும் பதிப்போவியக் கலைப் பிரிவின் தொன்மையான கட்டடங்களைப் பழுதுபார்க்க ரூ.88 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

★ மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் ரூ.20 இலட்சம் செலவில் நூலகம் மற்றும் கணினி மையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டது.

★ சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியில் சுவரோவியங்கள் வரைய ரூ.10 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டது.

**அரசு அருங்காட்சியகத் துறை**

★ 2006–2007 பகுதி–II திட்டத்தின் கீழ் 20 மாவட்ட அருங்காட்சியகங்களுக்கு ரூ.8.10 இலட்சம் செலவீனத்தில் தொலைபேசி வசதி, இணையதள வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உள்ளது.

★ சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள வெளியீடுகளில் இருப்பில் இல்லாத பழைய வெளியீடுகள் மற்றும் புதிய வெளியீடுகள் ரூ.5 இலட்சம் செலவில் பொதுமக்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பயன்பெறும் வகையில் அச்சிடப்பட்டுள்ளது. சென்னை அரசு அருங்காட்சியக மானிடவியல் காட்சிக்கூடங்கள் சீரமைப்புப் பணி மற்றும் புதிய காட்சிப்பெட்டிகள் அமைக்கும் பணிகள் ரூ.100 இலட்சம் (ரூபாய் நூறு இலட்சம் செலவில்) மாநில அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு முதல்கட்டப் பணிகள் முடிவுற்று, இரண்டாம் கட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

★ ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்ட அரசு அருங்காட்சியகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ரூ.80 இலட்சத்திற்கு நிதி பெறப்பட்டுள்ளது. புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் ஒலி, ஒளி அறை கட்டும் பணி, பறவைகள் கூடத்தின் காரை, செங்கல் கூரையை மாற்றி ஆர்.சி.சி.யாக அமைத்தல், முதுகெலும்புள்ள பிராணிகள் கூடத்தினை மேம்படுத்தல் ஆகிய பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும் பாதுகாப்புக் கருதி உள்சுற்று தொலைக்காட்சி அமைக்கும் பணியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவடைந்ததும் புதுக்கோட்டை அருங்காட்சியகத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட உள்ளது.

★ "அருங்காட்சியகத்தை அறிந்து கொள்ளுங்கள்" என்ற தலைப்பில் பணிப்பட்டறை சென்னையிலுள்ள பள்ளி ஆசிரியர்களுக்கு 27.09.2007 அன்று உலகச் சுற்றுலா தினத்தை ஒட்டி நடத்தப்பட்டது.

★ 14.11.2007 அன்று சிறுவர் தினத்தை ஒட்டி பள்ளி மாணவ, மாணவியருக்கு ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டி, பொம்மலாட்டம், சிறுவர் படக்காட்சி ஆகிய நிகழ்வுகள் நடத்தப்பட்டு போட்டிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

★ ஒருநாள் பணிப் பட்டறை "இந்திய நாணயங்கள்" என்ற தலைப்பில் 22.11.2007 அன்று பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு சீரிய முறையில் நடத்தப்பட்டது.

★ "உயிரினங்களைப் பதப்படுத்துதல்" என்ற செயல்முறை விளக்கப் பயிற்சி சென்னை பாரதி மகளிர் கல்லூரி விலங்கியல் பிரிவு மாணவிகளுக்கு 19.11.2007 முதல் 03.12.2007 வரை நடத்தப்பட்டது.

★ "தமிழக சுடுமண் கலைப் பொருட்கள்" என்ற தலைப்பில் பேராசிரியர் பாலகிருஷ்ணன் நாயர் நினைவுச் சொற்பொழிவில் பேராசிரியர் ப. சண்முகம், ஓய்வு பெற்ற பேராசிரியர், தொல்பொருள் மற்றும் பண்டைய இந்தியா பிரிவு, சென்னை பல்கலைக்கழகம் அவர்களால் 05.12.2007 அன்று மாணவ, மாணவியருக்கு நிகழ்த்தப்பட்டது.

★ தேசிய இயற்கை அறிவியல் அருங்காட்சியகம், மைசூர் மற்றும் சென்னை அரசு அருங்காட்சியகமும் இணைந்து 03.12.2007 முதல் 07.12.2007 வரை உலக ஊனமுற்றோர் தினத்தை ஒட்டி மாற்றுத் திறனாளிகளின் வகைபாட்டில் வரும் குழந்தைகளுக்கு ஓவியப் போட்டிகள், விநாடி வினா போட்டிகள் மற்றும் களிமண் உருவங்கள் செய்தல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

★ இந்திய – ஜப்பான் கலாச்சார உறவு குறித்த புகைப்படக் கண்காட்சி சென்னை அருங்காட்சியக வளர்கலைக் கூடத்தில் 08.01.2008 முதல் 13.01.2008 வரை நடைபெற்றது.

★ சென்னை அருங்காட்சியக நூற்றாண்டு விழா கண்காட்சிக் கூடத்தில் "பவளங்கள்" தொடர்பான கண்காட்சி கடந்த 23.01.2008 அன்று நடைபெற்றது.

★ உலக மகளிர் அறக்கட்டளை சொற்பொழிவாக "படிமங்களின் ரேகை பதிவு செய்தல்" என்ற தலைப்பில் சென்னை அருங்காட்சியகத்தில் 30.01.2008 அன்று சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது.

★ இந்திய தொல்லியல் துறையுடன் இணைந்து "தமிழகத்தின் பாரம்பரிய நினைவுச் சின்னங்கள்" என்ற தலைப்பில் சிறப்புக் கண்காட்சி சென்னை அருங்காட்சியகத்தில் நூற்றாண்டு கண்காட்சிக்கூடத்தில் 04.02.2008 முதல் 10.02.2008 வரை நடத்தப்பட்டது.

★ சென்னை கிருத்துவக் கல்லூரி பேராசிரியர் முனைவர் நரசிம்மன் அவர்கள் "உயிரின

வேற்றுமையும் அறிவுசார் உரிமைகளும்" என்பது குறித்து 27.02.2008 அன்று சொற்பொழிவாற்றினார்.

★ பிராந்திய கலா மேளா கண்காட்சியானது, லலித்கலா அகாதமியுடன் இணைந்து சென்னை அருங்காட்சியக வளாகத்தில் மார்ச் 14 முதல் 20, 2008 வரை நடத்தப்பட்டது.

★ உலக வன தினத்தையொட்டி சென்னை அருங்காட்சியகத்தின் நூற்றாண்டு கண்காட்சிக் கூடத்தில், ஓவியர் ஜெயசிற்பி அவர்களின் ஓவியங்கள் 24.03.2008 முதல் 30.03.2008 வரை பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிக்கு வைக்கப்பட்டன.

★ "உலக அருங்காட்சியக தினம்" சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 18.05.2008 அன்று நடத்தப்பட்டது. பள்ளி மாணவ, மாணவியருக்கு நூற்றாண்டுக் கண்காட்சிக்கூடத்தில் ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல் மற்றும் கைவினைப் பயிற்சி ஆகியவை 19.05.2008 முதல் 23.05.2008 வரை 5 நாட்கள் நடைபெற்றது. நிறைவு நாள் அன்று போட்டி வைத்து வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. அன்றைய தினம் திரு. சீதாபதி அவர்களால் வழங்கப்பட்ட தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களின் தமிழில் கையொப்பம் இடப்பட்ட ஆவணத்தை அருங்காட்சியகத்துறைக்காக சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை அரசுச் செயலாளர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

★ சென்னை அருங்காட்சியக நூற்றாண்டுக் கண்காட்சிக் கூடத்தில் உலக வன விலங்கு வாரத்தை முன்னிட்டு, "இந்திய வன விலங்குகள்" என்ற தலைப்பில் ஒளிப்படக் கண்காட்சி ஒன்று 03.10.2008 முதல் 09.10.2008 வரை நடத்தப்பட்டது.

★ சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களில் சிறுவர் தினவிழா நடைபெற்றன. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 13.11.2008 அன்று எல்.கே.ஜி. முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணவியருக்கு ஓவியப்போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளும், கண்காட்சியும் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

★ 21.11.2008 முதல் 08.12.2008 வரை சென்னை பாரதி மகளிர் கல்லூரி, விலங்கியல் பயிலும் மாணவிகளுக்கு "இயற்கைப் பாதுகாப்பு மற்றும் விலங்கினைப் பதப்படுத்தும்" பயிற்சி சென்னை அருங்காட்சியக நூற்றாண்டுக் கண்காட்சிக் கூடத்தில் நடத்தப்பட்டது.

★ சென்னை அருங்காட்சியக நூற்றாண்டுக் கண்காட்சிக் கூடத்தில் "கடல் ஆமைகள்" என்ற கண்காட்சி 07.01.2009 முதல் 13.01.2009 வரை நடத்தப்பட்டது.

★ 18.04.2009 முதல் 02.05.2009 வரை "அருங்காட்சியக தினம்'' கொண்டாடப்பட்டது.

★ 18.05.2009 அன்று புத்தாக்கம் செய்யப்பட்ட நாணயவியல் காட்சிக்கூடம் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, அரசு செயலாளர் முனைவர் வெ. இறையன்பு,இ.ஆ.ப., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

★ 01.06.2009 முதல் 30.06.2009 வரை நடைபெற்ற "அரும்பொருட்களின் பாதுகாப்பு" என்ற பயிற்சியில் அனைத்திந்திய அளவில் 11 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

★ "மெல்லுடலிகள்'' என்ற தலைப்பில் 23.07.2009 முதல் 29.07.2009 வரை நூற்றாண்டுக் கண்காட்சிக் கூடத்தில் கண்காட்சி நடைபெற்றது.

★ 06.08.2009 முதல் 12.08.2009 வரை விஜயநகரப் பெருவேந்தர் கிருட்டிண தேவராயர் அரியணையேறு ஐநூறு ஆண்டுகள் நிறைவுற்றதையொட்டி, விஜயநகர கால நாணயங்களின் கண்காட்சியும், சிறப்பு சொற்பொழிவும் நூற்றாண்டுக் கண்காட்சிக்கூடத்தில் நடைபெற்றது.

★ 21.08.2009 முதல் 27.08.2009 வரை 'சென்னை தினத்'தினையொட்டி சிறப்புக் கண்காட்சி நிகழ்த்தப்பெற்றது.

★ 10.09.2009 அன்று "ஸ்ரீலங்காவில் ஆரம்பகால உலோகவியல் வளர்ச்சியால் அகன்ற ஆசிய தொழில்நுட்ப பரவும்'' என்ற தலைப்பில் அகில உலக மகளிர் அறக்கட்டளைச் சொற்பொழிவு அருங்காட்சியகக் கலையரங்கில் நடைபெற்றது,

★ 09.11.2009 முதல் 11.11.2009 வரை "தாவரங்களின் பாதுகாப்பும், மாதிரி செய்தலும்" என்ற தலைப்பில் நூற்றாண்டுக் கண்காட்சிக்கூடத்தில் பணிப்பட்டறை நடைபெற்றது.

★ 24.10.2009 முதல் 03.11.2009 வரை "செப்பேடுகள்" கண்காட்சி நூற்றாண்டுக் கண்காட்சிக்கூடத்தில் பள்ளிக் கல்வி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

★ 14.11.2009 அன்று "குழந்தைகள் தினத்தையொட்டி ஓவியப்போட்டிகள் மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

★ 20 மாவட்ட அருங்காட்சியகங்களில் திங்கள் சொற்பொழிவுகள், கண்காட்சிகள் மற்றும் குழந்தைகள் தினவிழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

★ 6.1.2010 அன்று ஸ்ரீ நாராயண குருவையா அறக்கட்டளைச் சொற்பொழிவு நடத்தப்பட்டது.

"சென்னையின் அரசியல் வரலாறு" என்ற தலைப்பில் சென்னை இலயோலா கல்லூரி வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் சுதாகர் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

★ 11.1.2010 அன்று ராவ் பகதூர் வெமுரு ரங்கநாதம் செட்டி அறக்கட்டளை சொற்பொழிவு நடத்தப்பட்டது. புகழ்வாய்ந்த "பஞ்சலோக படிமங்கள்; படிமங்கள் வாயிலாக சென்னை அருங்காட்சியகத்தின் நிறைவெய்திய நோக்குகள்" என்ற தலைப்பில் அமெரிக்காவைச் சேர்ந்த வேதியியல் துறை ஆய்வாளர் திருமதி. சஞ்சிதா பாலசந்திரன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

★ 02.02.2010 அன்று "பாம்புகள்" கண்காட்சி நடத்தப்பட்டது.

★ 23.02.2010 அன்று "கல்லில் காட்டப்படும் வெளிகல்பாடுகள்" கண்காட்சி நடத்தப்பட்டது. இந்தியப் புவியியல் பரப்பாய்வுத் துறை மேனாள் துணைத் தலைவர் முனைவர் ஆர். வாசுதேவன் சொற்பொழிவாற்றினார்.

★ 02.03.2010 அன்று சிறப்பு சொற்பொழிவு நடத்தப்பட்டது. "அருங்காட்சியகங்கள் நினைவுகள் – தேசிய அருங்காட்சியகம் மற்றும் அதன் சேகரிப்புகள்" என்ற தலைப்பில் அமெரிக்காவின் மியாமி பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் காப்பாட்சியர் முனைவர் எட்னா கார்டர் சவுத்ஹார்ட் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

★ 18.03.2010 அன்று "கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், வைகைநல்லூர் கிராமத்தில் கிடைக்கப் பெற்ற வெள்ளி முத்திரை நாணயங்கள்" கண்காட்சி நடத்தப்பட்டு முதன்மைச் செயலர்/ அருங்காட்சியங்களின் ஆணையர் அவர்களால் இத்தலைப்பில் சிறப்பு நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது.

★ 10.03.2010 அன்று "காளான்கள்" என்ற தலைப்பில் சிறப்புக் கண்காட்சி நடத்தப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத் தாவரவியல் மேம்பாட்டுக் கழகத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் சுப்ரமணியம் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

★ மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் ஆவணக் காப்பறை கட்டும் முதற்கட்டப் பணி ரூ.6.25 இலட்சத்திற்கு முடிவுற்றது.

★ பன்னிரெண்டாவது நிதிக்குழு நிதி உதவியுடன் மரபுரிமை வாய்ந்த தெற்கு மற்றும் மேற்கு சுற்றுப்புறச் சுவரை மேம்படுத்தும் பணி 2007–2008ஆம் ஆண்டு ரூ.77 இலட்சத்தில் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்றது.

★ பனிரெண்டாவது நிதிக்குழுவின் மானியம் ரூ.72 இலட்சம் பெறப்பட்டு சென்னை அருங்காட்சியகத்தில் உயர் மின்னழுத்த மின்மாற்று அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்றது. மேலும் 2009–2010 நிதியாண்டில் ரூ.183 இலட்சத்திற்கு நிதி பெறப்பட்டு கட்டட மற்றும் மின் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்துப் பணிகளும் முடிவுறும் தருவாயில் உள்ளன.

**தொல்லியல் துறை**

★ 2006–2007ஆம் ஆண்டு ரூ. 31.05 இலட்சம், 2007–2008 ஆம் ஆண்டு ரூ. 38.15 இலட்சம் மற்றும் 2008–2009ஆம் ஆண்டு ரூ. 37.15 இலட்சம் மற்றும் 2009–2010ஆம் ஆண்டு ரூ. 25.30 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்கள் ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ பகுதி–II திட்டம் வாயிலாக அரசின் ஒப்புதல் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் மூன்றாண்டு கல்வெட்டு சிறப்புத் திட்டம் வாயிலாக, இத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்று வேலையில்லாத மாணவர்கள் நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, நபர் ஒருவருக்கு மாதம் ரூ.5,000 ஒட்டு மொத்த ஊதியம் வழங்கப்படுகிறது.

★ 13.5.2006 முதல் 313.2010 முடிய 36 புதிய நியமனங்கள் செய்யப்பட்டு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

★ ★ ★



# நவீன முறையில் ஆவணப் பதிவுகள்

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
திரு. என்.சுரேஷ்ராஜன் அவர்கள்

★ பொதுமக்களுக்கு சேவை செய்வதை குறிக்கோளாகக் கொண்டுள்ள இத்துறை கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.15,557.65 கோடி வருவாய் ஈட்டி தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றிட உறுதுணையாகவும் உள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் 1.07 கோடி ஆவணங்களைப் பதிவு செய்து அதன் வழி ஏறத்தாழ 3.50 கோடி பொதுமக்களுக்கு துறை சேவை செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இத்துறையின் மூலம் ஏறத்தாழ 1 கோடி மக்கள் ஆவணங்கள் பதிவு மற்றும் பதிவுத்துறையின் இதர சேவைகளால் பயன்பெறுகின்றனர்.

★ தமிழ்நாட்டில் உள்ள 573 சார்பதிவகங்களில் 324 அரசுக் கட்டடத்திலும், 249 தனியார் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் 35 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.7.25 கோடி மதிப்பில் புதிய அரசுக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 6 இடங்களில் ரூ.9.57 கோடி மதிப்பில் பதிவுத்துறை வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

★ 2006–07ஆம் ஆண்டு ரூ.2.25 கோடி செலவில் 15 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டி செயல்பட்டு வருகின்றன.

★ 2007–08ஆம் ஆண்டு ரூ.5 கோடி செலவில் 20 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அவற்றுள், 11 கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளன. 3 கட்டடங்கள் திறக்கப்பட தயார் நிலையில் உள்ளன. 6 கட்டடங்களில் கட்டுமான பணி நடைபெற்று வருகின்றது.

★ 2007–08ஆம் ஆண்டு ரூ.9.57 கோடி மதிப்பீட்டில் மாவட்ட தலைநகரங்களில் துணைத் தலைவர் அலுவலகம், மாவட்டப்பதிவாளர் அலுவலகம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளிட்ட துறை அலுவலகங்களுக்கு வேலூர், கடலூர், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த வளாகங்கள் கட்ட அரசு அனுமதியளித்து கட்டட பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 5 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய அரசுக் கட்டடம் ரூ.140 இலட்சம் செலவில் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ கடந்த 4 ஆண்டுகளில் துறைக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.5.69 கோடி பகுதி II திட்டங்களின் கீழ் அரசு அனுமதித்துள்ளது.

★ 2006–07 ஆம் ஆண்டில் சார்பதிவகங்களுக்கு நகல் எடுக்கும் இயந்திரங்கள், இரும்பு அலமாரிகள், மற்றும் இதர இனங்களுக்கு ரூ.1.68 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் நிறைவுற்றன.

★ 2007–08ஆம் ஆண்டில் சார்பதிவகங்களுக்கு அறிவிப்புப் பலகைகள் அமைத்தல், சுத்தமான குடிநீர் வழங்குதல், நகல் எடுக்கும் கருவிகள் மற்றும் இரும்பு அலமாரிகள் வழங்கல் மற்றும் 1 ஈப்பு வாகனம் வாங்குவதற்கு மொத்தம் ரூ.3.03 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் நிறைவுற்றன.

★ 2008–09 ஆம் ஆண்டில் மாவட்டப் பதிவகங்களுக்கு நிகரிகள் வழங்கல், சார்பதிவகங்களுக்கு இரும்பு அலமாரிகள் வழங்கல் ஆகிய இனங்களுக்கு ரூ.38.15 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

★ 2009–10 ஆம் ஆண்டில் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் ரெஜினெட் மையத்திற்கு கணினிகள் வாங்கல் மற்றும் மாவட்டப் பதிவகங்களுக்கு நிகரிகள் வாங்கல், சார்பதிவகங்களுக்கு நகல் எடுக்கும் கருவிகள், மேசைகள், நாற்காலிகள் மற்றும் CD ரேக்குகள் வாங்குவதற்கு ரூ.59.30 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ மூடப்பட்ட சார்பதிவகங்கள் மீளத் திறத்தல் மற்றும் புதிய அலுவலகங்கள் தோற்றுவித்தல் 2003 ஆம் ஆண்டில் மூடப்பட்ட 40 சார்பதிவகங்களில் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கடந்த 4 ஆண்டுகளில் 14 சார்பதிவாளர் அலுவலகங்கள் மீளத் திறக்கப்பட்டன. 1 சார்பதிவகம் புதியதாகத் திறக்கப்பட்டது.

★ பதிவுக்கு செலுத்தப்படும் பணத்தை சார்பதிவாளர் அலுவலகங்களில் பாதுகாப்பாகப் பேணுவதிலும், கருவூலத்திற்கு எடுத்துச்சென்று செலுத்துவதிலும் பதிவுத்துறைப் பணியாளர்களுக்கு பெரும் பிரச்சினை இருந்தது. இதனைத் தவிர்க்க பொதுமக்கள் ஆவணத்திற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றை வங்கி வரைவோலையாக செலுத்தும் திட்டம்

அமல்படுத்தப்பட்டு பொதுமக்களின் பணத்திற்கும் அரசு நிதியத்திற்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

★ போலியான நபர்களும், நில கொள்ளையர்களும் அப்பாவிப் பொதுமக்களின் நிலங்களையும், சொத்துகளையும் போலியான நபர்களை ஏற்பாடு செய்து போலியான பொது அதிகார ஆவணங்கள் பதிவு செய்வதன் மூலம் அபகரித்து வந்தனர். இதனால் தமிழகம் முழுவதும் நீதிமன்றங்களிலும் காவல் நிலையங்களிலும் ஆயிரக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றம் மற்றும் காவல் துறையினரின் நேரம் வீணடிக்கப்பட்டது. பொது அதிகார ஆவணப் பதிவிற்கு குறிப்பிட்ட சார்பதிவாளர் அலுவலகங்களில் மட்டுமே பதிவு செய்ய முடியும் என்றும் ஆவணத்தில் அதிகாரம் கொடுப்பவர், பெறுபவர் மற்றும் இரண்டு சாட்சிகளின் கையெழுத்து, கைரேகை மற்றும் புகைப்படம் கட்டாயம் இடம்பெற வேண்டும் என ஆணையிடப்பட்டும் மற்றும் பொது அதிகார ஆவணங்களை சொத்துகளின் வில்லங்கச் சான்றில் இடம்பெற செய்வதன் மூலம் போலி பொது அதிகார ஆவணங்களின் பதிவு அறவே நிறுத்தப்பட்டு பொதுமக்களின் சொத்துகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் வகையில் பதிவுத்துறைத் தலைவர் மூலம் சுற்றறிக்கை வெளியிடப்பட்டு 01.11.2009 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

★ ஆள்மாறாட்டம் மற்றும் பினாமி பதிவு மூலம் ஆவணப் பதிவு செய்வதை முழுமையாகத் தடுத்திடும் நோக்கில் 26.6.2006இன்படி கிரைய ஆவணங்களில் வாங்குபவர் மற்றும் விற்பவர் புகைப்படம் ஒட்டுதல் மற்றும் கிரையம் கொடுப்பவர், கிரையம் பெறுபவர் மற்றும் ஆவணத்தை தாக்கல் செய்பவரின் விரல் ரேகை பெறுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஏனைய ஆவணங்களைப் பொருத்து பதிவின் போது ஆவணத்தை தாக்கல் செய்பவரின் புகைப்படம் ஒட்டுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

★ போலி ஆவணங்களை தடை செய்யும் விதமாகவும் அசல் ஆவணங்களின் உண்மைத் தன்மையினை உறுதி செய்யவும் 1.8.2007 முதல் Hologram ஒட்டு வில்லைகள் ஒட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

★ திருமணங்கள் கட்டாயப் பதிவிற்கு உட்படுத்தப்பட்டு 22.10.2007 முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

★ இந்திய உச்சநீதிமன்றம் பலவேறு தரப்பட்ட மதங்களைச் சார்ந்த இந்திய குடிமக்களின் திருமணங்கள் அனைத்தும் திருமணம் நடைபெற்ற இடத்தில் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வரையறுக்கப்பட வேண்டும் என தீர்ப்பளித்ததைத் தொடர்ந்தும் பெண்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற சமூக நோக்கத்துடனும் தமிழக அரசு தமிழக சட்ட எண் 21/2009ன் படி 24.11.2009 முதல் தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்துத் திருமணங்களும் கட்டாயமாக திருமணம் நடைபெறும் இட எல்லை சார்பதிவாளரிடம் 90 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும் என சட்டமியற்றியுள்ளது.

★ விவசாயிகள் / குறுந்தொழில் முனைவோர் காப்பீடாக எழுதிக் கொடுக்கும் அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை முழுமையாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

★ கார்கில் போரில் உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் சம்பந்தப்பட்ட ஆவணப் பதிவுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

★ ‘டைடல் பூங்காவில்’ உள்ள தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு எழுதித் தரப்படும் கிரையம் மற்றும் குத்தகை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

★ புதிய தொழிற்கொள்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தனியார் உற்பத்தித் தொழில் நிறுவனங்களுக்கு எழுதித் தரப்படும் கிரையம் மற்றும் குத்தகை ஆவணங்களுக்கு ஆவண மதிப்பின் மீதான முத்திரைத் தீர்வையில் 50 விழுக்காடு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

★ ’சிப்காட் தொழில் பூங்கா’க்களில் உள்ள உற்பத்தித் தொழில் நிறுவனங்களுக்கும் முத்திரைத் தீர்வையில் 50 விழுக்காடு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

★ ’சிட்கோ’ தொழிற்பேட்டையில் உள்ள சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு எழுதித் தரப்படும் குத்தகை, கிரையம் மற்றும் குத்தகை–கிரைய ஆவணங்களுக்கு ’சிட்கோ’ நிர்ணயித்த மதிப்பின் மீதான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் 50 விழுக்காடு சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

★ தனியார் தொழிற்பேட்டையில் உள்ள நிறுவனங்களுக்கு எழுதித் தரப்படும் மேற்கண்ட ஆவணங்களுக்கு வழிகாட்டி மதிப்பின் மீதான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் 50 விழுக்காடு சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

★ சிறு தொழில் நிறுவனங்கள் எழுதித் தரும் அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

★ மேல் ஈடு ஆவணங்களுக்கு அடமான ஆவணங்களுக்கு உள்ளது போல் பதிவுக்கட்டணம் உச்சவரம்பு ரூ.10 ஆயிரமாகவும், முத்திரைத் தீர்வை உச்சவரம்பு ரூ.40 ஆயிரமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இந்த ஆவணங்களுக்கு உச்சவரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

★ பிணைய அடமான ஆவணங்களுக்கு முன்னர் பதிவுக் கட்டணத்தில் உச்சவரம்பு ஏதும் நிர்ணயிக்கப்

படாததால் பெறும் தொகைகள் கடன் பெறும் நிறுவனங்கள் அதிகமான பதிவுக் கட்டணச் சுமைக்கு ஆளாக்கப்பட்டிருந்தன. இதற்கு நிவாரணமாக அரசு பிணைய அடமான ஆவணங்களுக்கு கடன் தொகை எவ்வளவு அதிகமாக இருந்தாலும் பதிவுக் கட்டணம் உச்சவரம்பாக ரூ.10 ஆயிரமாக நிர்ணயிக்கப்பட்டது. இதனால் தொழில் வர்த்தக நிறுவனங்களுக்கு உத்வேகம் அளிக்கப்பட்டது.

★ மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள் வங்கிகளில் கடன் பெறுவதற்காக எழுதித் தரும் ஆவணங்களுக்கு அரசு முழு முத்திரைத் தீர்வை விலக்கு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

★ சொத்துகளின் சந்தை மதிப்பினை நிர்ணயம் செய்வதற்காக 23.3.2007 வரை தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களிடம் நிலுவையில் இருந்த ஆவணங்களில், வசூலிக்கத்தக்க முத்திரைத் தீர்வையில் 40 விழுக்காடு சலுகை அளித்ததன் மூலம் 21,599 ஆவணங்கள் உடனடியாக ஆவணதாரர்களுக்கு திரும்ப அளிக்க வகை செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.82.45 கோடி அரசின் வருவாய்க்கு வழி வகுத்துள்ளது.

★ 2006–ஆம் ஆண்டில் துறையின் அனைத்து நிலைகளிலும் 1,469 பணியிடங்கள் காலியாக இருந்தன. இதனால் துறையின் சேவையில் சுணக்கமும், பணியாளர்களின் பணிப்பளு அதிகரித்த வண்ணமாகவும் இருந்தன.

★ தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவான மற்றும் வெளிப்படையான சேவையைப் பொதுமக்களுக்கு வழங்குதல் பொருட்டு மாநிலத்திலுள்ள 574 சார்பதிவகங்கள் மற்றும் 50 மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் துறையின் ஏனைய அலுவலகங்களைச் சேர்த்து மொத்தம் 700 அலுவலகங்கள் கணினிமயமாக்கத் திட்டமிடப்பட்டது. இதற்காக பொதுமக்களால் அளிக்கப்படும் மனுக்களை விரைந்து முடித்திட தகவல் தொழில்நுட்பம் சார்ந்த STAR (Simplified and Transparent Administration of Registration) எனும் திட்டத்தை துறை அறிமுகப்படுத்தியது.

**இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

★ ஆவணப்பதிவில் நிழற்பட கருவி (Web Camera) மற்றும் நவீன கைரேகை எடுக்கும் கருவி (Bio-Metric Device) பயன்படுத்தி ஆவணங்களைப் பதிவு செய்து சேமித்தல். ஆவணங்கள் பாதுகாப்பு. வில்லங்கச்சான்றுகள் / சான்றிட்ட நகல்கள் திருமணப் பதிவு/சங்கப்பதிவு / நிறுவனங்கள் பதிவு / சீட்டுப்பதிவுகள். துறையின் இணையதளத்தின் (http://www.tnreginet.net) வழி சேவை விவரங்களை அளித்தல். இணையதளம் வழியாக விண்ணப்பித்து தேவையான வில்லங்கச்சான்று, ஆவண நகல்கள் மற்றும் இதர பதிவுச்சான்றுகளை வீட்டிலேயே பெறுதல். அத்துடன் இத்துறையில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள ரெஜிநெட் சேவை மூலம் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு சொத்தின் வில்லங்கச் சான்றினையும் ரெஜிநெட் இணைப்பு மூலம் எந்த ஒரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

★ தகவல் தொடர்பு வழியான செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, பதிவுத்துறை தனது சேவைத் தரத்தை பலமடங்கு மேம்படுத்தியுள்ளது. மேலும் அனைத்து அலுவலகங்களையும் திறம்பட இணைத்திடவும், ஆவண பிம்பங்கள் உள்ளிட்ட தகவல்களை மையக் கணினிக்கு (Tamil Nadu State Data Centre) அனுப்ப ஏதுவாக அனைத்து அலுவலகங்களும் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலை அமைப்பு (TNSWAN) வழி இணைக்கப்படவும் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த இணைப்பு 4 கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளது. முதற்கட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன.

★ பதிவுத்துறையில் மின்னணு சேவைகள் மேம்படுத்துதல் திட்டத்திற்கென இந்திய அரசால் அளிக்கப்பட்ட ரூ.4.97 கோடியில் முதல் தவணையாக ரூ.2.49 கோடி பெறப்பட்ட தொகையானது இனங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்டுள்ள 165 இடங்களில் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலை அமைப்பு (TNSWAN) இணைப்பு பெறவும் 'விண்டோஸ்' மென்பொருளுடன் கூடிய 89 மடிக்கணினிகள் துறையின் உயர் அலுவலர்களுக்கு வழங்க கொள்முதல் செய்யவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இறுதிக் கட்ட அலுவலகங்களுக்கு இணைப்புக்குத் தேவையான நிதி ரூ.4.97 கோடி அரசிடம் கோரப்பட்டுள்ளது. விரைவில் பதிவுத்துறையின் அனைத்து அலுவலகங்களும் இத்திட்டங்களின் கீழ் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டு நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழும்.

★ ★ ★



# நினைவில் வாழும் பெருமக்களுக்கு நினைவகங்கள் அமைப்பு

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள்

★ ரூ.4.90 இலட்சம் செலவில் சென்னை காமராசர் சாலை, மெரினா கடற்கரையில் கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவ நிதி ஒப்பளிப்பு செய்து 18.5.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3.6.2006 அன்று திறந்து வைக்கப்பட்டது.

★ சென்னையில் அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு ரூ.4 இலட்சம் செலவில் பீடமும் மற்றும் ரூ.4.95 இலட்சம் செலவில் 8 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலையும் நிறுவ அனுமதித்து 26.05.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டு சிவாஜி கணேசன் அவர்களின் நினைவு நாளான 21.7.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

★ "தலைநகர் காத்த தமிழ்ச் செல்வர்" ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு, 8 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலையை சென்னையில் அமைக்க ரூ.1,49,400 மற்றும் வெண்கலச் சிலையை அமைப்பதற்கான பீடம் கட்ட ரூ. 4.75 இலட்சத்திற்கு நிதி அனுமதித்து 11.8.2006 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டது.

★ ரூ.4 இலட்சம் செலவில் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலையின் அருகில் அமையவுள்ள திருவள்ளுவர் மையத்தில் திருக்குறள் ஆய்வு நூல்கள், மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளின் படிகள், புத்தகங்கள் வாங்கி வைப்பதற்கும் புத்தகங்கள் வைக்க அலமாரிகள் மற்றும் மேஜை, நாற்காலிகள் வாங்கவும் நிதி அனுமதித்து 07.07.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

★ "புராதனச் சின்னங்கள்" பாதுகாப்பின் கீழ் 12ஆவது நிதி ஆணையத்தின் மானியத்தில் சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபத்தைப் புதுப்பிப்பதற்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகளுக்காக ரூ.66 இலட்சம் நிதி அனுமதித்து 3.10.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

★ சென்னை வள்ளுவர் கோட்டம் மற்றும் காமராசர் நினைவு இல்லம் ஆகியவற்றிற்கான சீரமைப்புப் பணிகளுக்காக திட்ட மதிப்பீட்டு செலவினம் முறையே ரூ.60 இலட்சம் மற்றும் ரூ.2.50 இலட்சம் நிதி அனுமதித்து 16.10.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

★ சென்னையிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தில் "எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம்" மாண்புமிகு தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் 30.3.2007 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**நினைவகங்கள் சீரமைப்பு**

★ 2006–2007 நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூதறிஞர் இராஜாஜி நினைவு இல்லம், நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், திருநெல்வேலி மாவட்டத்தில் மாவீரன் பூலித்தேவன் சிலை, தூத்துக்குடி மாவட்டத்தில் வ.உ.சிதம்பரனார் இல்லம், பாரதியார் மணிமண்டபம், பாரதியார் இல்லம், வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுப்பூங்கா, திருச்சி மாவட்டத்தில் வ.வே.சுப்பிரமணிய ஐயர் நினைவு இல்லம், கன்னியாகுமரி மாவட்டத்தில் காந்தி நினைவு மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம் மற்றும் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம், ஈரோடு மாவட்டத்தில் தந்தை பெரியார்–அண்ணா நினைவகம், மதுரை மாவட்டத்தில் தியாக சீலர் கக்கன் மணிமண்டபம், சிவகங்கை மாவட்டத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், மருதுபாண்டியர் நினைவு மண்டபம் மற்றும் கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம் ஆகியன ரூ.26.23 இலட்சம் செலவில் சீரமைத்து மேம்படுத்தப் பட்டுள்ளன.

★ மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 2007–2008 நிதியாண்டில் கேரள மாநில வைக்கம் தந்தை பெரியார் நினைவகம், கிருஷ்ணகிரி மாவட்ட மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், நாகப்பட்டினம் மாவட்ட தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், கோயம்புத்தூர் மாவட்ட திருப்பூர் குமரன் நினைவகம், பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், சென்னை காந்தி அருங்காட்சியகம்,

தியாகிகள் மணிமண்டபம், மகாகவி பாரதியார் நினைவு இல்லம் மற்றும் மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் ஆகியன ரூ.43.45 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன.

★ பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 100ஆவது ஜெயந்தி விழா கொண்டாடுவது தொடர்பாக, 2007–2008ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், "வரும் 30.10.2007 அன்று, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளதையொட்டி, ரூ.50 இலட்சம் செலவில், பசும்பொன் கிராமத்திலுள்ள அன்னாரது நினைவு இல்லம் பழைமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, நூற்றாண்டு விழா தோரணவாயில் மற்றும் அணையா விளக்கு ஆகியவை அமைக்கப்படுவதோடு, அவரது நினைவிடத்தை வழிபட வரும் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும்" என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் பசும்பொன் கிராமத்தில் பால்குடம் மற்றும் முளைப்பாரி எடுக்கும் இடத்தில் மிக அத்தியாவசமாகத் தேவைப்படும் புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

★ மதுரை மாவட்டம், சாத்தமங்கலம் என்ற இடத்தில் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் மணிமண்டபம் ரூ.39.60 இலட்சம் செலவிலும், தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு என்ற இடத்தில் சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத் தேவன் மணிமண்டபம் ரூ.25 இலட்சம் செலவிலும், கவர்ணகிரியில் சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கம் மணிமண்டபம் ரூ.25 இலட்சம் செலவிலும் சிலையுடன் கூடிய மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், மதுரை மாவட்டம், விளாச்சேரி கிராமத்தில் சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பரிதிமாற் கலைஞர் அவர்களுக்கு ரூ.7.90 இலட்சம் செலவில் நினைவில்லத்தைப் புதுப்பித்து சிலை அமைக்கப்பட்டு 31.10.2007 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவை தவிர எட்டயபுரத்தில் அமுதகவி உமறுப்புலவர் அவர்களுக்கு ரூ.22.50 இலட்சம் செலவில் நினைவகம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

★ திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், உத்தமதானபுரத்தில் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு சிலையுடன் கூடிய நினைவில்லம் அமைக்க ரூ.1.37 இலட்சம் செலவில் அவர் வாழ்ந்த இல்லம் கையகப்படுத்தப்பட்டு ரூ.23 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்ப் பெரும் புலவர் அதங்கோட்டாசான் அவர்களின் திருஉருவச்சிலையினைச் சீரமைக்க ரூ.2 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டையில் அதியமான் கோட்டம் மற்றும் 400 நபர்கள் அமரக்கூடிய பார்வையாளர்கள் மண்டபம் அமைத்திடும் வகையில், ரூ.115 இலட்சம் மதிப்பீட்டில் 28.2.2009 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**2009 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட மணிமண்டபங்கள் மற்றும் நினைவில்லங்கள்**

★ சென்னை, கிண்டியிலுள்ள காந்தி மண்டப வளாகத்தில் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களின் நினைவகம் மற்றும் முழு உருவச் சிலை ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 7.7.2009 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

★ காந்திமண்டப வளாகம் பொதுப்பணித்துறையின் மேற்பார்வையில் ஏர்செல் நிறுவனத்தின் உதவியுடன் சுமார் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு 7.7.2009 அன்று பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

★ திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தியாகி பி.சீனிவாசராவ் அவர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் கட்டப்பட்டு 14.11.2009 அன்று பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

★ சென்னை, திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள பாரதியார் இல்லத்தில் ரூ.17.73 இலட்சம் செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**புதிதாக அமைக்கப்படவிருக்கும் மணிமண்டபங்கள் மற்றும் நினைவில்லங்கள் குறித்த அறிக்கை**

★ 2007–08ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் "தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், பட்டுக்கோட்டை அழகிரி அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டப்படும்" என அறிவித்திருந்ததைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களுக்கு ரூ.39 இலட்சம் செலவில் நினைவகம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில், தமிழிசை மூவரான அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை, முத்துத்தாண்டவர் ஆகியோருக்கு ரூ.1.51 கோடி செலவில் சிலைகளுடன் கூடிய மணிமண்டபம்

அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மணிமண்டபம் அமைப்பதற்கான துவக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில், தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நினைவிடத்தில் ரூ.40 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மணிமண்டபம் அமைப்பதற்கான துவக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மகிபாலன்பட்டி கிராமத்தில் சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனாருக்கு நினைவு மண்டபம் மற்றும் சிலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ தமிழுக்குத் தொண்டாற்றி ஒப்பிலக்கணம் தந்த கால்டுவெல் வாழ்ந்து மறைந்த இடையன்குடி இல்லத்தை நினைவு இல்லமாக மாற்றி 04.02.2010 அன்று ஆணை வெளியிடப்பட்டது. அவ்வில்லத்தினை ரூ.18.50 இலட்சம் செலவில் பழுதுபார்த்து செப்பனிட்டு நினைவு இல்லமாக மாற்ற நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**விழாக்கள்**

★ கௌதம புத்தர் மகாபரி நிர்வாணம் அடைந்து 2550 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி தமிழக அரசு சார்பில் 1.2.2007 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் துவக்க விழா நடைபெற்றது. மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் விழாக்கள் நடைபெற்றன.

★ சென்னை அயனாவரம் ஜீவா பூங்காவில் நிறுவப்பட்ட கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் திருவுருவச் சிலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு.பி.ஸ்.எடியூரப்பா அவர்களால் 13.08.2009 அன்று திறந்து வைக்கப்பட்டது.

★ பேறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா 15.9.2009 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலரை வெளியிட்டார். மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. பிராணாப் முகர்ஜி அவர்கள் பேறிஞர் அண்ணா உருவம் பொறித்த ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டார்.

★ தியாக சீலர் கக்கன் நூற்றாண்டு விழா மதுரை மாவட்டம் தும்பைப்பட்டியில் 10.10.2009 அன்று மாண்புமிகு மத்திய இரசாயனத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

★ 14.11.2009 அன்று திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தியாகி சீனிவாசராவ் நினைவு மண்டபம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

★ சென்னை வள்ளுவர்கோட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் 15.01.2010 அன்று திருவள்ளுவர் திருநாள் மற்றும் அரசு விருதுகள் வழங்கும் விழா மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

★ கவிஞர் சுரதா அவர்களின் பிறந்த நாளான 23.11.2009 அன்று அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

★ வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாளான 08.11.2009 அன்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, திருவுருவப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

★ சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்த நாளான 17.04.2010 அன்று, அவரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

★ சுதந்திரப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் நினைவு அஞ்சல் தலை 30.03.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சென்னை தலைமைச்செயலகத்தில் உள்ள கூட்டரங்கில் வெளியிடப்பட்டது.

**திரைப்படத் தொழில்நுட்பப் பிரிவு**

★ சிறந்த திரைப்படங்களுக்கு நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, தங்கப்பதக்கம், சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசு ஆகியவை ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

★ சமூக நீதியை வலியுறுத்தி குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இவ்வகையான படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டத்தின் கீழ் படங்களை தேர்ந்தெடுக்க தேர்வுக்குழு அரசால் அமைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு திரைப்படத்திற்கும் ரூ.7 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

★ குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்ப் படங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தகுதியுடைய திரைப்படங்களுக்கு அத்திரைப்படங்கள்

வெளியிடப்படும் நாளிலிருந்து நான்கு வாரங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

★ அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறை அனுமதி வழங்கப்படுகிறது.

★ சண்டைக்காட்சியில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

★ 'பெரியார்' திரைப்படத்திற்கு அரசு மானியமாக ரூ.95 இலட்சம் வழங்கப்பட்டது.

★ திரைப்படத் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட நிலம் வழங்க வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் பையனூர் கிராமம் புல எண்.448 திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம் மற்றும் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அடுக்கு மாடி வீடு கட்டும் பொருட்டு நிலம் குத்தகைக்கு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது.

★ 2005–2006 ஆம் ஆண்டு முதல் சின்னத்திரைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

★ கடந்த ஆட்சிக் காலத்தில் திரைப்படப் படப்பிடிப்பு முன்பணமாக ரூ.50,000 மற்றும் ரூ.1,00,000 வசூலிக்கப்பட்டது. தற்பொழுது அரசாணைகள் திருத்தப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு இராஜாஜி மண்டபத்திற்கு ரூ.10,000, அரசு கட்டடங்களுக்கு ரூ.5,000 மற்றும் சாலைகள், வனப்பகுதிகளுக்கு ரூ.3,000 முன்பணமாக வசூலிக்கப்படுகிறது.

★ திரைப்படத் துறைக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை மறு ஆய்வு செய்ய சீரமைப்புக் குழு அமைக்கப் பட்டுள்ளது.

★ சின்னத்திரைக் கலைஞர்களுக்கு நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி சின்னத்திரையில் பணிபுரிவோருக்கு மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவி செய்ய அவர்களுக்கு நலநிதியம் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்க திட்டமிட்டு விதிமுறைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

★ இதுவரை மும்பையில் மட்டுமே நடைபெற்று வந்த பன் ஊடக வர்த்தக மாநாட்டினை தமிழகத்தில் நடத்துவதற்கு அம்மாநாட்டின் தமிழகத்திற்கான தலைவர் திரு. கமலஹாசன் அவர்களின் கோரிக்கையை ஏற்று சென்னையில் 18.11.2009 மற்றும் 19.11.2009 ஆகிய நாட்களில் அம்மாநாட்டினை நடத்த ரூ.50 இலட்சம் நிதி இந்திய வர்த்தக இணையத்திற்கு (FICCI) நல்கையாக வழங்கப்பட்டது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புப்படி சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நலவாரியம் ஒன்றினை உருவாக்கி அரசாணை 28.10.2009 அன்று வெளியிடப்பட்டுள்ளது. திரைப்படத்துறையினர் நலவாரியக் குழு அரசாணை 15.12.09 அன்று வெளியிடப்பட்டது. தற்போது திரைப்படத்துறையினர் நலவாரிய அலுவலகம் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அமைக்கும் பணி செயல்பாட்டில் உள்ளது. இந்நிறுவனத்திற்கான பணியாளர் நியமனம் அரசின் பரிசீலனையில் உள்ளது

**பத்திரிகையாளர் நலன்**

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

★ 1989இல் ரூ.400ஆக இருந்த பத்திரிகையாளர் ஓய்வூதியம் 1.6.1996இல் ரூ.1,000ஆகவும், 1999இல் ரூ.1,500ஆகவும், 11.4.2000இல் ரூ.2,000ஆகவும், 1.9.2006 முதல் ரூ.3,000இலிருந்து ரூ.4,000ஆகவும் இவ்வரசினால் உயர்த்தப்பட்டு, 2006–2007இல் 6 நபர்கள், 2007–2008இல் 10 நபர்கள், 2008–2009இல் 6 பேர், 2009–2010இல் 9 பேர் ஆக மொத்தம் 31 பேர் உட்பட இதுவரை 95 பேர் பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

★ ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்கள் இறந்து விட்டால் அவர்களின் துணைவியாருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.500ஐ வாழ்நாள் முழுவதும் வழங்குவதற்கு 14.9.1998 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 1.9.2006 முதல் குடும்ப ஓய்வூதியம் ரூ.1,500இலிருந்து ரூ.2,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2006–2007இல் 1 பேர், 2007–2008இல் 1 பேர் 2008–2009இல் 3 பேர், 2009–2010இல் 4 பேர் உட்பட இதுவரை 24 நபர்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று பயனடைந்து வருகின்றனர்

**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்**

★ பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர்கள் குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ் நிதி வழங்குவதற்கு முதன்முதலாக 1997ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு

ரூ.25,000 வீதம் உதவி நிதி வழங்கப்பட்டது. 1999ல் இத்தொகை ரூ.40,000ஆகவும் 1.4.2000 முதல் ரூ.50,000ஆகவும், உயர்த்தப்பட்டது. இத் தொகை 25.9.2001 முதல் ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 20 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.2 இலட்சம், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.1.50 இலட்சம், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.1 இலட்சம், 5 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.50,000 குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ் வழங்க 1.9.2006இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 1997 முதல் 2001 வரை 16 பேர்களுக்கும், 2001 முதல் 2006 வரை 9 பேர்களுக்கும், 2006 முதல் 2009 மார்ச் வரை 14 பேர்களுக்கும், 2009–2010ல் 4 பேர்களுக்கும், ஆக மொத்தம் இதுவரை 43 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன

**பத்திரிகையாளர் மருத்துவ சிகிக்சைக்கு நிதியுதவி**

★ தினபூமி நாளிதழ் புகைப்படக்காரர் திரு.ஜான் சுரேஷ்குமார் அவர்களுக்கு புற்றுநோய் மருத்துவச் செலவிற்கு ரூ.1.50 இலட்சம் 18.5.2007 அன்று வழங்கப்பட்டது.

★ மூத்த பத்திரிகையாளர் குமுதம் பால்யூவின் மருத்துவச் செலவிற்காக ரூ.25,000 வழங்கப்பட்டது.

★ புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மாணவரும், தமிழரசு பத்திரிகையாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற கவிஞர் சாமி பழனியப்பன் மருத்துவச் செலவிற்காக ரூ.1 இலட்சம், மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் வழங்கப்பட்டது.

★ திரைப்பட கதை வசனம் எழுதும் திரு.வலம்புரி சோமநாதன் அவர்களுக்கு வறுமையைப் போக்கும் வகையில் மருத்துவச் செலவிற்கு ரூ.50,000 ஆகஸ்டு 2007இல் வழங்கப்பட்டது.

★ சன்முரசு நாளிதழ் பத்திரிகையாளர் திரு.பரமத்தி சண்முகம் அவர்களுக்கு இருதய நோய் மருத்துவச் செலவிற்காக ரூ.1.50 இலட்சம் அக்டோபர் 2007இல் வழங்கப்பட்டது.

★ சென்னைத் தொலைக்காட்சியின் மதுரைப் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் திரு.ஜாகிர் என்பவர் மகள் சிறுமி ரேஷ்மாவிற்கு மருத்துவச் செலவிற்காக ரூ.25,000 டிசம்பர் 2007இல் வழங்கப்பட்டது.

★ மதுரை தினமணி நாளிதழின் முதன்மை செய்தியாளர் திரு.ஜீவா பிரபாகரன் அவர்களுக்கு மருத்துவச் செலவிற்காக ரூ.1 இலட்சம் 2008 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

**பத்திரிகையாளர் நல நிதியம்**

★ 14.1.2008 அன்று வெளியிடப்பட்ட அரசாணை மூலம், பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்பீட்டுத் தொகைக்கு மாதம் ஒன்றிற்கு வட்டியாக ரூ.83,333 கிடைக்கும். இந்த வட்டித் தொகையிலிருந்து கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதி உதவியாக ஒருவருக்கு ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு மிகாமல் நிதி உதவி அளிக்கப்படும்.

★ பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து கிடைக்கப் பெற்ற வட்டியிலிருந்து இதுவரை தினகரன் நாளிதழில் புகைப்படப்பிடிப்பாளராகப் பணிபுரியும் திரு.க.சிவகுமார் அவர்களுக்கு இருதய அறுவை சிகிச்சைக்காகரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது

**பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு வசதி**

★ பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகை வீடு ஒதுக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழகம் முழுவதும் 268 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையில் மட்டும் 70 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் விற்பனை**

★ 2006 முதல் 2009 வரை 12 பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி**

★ 1989 ஆம் ஆண்டு சென்னை கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் நிலம் 136 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பிற்காக வழங்கப்பட்டது. 1997ஆம் ஆண்டு மதுரை தல்லாகுளம் பகுதியில் 70 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்புகளுக்காக 3.7 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு சலுகை விலையில் வீட்டுமனைகள் திருச்சி மாவட்டத்தில் 57 பத்திரிகையாளர்களுக்கும், வேலூர் மாவட்டத்தில் 63 பத்திரிகையாளர்களுக்கும், திண்டுக்கல் மாவட்டத்தில் 18 பத்திரிகையாளர்களுக்கும், சேலம் மாவட்டத்தில் 34 பத்திரிகையாளர்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 29 பத்திரிகையாளர்களுக்கும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் 33 பத்திரிகையாளர்களுக்கும் ஆக மொத்தம் 603 பத்திரிகையாளர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் அறைக்கு இணையதள வசதி**

☆ தலைமைச் செயலகத்திலுள்ள பத்திரிகையாளர் அறையிலிருந்து ஒரே நேரத்தில் 20 பத்திரிகையாளர்கள் தங்கள் நிறுவனங்களுக்கு செய்திகளை/ புகைப்படங்களை மின் அஞ்சல் முலம் அனுப்புவதற்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி செய்து தரப்பட்டுள்ளது. இவ்வசதியைப் பயன்படுத்துவன் மூலம் செய்திகளும், புகைப்படங்களும் உரிய நேரத்திற்குள் விரைவாக நிறுவனங்களுக்கு சென்றடைந்து பத்திரிகைகளில் வெளிவருவதற்கு வழிவகுக்கின்றது.

**பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை**

☆ சென்னை மற்றும் மாவட்டங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்க ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு ரூ.3,000 என்ற வீதத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கு இத்துறை 1999–2000 முதல் 2007–2008 முடிய இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கிய செலவினம் ரூ.402.47 இலட்சத்தினை இத்துறை 2009–2010ஆம் நிதியாண்டில் ஈடு செய்துள்ளது.

**செய்தியாளர் அங்கீகார அட்டை**

☆ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் விழாக்கள், நிகழ்ச்சிகள், பத்திரிகையாளர் சந்திப்புக்களில் கலந்து கொண்டு செய்தி சேகரிக்க ஏதுவாக நாளிதழ்கள், செய்தி நிறுவனங்கள், தனியார் தொலைக்காட்சிகள் அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள்/ புகைப்படப்பிடிப்பாளர்கள் / ஒளிப்பதிவாளர்களுக்கு பத்திரிகையாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரைக்கேற்ப செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

★ 2010ஆம் ஆண்டு சென்னையில் 813 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் 89 பத்திரிகையாளர்களுக்கும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2010ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அனுமதியுடன் மாவட்டத் தலைநகரங்களில் 718 பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கும் அடையாள அட்டை**

☆ காலமுறை இதழ் செய்தியாளர் அட்டை வழங்க அதற்காக அமைக்கப்பட்டுள்ள செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழுவின் பரிந்துரைக்கேற்ப ஒரு இதழுக்கு இரண்டு செய்தியாளர், ஒரு புகைப்படக்காரருக்கு செய்தியாளர் அட்டை வழங்கப்படுகிறது. இவ்வாண்டு 222 செய்தியாளர்கள்/ புகைப்படக்காரர்களுக்கு செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**மடிக்கணினிகளுடன் புகைப்படப் பிரிவு**

☆ புகைப்படப்பிரிவில் தற்போது புதிய வகை டிஜிட்டல் கேமராக்கள் மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவைகள் மின் அஞ்சல் மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 200 ஊடகங்களுக்கு தலைமையிடத்திலிருந்து ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகிறது. அத்துடன் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்தே எடுக்கப்பட்ட புகைப்படங்களை உடனுக்குடன் அனுப்பும் வகையில், இணைய தள வசதியுடன் கூடிய 3 மடிக்கணினிகள் வாங்கப்பட்டு, நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திலிருந்தே புகைப்படங்கள் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

☆ 2009–2010ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.13.25 இலட்சம் செலவில் முக்கியத் தலைவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளின் அரிய பழைய புகைப்பட நெகடிவ் படச்சுருள்கள் டிஜிட்டல் முறையில் ஸ்கேன் செய்து பொருத்தமாகத் தலைப்பிட்டு, தேவைப்படும்போது தேடி எடுக்க சிறப்பு மென்பொருள் மற்றும் சர்வர் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

☆ 2009–2010ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ், ரூ.12.50 இலட்சம் செலவில் தலைமையகம் மற்றும் புதிதாக தொடங்கப்பட்ட மூன்று மாவட்டங்களின் பயன்பாட்டிற்கு 5 நிக்கான் D200 புகைப்படக் கருவிகள் மற்றும் துணை சாதனங்களுடன் வாங்கப்பட உள்ளது.

★ நவீன பயன்பாட்டிற்கு ஏற்றவாறு, மின் ஆளுமையின் உதவியோடு, நிகழ்ச்சிகளில் எடுக்கப்படும் படங்கள் அனைத்தும் குறுந்தகட்டில் பதிவு செய்யப்பட்டு அவைகள் எதிர்காலப் பயன்பாட்டிற்கு ஏதுவாக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இதற்காக இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு ரூபாய் இரண்டு லட்சம் செலவில் அதிக திறன் வாய்ந்த சர்வர் வாங்கப்பட்டுள்ளது.

**சென்னை நிருபர்கள் சங்கத்திற்குப் புதிய கட்டடம்**

★ சென்னை நிருபர்கள் சங்கத்திற்குப் புதிதாக கட்டடம் கட்டுவதற்கு ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசினர் தோட்ட வளாகத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கூடுதலாக ரூ.9 இலட்சம் 2010–2011 நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பகுதி II திட்டங்கள்**

**2006–2007**

★ 30 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் 20 தலைமையிட அலுவலர்களுக்கும் செல்பேசிகள் ரூ.1.42 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

★ ரூ.2.70 இலட்சம் செலவில் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் 30 ஸ்கானர் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டன.

★ தலைமையிடம் மற்றும் சென்னை அலகு அலுவலகங்களுக்கு ரூ.5 இலட்சம் செலவில் துணைப் பாகங்களுடன் 10 கணினிகள் வாங்கி வழங்கப்பட்டன.

★ தமிழ்நாடு திரைப்படப்பிரிவிற்கு ரூ.18 இலட்சம் செலவில் பைனல் கட்புரோ–5 என்ற நவீன படத்தொகுப்பு சாதனம் வழங்கப்பட்டது.

★ எம்.ஜி.ஆர். அரசு திரைப்படத் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மறு ஒலிப்பதிவு அரங்கம் ரூ.35 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதியுடன் புதுப்பிக்கப்பட்டது.

★ தமிழரசு அச்சகத்திற்கு ரூ.34.63 இலட்சம் செலவில் நவீன அச்சகக் கருவிகள் வாங்கப்பட்டது.

**2007–2008**

★ தமிழரசு அச்சகத்திற்கு ரூ.78.89 இலட்சம் செலவில் நவீன அச்சகக் கருவிகள் வாங்கப்பட்டது.

★ எம்.ஜி.ஆர். அரசு திரைப்படத் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்கள் பயன்படுத்தும் ஒளிப்பதிவு கருவிகள் ரூ.67.89 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது. மேலும் மாணவர் படப்பிடிப்பு அரங்கம் ரூ.18 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.

**2008–2009**

★ மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நிகரிகள் மற்றும் ஒளிநகல் கருவிகள் ரூ.3 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டன.

**2009–2010**

★ எம்.ஜி.ஆர். அரசு திரைப்படத் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்கள் பயன்பாட்டிற்கு ரூ.30 இலட்சம் செலவில் வண்ணப் படம் பதனிடும் கருவியும் ரூ.10 இலட்சம் செலவில் டென்சிட்டோ மீட்டர் கருவியும் வாங்கப்பட்டது.

★ ரூ.12.5 இலட்சம் செலவில் ஐந்து டிஜிட்டல் காமிராக்கள் எல்காட் நிறுவனம் மூலம் வாங்கப்படுகிறது.

★ தலைமையகம் புகைப்படப் பிரிவில் உள்ள அரிய புகைப்பட நெகடிவ்கள் ரூ.13.25 இலட்சம் செலவில் டிஜிட்டல் முறையில் ஸ்கான் செய்து தலைப்பிட்டு சேமித்துவைக்க எல்காட் நிறுவனம் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

★ கடந்த நான்காண்டுகளில் 1,25,86,300 ரூபாய் செலவில் புதிய வாகனங்கள் வாங்கி வழங்கப்பட்டன.

★ ★ ★



# நகர்ப்புர வளர்ச்சியை மேம்படுத்த உள்கட்டமைப்பு வசதிகள்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள்

★ சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டம் – 1971ஆம் ஆண்டின் சட்டத்தின் கீழ் 1972ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1975ஆம் ஆண்டு முதல் சட்டமுறை ஆணையமாக நிறுவப்பட்டது. இக்குழுமம், சென்னைப் பெருநகர்ப் பகுதியை உள்ளடக்கிய 1,189 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் தன் அதிகார எல்லையைக் கொண்டுள்ளது. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பது இக்குழுமத்தின் சட்டப்பூர்வமான பணிகளாகும். கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி, சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம், மாதவரம் சரக்குந்து இரும்பு மற்றும் எஃகு அங்காடி ஆகிய திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்தினை விரிவான பொதுமக்கள் கலந்தாய்வுடன் செயற்கைக்கோள் புகைப்படங்கள், கணினிகள் மற்றும் பூகோளத் தகவல் மையம் போன்ற உயர்தர தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது. இரண்டாம் முழுமைத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு 02.09.2008 அன்று அறிவிக்கை செய்யப்பட்டது. திருத்தி அமைக்கப்பட்ட நில உபயோகம் மற்றும் இத்திட்டத்தில் உள்ளடக்கிய வளர்ச்சி விதிகள் பொதுமக்களுக்கும் அபிவிருத்தியாளர்களுக்கும் 18 ஆண்டுகளுக்குப் பின் ஆறுதல் அளித்தது.

★ இரண்டாம் முழுமைத்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும், செயலாக்குவதற்காகவும், அறிவுரை வழங்கவும் துறைவாரியான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ இரண்டாம் முழுமைத்திட்டத்தின் அடிப்படையில் வில்லிவாக்கம், வேளச்சேரி, அம்பத்தூர், நாசரத்பேட்டை மற்றும் பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த விரிவான வளர்ச்சித் திட்டத்தினைத் தயாரிக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை துவங்கியுள்ளது.

★ பெருநகர்ப் பகுதியில் உள்ள பாரம்பரியமிக்க கட்டடங்கள் மற்றும் பகுதிகளைப் பாதுகாக்க முதல் முறையாக சட்டபூர்வமாக்கி வளர்ச்சி விதிகளில் வழிவகை செய்யப்பபட்டுள்ளது. மேலும் பாரம்பரியமிக்க கட்டடங்களைத் தெரிவு செய்யவும், மதிப்பிடவும், பட்டியலிடவும் பாரம்பரிய பாதுகாப்புக் குழு சட்டபூர்வமாக அமைக்கப்பட்டுள்ளது.

★ குறைந்த வருவாயினருக்காக தேவையான எண்ணிக்கையில் வீடுகள் உருவாக்க அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது. இந்தச் செயல்முறையில் தனியார் அபிவிருத்தியாளர்களையும் பங்குபெறச் செய்து உள்ளடக்கிய அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக மனைப்பிரிவு வளர்ச்சிகளில் 10% மனைகள் மற்றும் அடுக்குமாடி வளர்ச்சிகளில் 10% கட்டடப் பரப்பினையும் குறைந்த வருவாயினருக்காக ஒதுக்கீடு செய்ய வளர்ச்சி விதிகளில் வழிவகை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

★ குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் வீட்டுவசதி அளிக்க தனியாரின் பங்களிப்பை ஈர்க்கும் வகையில் 2010ஆம் ஆண்டு முதல் 30 ச.மீ. தளப்பரப்பிற்கு அதிகமாகாத பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவு குடியிருப்புகளுக்கு, தளப்பரப்பு குறியீட்டில் 50% கூடுதலாகவும், 50 ச.மீ. தளப் பரப்பிற்கு அதிகமாகாத குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளுக்கு தளப்பரப்பு குறியீட்டில் 30% கூடுதலாகவும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ தனியார் தங்களின் நிலங்களை சாலை அகலப்படுத்துதல், துரித இரயில் திட்டம் போன்ற பொது திட்டங்களுக்காக தானாக முன் வந்து ஒப்படைக்க ஏதுவாக வளர்ச்சி உரிமை மாற்றம் என்ற புதிய கொள்கை சென்னையில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான ஈட்டுத்

தொகையுடன் ஒப்பிடும் போது இந்த நில உரிமை மாற்றம் நில உரிமையாளருக்கு அதிக இலாபம் தருவதாக இருக்கும்.

★ கட்டமைப்பு வசதிகளுக்கான நிதியாதாரங்களைப் பெருக்கும் பொருட்டு ஊக்க தளப்பரப்பு குறியீடு அனுமதியளிக்கப்படுகிறது. நில மதிப்பில் ஊக்கத் தொகை வசூலிக்கும் இத்திட்டம் 2009 முதல் சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ சென்னைப் பெருநகர்ப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கவும் அதன்மூலம் முதலீடுகளையும் வேலைவாய்ப்பினையும் பெருக்கவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் போக்குவரவு மற்றும் போக்குவரத்துத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ சென்னைப் பெருநகர்ப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த போக்குவரவுத் திட்டம் ஆகஸ்ட் 2008இல் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு அமைச்சர், (நகர்ப்புர அபிவிருத்தி துறை) அவர்களின் தலைமையிலான உயர்மட்டக் குழு இத்திட்டத்தின் செயலாக்கத்தை வழிகாட்டி கண்காணிக்கிறது.

★ சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான போக்குவரவு ஆய்வு ரூ.1.60 கோடி மதிப்பில் துவங்கப்பட்டு முடிக்கப்பட்டது. இந்த ஆய்வு போக்குவரவு மேம்பாட்டிற்கான 16 ஆண்டுகளில் ரூ.88,000 கோடி முதலீடு செய்ய பரிந்துரை செய்துள்ளது.

★ முழுமைத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளிவட்ட சாலை திட்டமிடப்பட்டுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிலம் கையகப்படுத்தப்பட்டது. முதல் கட்டமாக வண்டலூர் முதல் நெமிலிச்சேரி வரையிலான 30 கி.மீ. நீள சாலையினை அமைக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

★ வேளச்சேரி முதல் புனித தோமையார் மலை வரையிலான 5 கி.மீ. நீள திரளான போக்குவரத்துத் திட்டம் பகுதி II நீட்டிப்பினை ரூ.496 கோடி மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

★ சென்னைப் பெருநகர்ப் பகுதியில் கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கான முதலீட்டினை ஒருங்கிணைந்த முறையில் திட்டமிட்டு வழிகாட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் செயலாக்குவதற்கான திட்டமாகும். சென்னைப் பெருநகர்ப் பகுதியில் 2006 முதல் 2010 வரை ரூ.4,800 கோடி மதிப்பீட்டில் கட்டமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ சென்னைப் பெருநகர்ப் பகுதியிலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள அடிப்படை வசதிகளையும் சுற்றுச்சூழல்களையும் மேம்படுத்த உள்ளாட்சி உதவி நிதி மற்றும் சமுதாய அடிப்படையிலான சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் உள்ளாட்சிகளில் செயல்படுத்துவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் ரூ.14.09 கோடி மதிப்பிலான திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.10.66 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

★ சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலைய வளாகத்தில் ரூ.17 கோடி மதிப்பீட்டில் சுமார் 3,000 இரு சக்கர வாகனங்கள் நிறுத்த இரண்டடுக்கு வளாகம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

★ கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தில் கூடுதல் வசதியாக சரக்குந்து நிறுத்துமிடம் 7.62 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.5.60 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வளாகம் டிசம்பர் 2010இல் துவக்கி வைக்கப்படும்.

★ கருணாகரசேரியில் வெளிவட்ட சாலையினை ஒட்டி சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் சரக்குந்து வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ தற்பொழுது 4.72 ஏக்கர் நிலப் பரப்பில் உள்ள சென்னை நகர ஒப்பந்தப் பேருந்து நிலையத்தினை 10 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 300 பேருந்துகள் நிறுத்துவதற்கு ஏற்ப அனைத்து நவீன வசதிகளுடன் விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

★ தரமணி, பெருங்குடி மற்றும் வேளச்சேரி துரித இரயில் நிலைங்களின் மேல் வணிக வளாகங்கள் தனியார் பங்கீட்டுடன் அமைக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

★ சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும நோக்கத்தின் ஒரு பகுதியான, சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கு மற்றும் இவற்றைப் பற்றி தெளிவுறச் செய்யும் நோக்குடன் பங்கீட்டாளர்களை ஈடுபடுத்தி 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 மற்றும் 5

தேதிகளில் அரசுத் துறைகள் / நிறுவனங்கள் கல்வியாளர்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியோரின் முழுமையான பங்களிப்புடன் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

★ பொதுமக்களுக்குத் தரமான மற்றும் குறித்த நேரத்தில் சேவை அளிக்கும் பொருட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. தேசிய தகவல் மையத்தின் துணை கொண்டு இச்சேவை செய்யப்பட்டுள்ளது.

★ விரிவான வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் இரண்டாவது முழுமைத் திட்டம் ஆகியவற்றின் நில உபயோக வரைபடங்கள் டிஜிட்டல் படிவத்தில் தயார் செய்யப்பட்டு பொதுமக்கள் நேரடியாக இத்தகவல்களைப் பெறும்பொருட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வலைதளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

★ அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடங்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கும் வகையில் வலைதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ கணினி மூலம் பல அடுக்குமாடி கட்டடங்கள் உட்பட அனைத்து வகைக் கட்டடங்களுக்கான மனை வரைபட ஒப்புதலுக்கான விண்ணப்பங்களை விரைவாகப் பரிசீலனை செய்வதற்கு ஏதுவாக புதிதாக மென்பொருள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**நகர் ஊரமைப்புத் துறை**

★ நகரங்களை உள்ளடக்கி பெரியளவில் தயாரிக்கப்படும் முழுமைத் திட்டம், திட்டப் பகுதியில் வரன்முறை வழிகாட்டுதலின் அடிப்படையில் வளர்ச்சியை முறைப்படுத்தப்படுகிறது. பொதுநோக்கில் நிலஉபயோகம், போக்குவரத்துக் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், புறவழிச்சாலை மற்றும் சுற்றுச்சாலை உத்தேசத்தினை ஏற்படுத்துதல் போன்றவைகளாகும்.

(1) நகரின் மரபுரிமையைப் பாதுகாத்தல்.

(2) அபாயகரமான வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்.

(3) நீர்வளம், மலை, காடுகள் வளம் போன்ற இயற்கை வளத்தைப் பாதுகாத்தல்.

(4) ஒவ்வொரு நிலத்தின் பயன்பாட்டை சிறந்த முறையில் உபயோகப்படுத்துதல்.

(5) வளர்ச்சிக் கட்டுப்பாடு விதி அடிப்படையில் நிலஉபயோகப் பகுதியைக் கொண்டு வளர்ச்சியை முறைப்படுத்தல்.

★ பெரம்பலூர் முழுமைத் திட்டம் அகமதாபாத்தில் உள்ள வானவியல் பயன்பாட்டு மையத்தைக் கொண்டு முழுவதுமாக புதிய தொழில்நுட்ப அடிப்படையில், புவியியல் தகவல் தொழில்நுட்ப அறிவியலைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீபெரும்புதூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், அரியலூர் உள்ளூர்த் திட்டக் குழுமம், மாமல்லபுரம் உள்ளூர்த் திட்டக் குழுமம் ஆகிய மூன்றிற்கும் முழுமைத் திட்டத்தை அண்ணா பல்கலைக்கழக தொலையுணர்வு மையத்தால் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட உள்ளது.

★ விரிவான மேம்பாட்டுத் திட்டம், பகுதி வாரியான மேம்பாட்டுத் திட்டம் (Micro Level Plan) மாநகரத்தில் முழுமைத் திட்டத்தை தொடர்ந்து அதிகளவில் வளர்ச்சி அடையும் பகுதிகள் கண்டறியப்பட்டு விரிவான மேம்பாட்டுத் திட்டம் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. முழுமைத் திட்டப் பகுதிகளில் பெருந்திட்டத்தில் கண்டறியப்பட்ட பகுதிகளுக்கு விரிவான மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படும். இங்கு பெரிய அளவில் மேம்பாடு, மறு மேம்பாடு பகுதி, வளர்ச்சி அடையும் பகுதி அல்லது முன்னேற்றப் பகுதி மேற்கொள்ளப்படும். பொதுவான நோக்கங்கள் தரம் ஆகியவற்றின் வரையறை அடிப்படையிலும் பொதுவான வளர்ச்சி மற்றும் பொதுப் பணிகள் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்கேற்ப மனைப் பிரிவுகள், வாகனங்களின் தன்மை மற்றும் பாதசாரிகளுக்கான நடைபாதை ஆகியவற்றின் அடிப்படையிலும் விரிவான அபிவிருத்தித் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. இதுவரையில் 1,328 விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள், இணக்கம் (361), ஒப்புதல் (795), மறுஆய்வு இணக்கம் (125) மறுஆய்வு ஒப்புதல் (47) கடந்த காலங்களில் தயார் செய்யப்பட்டுள்ளது.

★ போக்குவரத்து மேலாண்மைத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாநகராட்சி / நகராட்சியிலும் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள 75% (அதிகபட்சமாக மாநகரங்களுக்கு ரூ.50 இலட்சம், நகராட்சிக்கு ரூ.25 இலட்சம்) நகர் ஊரமைப்பு வாரிய நிதியிலிருந்து மானியமாக வழங்கப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 25% தொகையினை உள்ளாட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளும். அதனடிப்படையில், இதுவரையில் 21 நகராட்சிகள் / மாநகராட்சிகளுக்கு ரூ.1,34,44,300 நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து உள்ளாட்சிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–2009ஆம் ஆண்டில், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திருமங்கலம் நகராட்சிகளுக்கு முறையே ரூ.5 இலட்சம், ரூ.15 இலட்சம் மற்றும் ரூ.8 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 2009–10ஆம் ஆண்டில், கோவில்பட்டி, பொள்ளாச்சி, வேலூர் ஆகிய நகரங்களிலிருந்து முறையே ரூ.5 இலட்சம், ரூ.25 இலட்சம் மற்றும் ரூ.10.92 இலட்சம், இத்திட்டத்தின் கீழ் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டுள்ளது.

★ மேலும், 2008–09 மற்றும் 2009–10ஆம் ஆண்டுகளில், ராசிபுரம், திருவள்ளூர், நாமக்கல், சிவகாசி, பொள்ளாச்சி மற்றும் ஆரணி ஆகிய நகராட்சிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கும் வகையில், திட்டத்தினை செயல்படுத்த நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

★ 2006–07ஆம் ஆண்டில், மேற்படி திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதி வளர்ச்சியை மேம்படுத்த ரூ.10.46 இலட்சம் காரைக்குடி நகரத்திற்கும், 2007–08ஆம் ஆண்டில், போடிநாயக்கனூர் நகரத்திற்கு ரூ.16.38 இலட்சமும் விடுவிக்கப் பட்டுள்ளது. 13.02.07இல் வெளியிடப்பட்ட அரசாணையில், 75 சதவீத திட்ட மதிப்பு, அதிகபட்சம் ரூ.30 இலட்சம் மேற்படி திட்ட அபிவிருத்திக்காக அரசால் வழங்கப்படுகிறது. மேலும், 2008–09ஆம் ஆண்டிற்கு, பொள்ளாச்சி, தேனி மற்றும் அல்லி நகரம் ஆகிய நகரங்களுக்கு தலா ரூ.30 இலட்சத்திற்கான கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

★ பூங்கா மற்றும் விளையாடுமிட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து 90 சதவீத திட்ட மதிப்பு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இருப்பினும், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தினை மேம்படுத்த சிறப்பு நேர்வாக ரூ.27.50 இலட்சத்தினை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ், ரூ.73,58,453ஐ, 38 உள்ளாட்சிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–09 மற்றும் 2009–10 ஆகிய ஆண்டுகளில், நிலக்கோட்டை, பட்டிவீரன்பட்டி, கோவில்பட்டி, சின்னாளப்பட்டி, காவேரிப்பாக்கம், தாராபுரம் மற்றும் வடவல்லி ஆகிய நகரங்களில் மொத்தம் ரூ.19.75 இலட்சம் பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2008–09ஆம் ஆண்டில், ரூ.1.25 இலட்சம் பட்டுக்கோட்டை நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ புராதன நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து, அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒவ்வொரு புராதன நகரத்திற்கும் வழங்கப்பட்டுவருகிறது. 2006–07ஆம் ஆண்டில், நாகூர், கங்கைகொண்டசோழபுரம், பிச்சாவரம், பவானி, நவதிருப்பதி, சித்தன்னவாசல், இடைக்காட்டூர் ஆகிய நகரங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2007–08ஆம் ஆண்டில், திருவள்ளூர், மருதூர் ஆகிய நகரங்களுக்கும், 2008–09ஆம் ஆண்டில், விராலிமலை மற்றும் 2009–10இல் சேதுக்கரை, மரக்காணம், தஞ்சாவூர், தரங்கம்பாடி, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டில், கும்பகோணம், திருநெல்வேலி, மரக்காணம், கன்னியாகுமரி ஆகிய புராதன நகரங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2009–10ஆம் ஆண்டில், மேற்படி திட்டத்தை திருமயம், பத்மநாபபுரம் ஆகிய நகரங்களில் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

★ பொதுமக்களின் வசதிக்கேற்பவும், திட்ட அனுமதி வழங்குதலில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும், அரசு இத்துறையில் மின் ஆளுகையை எல்காட் உதவியுடன் செயல்படுத்திட ரூ.40 இலட்சம் அனுமதித்துள்ளது. மேற்காண் தொகை, எல்காட்டிற்கு வழங்கப்பட்டு மென்பொருள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்துறையின் இணையதளம் தேசிய தகவல் மைய உதவியுடன் 09.03.10அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மின் ஆளுமை தொடர்ந்து தேசிய தகவல் மையம் மற்றும் எல்காட் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ அரசால் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டம், நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றை இணையதளத்தில் வெளியீடு செய்ய ரூ.21 இலட்சம் எல்காட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 1,060 வரைபடங்களை கணினிமயமாக்குவதன் மூலம் இணையதளத்தில் காண முடியும். ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் இத்துறையின் தலைமை அலுவலகத்தை

நவீனப்படுத்த அரசால் நிதிஉதவி அளிக்கப்பட்டு, 90 விழுக்காடு பணிகள் முடிவு பெற்று தலைமை அலுவலகம் முழுவதும் கணினியால்(Local Area Network) இணைக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் முழுமைத் திட்ட வரைபடங்களின் நகல்கள் (108) இத்துறை இணையதளத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. நிலுவையிலுள்ள கோப்புகளின் விவரமும் இணையதளத்தில் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகிறது.

★ திருச்சி மண்டல அலுவலகமானது, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 3 மண்டல அலுவலகங்களாகவும், வேலூர் மண்டல அலுவலகமானது, தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய 2 மண்டல அலுவலகங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் புதிய மண்டலங்களாக இயங்கி வருகின்றன.

★ 13.5.2006 முதல் 31.3.2010 வரையில், இத்துறையின் இளநிலை உதவியாளர் முதல் உதவி இயக்குநர் வரையிலான 112 நபர்களுக்கு கருணை அடிப்படை, வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளது.

★ டிசம்பர் 2009 வரை, ரூ.186 கோடி உள்கட்டமைப்பு வசதிகள் கட்டணமாக இத்துறையில் வசூலிக்கப்பட்டு, தனிவைப்புக் கணக்கு–IIஇல் வைக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் டிசம்பர் 2009 வரை, ரூ.340 கோடி உள்கட்டமைப்பு வசதி கட்டணம் வசூலிக்கப்பட்டு, தனி வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புத் துறை மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மொத்தம் ரூ.562 கோடி 31.3.10 வரை வசூலிக்கப்பட்டுள்ளது.

★ ஜூன் 2010, கோயம்புத்தூரில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கென மாநில உட்கட்டமைப்பு வசதி நிதியிலிருந்து ரூ.26.31 கோடி கோயமுத்தூர் நகராட்சிக்கு சாலைகள் மேம்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது.

★ மேலும், ரூ.10 கோடியை ஜூன் 2010இல் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் எதிர்பாராத செலவினங்களாக மேற்படி நிதியிலிருந்து கோவை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது.

★ நகர் ஊரமைப்புச் சட்டம். 1971, இத்துறையால் நடைமுறைபடுத்தப்படுகிறது. தற்போதைய மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் விரைவான மாற்றங்கள் நகர்ப்புரங்களில் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, உடனடியாக நகர் ஊரமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்ய முடிவெடுத்தது. நீதியரசர் திரு. எஸ்.மோகன் (ஓய்வு) அவர்கள் தலைமையில் மறு ஆய்வு செய்ய குழு நியமிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

★ மனைப்பிரிவு / கட்டடங்கள் போன்றவற்றின் ஒப்புதலுக்கு சென்னை தலைமை அலுவலகத்திற்கு தமிழ்நாடு முழுவதிலுமிருந்து வருகை தரும் மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறைக்கும் வகையில், நகர் ஊரமைப்பு ஆணையரால் வழங்கப்படும் ஒரு சில ஒப்புதல்கள் மண்டல துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் அவர்களுக்கு உள்ளூர் அளவிலேயே ஒப்புதல் பெறும் வகையில் நகர் ஊரமைப்பு ஆணையரின் சுற்றறிக்கை வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

★ ★ ★



# அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மானிய விலையில் மளிகைப் பொருட்கள்

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
திரு. **எ.வ.வேலு** அவர்கள்

★ சிறப்புப் பொது விநியோக திட்டத்தின் கீழ் பருப்பு வகைகள், பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மற்றும் மளிகைப் பொருட்கள் மானிய விலையில் வழங்க ஏதுவாக அரசு 2005-2006இல் ரூ.1,200 கோடியாக இருந்த மானியத்தை 2009-2010ஆம் ஆண்டில் ரூ.4,000 கோடியாக அதிகரித்துள்ளது.

★ பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு நிர்ணயித்துள்ள அரிசியின் விலையை விட குறைவான விலையில் அட்டைதாரர்களுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.1 வீதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.09.2008 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவில், தமிழ்நாட்டில் மட்டுமே பொது விநியோகத் திட்டம் மூலம் இவ்வாறு குறைவான விலையில் அரிசி வழங்கப்படுகிறது.

★ அத்தியாவசியப் பொருட்களின் வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் அறிவிக்கப்பட்டு, சென்னை நகரில் 14.04.2007 அன்றும் பிற மாவட்டங்களில் 01.05.2007 அன்றும் தொடங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின் செயலாக்கத்தை ஜூன் 2011 வரை நீட்டித்து அரசு ஆணையிட்டது. பிப்ரவரி 2008 முதல் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகள் மூலம் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு விற்பனை துவக்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரருக்கு ஒரு கிலோ பொட்டலம் ரூ.11 என்ற விலையில் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு வழங்கப்படுகிறது. 02.10.2008 முதல் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ரூ.50க்கு மானிய விலையில் 10 மளிகைப் பொருட்கள் அடங்கிய பொட்டலம் நியாய விலைக் கடைகள் மூலம் இவற்றை வாங்க விரும்பும் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படுகிறது.

★ 31.03.2010 வரை துவரம் பருப்பு 2,25,058 டன்னும், உளுத்தம் பருப்பு 1,03,844 டன்னும், பாமாயில் 2,39,232 கிலோ லிட்டரும், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு 66,602 டன்னும், ரவை 9,789 டன்னும் மற்றும் மைதா 34,275 டன்னும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மானிய விலையில் மளிகைப் பொருட்கள் 1,79,15,594 பொட்டலங்கள் குடும்ப அட்டைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

★ 9.8.2006 முதல் 31.3.2010 வரை 15,71,443 அட்டைகள் தகுதியான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ அரவாணிகளும் சமுதாயத்தில் ஒரு அங்கம் என அவர்களுக்கு அங்கீகாரமளித்து இவ்வரசு தனி நபராக இருந்தாலும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அரவாணிகள் சேர்ந்து வசித்தாலும் அவர்களுக்கு அட்டை வழங்கி வருகிறது. 31.3.2010 வரை இந்த அரசு அரவாணிகளுக்கு 991 குடும்ப அட்டைகளை வழங்கியுள்ளது.

★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் அனைத்துப் பொது விநியோக கடைகளுக்கும் மின்னணு எடை இயந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 1,592 நியாய விலைக் கடை மற்றும் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களில் கையடக்க மின்னணு பட்டியல் இயந்திரம் (Electronic Billing Machine) வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழகத்திலுள்ள 28,000 நியாய விலைக் கடைகளில் சரக்கிருப்பு விவரம் தினசரி எஸ்.எம்.எஸ். தகவல் மூலம் சேகரிக்கப்படுகிறது. இந்த வசதி அரசின் பொது விநியோகத் திட்டத்தின் நிருவாகத்திற்காக பயன்படுத்தப்படுவதோடு, குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் நியாய விலைக் கடையில் உள்ள பொது விநியோகப் பொருட்களின் அன்றைய இருப்பு விவரத்தை எஸ்.எம்.எஸ். தகவல் அனுப்பி பெறும் வசதியையும் பெறமுடிகிறது.

★ 2006-2007இல் ரூ.60 கோடி செலவில் 3 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2007-2008ஆம் நிதியாண்டில் 8 இலட்சம் இணைப்புகளும் மற்றும் 2008-2009ஆம்

நிதியாண்டில் 6 இலட்சம் இணைப்புகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. 2009–2010 நிதி ஆண்டிற்கு இம்மாநிலத்திற்கு இத்திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக 6 இலட்சம் இணைப்புகளை மைய அரசு விடுவித்துள்ளது. பயனாளிகளைத் தேர்வு செய்யும் பணி மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ், 17 இலட்சம் இணைப்புகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அரசு இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.521.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

★ மார்ச் 2010 வரை 4,379 பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் 1,76,241 மனுக்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட மனுக்களில் இதுவரை 1,54,055 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

★ பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ், கரீப் பருவம் 2008–2009இல் 17,90,300 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கரீப் பருவம் 2009–2010இல் 31.3.2010 வரை 12,41,767 மெ.டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி அனைத்து கொள்முதல் நிலையங்களிலும் மின்னணுத் தராசு வழங்கப்பட்டுள்ளது.

★ நெல் கொள்முதலை ஊக்கப்படுத்த சென்ற ஆண்டு (கரீப் பருவம் 2008–2009) மாநில அரசு வழங்கிய அடிப்படை ஆதார விலையைக் காட்டிலும் சன்னரக நெல் மற்றும் சாதாரக நெல்லுக்கு முறையே குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத் தொகையாக ரூ.70 மற்றும் ரூ.50 வழங்கி தற்போது சன்னரக நெல்லுக்கு ரூ.1,100, சாதாரக நெல்லுக்கு ரூ.1,050 என்ற விலையில் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

★ நுகர்வோர் கோரிக்கை/புகார்களைத் தீர்வு செய்யவும், கலந்தாய்வு செய்யவும் அனைத்து மாநிலங்களும் மாநில நுகர்வோர் சேவை மையம் அமைக்க இந்திய அரசு அறிவுறுத்தலின் பேரில் மாநில நுகர்வோர் சேவை மையம் என்ற அமைப்பினை இந்திய அரசு வழங்கிய மானியத் தொகை ரூ.27.60 இலட்சத்தைக் கொண்டு தமிழ்நாடு அரசு 02.11.2009இல் தொடங்கியுள்ளது. இந்த சேவை மையத்தில் 02.11.2009 முதல் 31.3.2010 வரை 26,654 அழைப்புகள் வந்துள்ளன. அவற்றில் 13,312 பதிவு செய்யப்பட்ட ஒலித்தகவல் கேட்டோரின் அழைப்புகளாகும். மீதம் உள்ள 13,342 அழைப்புகளில் 9,732 அழைப்புகள் மீது உடனடி தீர்வு காணப்பட்டுவிட்டன. 3,610 அழைப்புகள் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டிய இனங்களாகும். 13,342 புகார்களில் 72% பொது விநியோகத் திட்டம் குறித்ததாகும். 17% சேவை தொடர்புடையதாகும். 3.5% வெளிச்சந்தை தொடர்புடையதாகும். 7.5% மற்ற பொருட்கள் தொடர்புடையதாகும்.

★ போலி குடும்ப அட்டைகளை முற்றிலும் களையும் நோக்கத்துடனும் குடும்பத்திலுள்ள நபர்களையும் குடும்ப அட்டையிலுள்ள விவரங்களையும் மேம்படுத்தும் நோக்கத்துடனும், முதற்கட்டமாக மூன்று மாவட்டங்களில் போலி குடும்ப அட்டைகள் களையும் பணி 1.7.2008இல் துவக்கப்பட்டு மொத்தம் 2,00,272 போலி குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 10 மாவட்டங்களில் போலி குடும்ப அட்டைகள் களையும் பணி 15.10.2008இல் துவக்கப்பட்டு மொத்தம் 4,38,581 போலி குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக 14 மாவட்டங்களில் போலி குடும்ப அட்டைகள் களையும் பணி 1.8.2009இல் துவக்கப்பட்டு மொத்தம் 8,64,804 குடும்ப அட்டைதாரர்கள் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதவர்கள் என கண்டறியப்பட்டு அவர்களுக்கு பொருள் நிறுத்தம் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நான்காம் கட்டமாக 5 மாவட்டங்களிலும் மற்றும் சென்னையில் 15 மண்டலங்களிலும் போலி குடும்ப அட்டைகள் களையும் பணி 1.9.2009இல் துவக்கப்பட்டு மொத்தம் 5,63,717 குடும்ப அட்டைதாரர்கள் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதவர்கள் என கண்டறியப்பட்டு அவர்களுக்கு பொருள் நிறுத்தம் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ ★ ★



# நகர்ப்புரங்களில் புதிய குடியிருப்புகள்

மாண்புமிகு குடிசைமாற்று வாரியம் (ம)
இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. **சுப.தங்கவேலன்** அவர்கள்

- ★ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2006 முதல் 2011 வரையிலான காலத்தில் சுமார் 82,145 குடியிருப்புகள் ரூ.3,000 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- ★ இதுவரை 46,650 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன மற்றும் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 35,495 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- ★ சுனாமி ஆழிப்பேரலைகள் மற்றும் எண்ணூர் விரைவுச் சாலை விரிவாக்கப்பணிகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக 1,824 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.35.03 கோடி செலவில் திருவொற்றியூர் பகுதியில் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது.
- ★ 11,520 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் ரூ.570.72 கோடி செலவில் அமைக்கும் திட்டத்தின் கீழ் 3,200 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ.205 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும் 4,744 குடியிருப்புகள் கட்டும்பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- ★ சென்னையில் ரூ. 95.94 கோடி மதிப்பிலான 7,506 வீடுகள் ஒக்கியம் துரைப்பாக்கம், தாழாங்குப்பம் எச். எல். எல். திலகர் நகர் பகுதிகளில் கட்டப்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ★ தமிழகத்தின் 8 கடலோர மாவட்டங்களில் உள்ள நகரப்பகுதிகளில் கடற்கரைக்கு அருகே சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்படக் கூடிய இடங்களில் வாழும் குடும்பங்களுக்கு 7,738 வீடுகள் ரூ.287.08 கோடி செலவில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு 6,395 வீடுகள் ரூ.237.25 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன மற்றும் முன்னேற்றத்தில் உள்ளன.
- ★ சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வியல் ஆதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு ஆசிய வங்கி உதவியுடன், 400 சுய உதவி குழுக்களும் அக்குழுவின் மூலம் அவர்களின் வாழ்வு ஆதாரங்களை மேம்படுத்த ரூ.5.43 கோடி செலவில் வேலைவாய்ப்புப் பயிற்சிகள் மற்றும் சுய தொழில்கள் தொடங்குதல் போன்ற பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- ★ தமிழகத்தின் நகரப் பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு குடியிருப்புகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.250 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டது. 12ஆவது நிதிக்குழு சிறப்பு மானியத் திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் இதர நகரங்களில் 9,711 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.
- ★ சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து மீண்டும் அப்பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 1,722 குடியிருப்புகள் புதியதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1,644 குடியிருப்புகள் புதியதாக கட்டும் பணி பல்வேறு கட்டத்தில் முன்னேற்றத்தில் உள்ளது.
- ★ ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ், சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களை குடிசைப்பகுதிகளற்ற நகரங்களாக 2013ஆம் ஆண்டுக்குள் மேம்படுத்தும் பொருட்டு முதற்கட்டமாக இந்நகரங்களில் 35,270 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1,504.05 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் 4,325 குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள குடியிருப்புகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.
- ★ நகரங்களில் உள்ள குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், கான்கிரீட் நடைபாதைகள், தெரு மின் விளக்கு, குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் போன்ற மேம்பாட்டுப் பணிகள் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.32.23 கோடி செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.
- ★ சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் 12,532 குடும்பங்களுக்கு குடிசைப்பகுதி மேம்பாட்டு மற்றும் குடியிருப்புத் திட்டப்பகுதிகளில் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ★ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் ஆகஸ்ட் 2008 முதல் மார்ச் 2010 வரை 261 நபர்கள் புதியதாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ ★ ★



# புதிய மாணவ, மாணவியர் விடுதிகள் தொடக்கம்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்கள்

★ 2006–2007 ஆம் ஆண்டு முதல் 2009–2010ஆம் ஆண்டு வரை 41,29,120 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித்தொகை 361 கோடியே 7! இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

★ அரசுப் பள்ளிகளில் பயின்று 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மாணவ மாணவியர் தலைசிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து +1 பயில நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 1,466 மாணவ மாணவியருக்கு மொத்தம் ரூ.281.23 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

★ மத்திய அரசின் நூறு விழுக்காடு நிதி உதவியுடன் தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை 2007–08ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 5,024 மாணவ / மாணவியருக்கு ரூ.13.14 கோடி அளவிற்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

★ மத்திய அரசின் நூறு விழுக்காடு நிதி உதவியுடன் பதினோராம் வகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை (ITI, ITC, NCVT, Polytechnic உட்பட) பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை 2007–08ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 37,192 மாணவ, மாணவியருக்கு ரூ.14.18 கோடி அளவிற்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ 75:25 என்ற அளவில் மைய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 1,08,285 மாணவ, மாணவியருக்கு ரூ.13.40 கோடி அளவில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டு முதல் மாணவ, மாணவியருக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள், தந்தை பெரியார் நினைவு விருது, பேறிஞர் அண்ணா நினைவு விருது ஆகியவற்றிற்கான பரிசுத்தொகை உயர்த்தப்பட்டதுடன் இப்பரிசுகள் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு தனியாகவும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு தனியாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 4,310 மாணவ, மாணவியருக்கு ரூ.1,58,55,000 பரிசாக வழங்கப்பட்டது.

★ தமிழை முதன்மைப் பாடமாகப் பயின்று 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் சிறந்த 3 மாணவர்கள் மற்றும் 3 மாணவியருக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2008–09 முதல் 2009–10 வரை மொத்தம் ரூ.14.23 இலட்சம் செலவில் 886 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.

★ சட்டப்பேரவையில் 05.04.2007 அன்று அறிவிக்கப்பட்டதற்கிணங்க உருது மொழியைப் பாடமாகப் பயின்று 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் 3 மாணவர் மற்றும் 3 மாணவியருக்கு முதல், இரண்டு மற்றும் மூன்று பரிசுகள் முறையே வழங்கப்பட்டு வருகிறது. 2008–09 முதல் ரூ.42,000 செலவிடப்பட்டு 24 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.

★ கடந்த நான்காண்டுகளில் 6 கோடியே 64 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்காக 126 விடுதிகள் புதியதாகத் தொடங்கப்பட்டன.

★ 502 பிற்படுத்தப்பட்டோர், 287 மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் 120 சீர்மரபினர் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு ரூ. 66,02,000 செலவில் மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

★ ரூ.78,11,000 செலவில் 818 விடுதிகளுக்கு 1 HP மோட்டர் பம்புகளுடன் குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் வழங்கப்பட்டன.

★ விலைவாசி உயர்வினைக் கருத்தில் கொண்டு பள்ளி மாணவர்களுக்கான உணவு கட்டணத்தை ரூ.400லிருந்து ரூ.450ஆகவும் கல்லூரி மாணவர்களுக்கான உணவு கட்டணத்தை ரூ. 500லிருந்து ரூ. 550 ஆகவும் கடந்த 1.11.2008 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவிருக்கு வழங்கப்பட்ட பல்வகைக் கட்டணத் தொகையை 2007–08ஆம் ஆண்டு முதல் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.15லிருந்து ரூ.25ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.15லிருந்து ரூ.35ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ விடுதி மாணவ, மாணவியருக்குப் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்க நபர் ஒருவருக்கு பண்டிகை ஒன்றுக்கு கல்லூரி விடுதிக்கு ரூ.3 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ. 18–ம், பள்ளி விடுதிக்கு நபர் ஒருவருக்கு பண்டிகை ஒன்றுக்கு ரூ. 2 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.12ம் அனுமதிக்கப்படுகிறது.

★ 2 இலட்சத்து 50 ஆயிரத்து 768 மாணவ மாணவியர்களுக்கு 2 ஜோடி சீருடைகள் இலவசமாக 11 கோடியே 10 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டன.

★ ரூ.58.34 கோடி அளவிற்கு நூறு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுச் செவ்வனே பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ ரூ.5.19 கோடி அளவிற்கு விடுதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ 2007–08 ஆம் ஆண்டில் 1,211 விடுதி மாணவ மாணவியரின் நலனுக்காக பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு ரூ.7,28,000 செலவில் முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ தடையற்ற மின்சாரம் கிடைக்க ஏதுவாக 2007–08ஆம் ஆண்டில் 125 விடுதிகளுக்கு, ஒரு விடுதிக்கு தலா ரூ.13,936 வீதம் மொத்தம் ரூ.17,42,000 செலவில் இன்வர்ட்டர் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2007–08 ஆம் ஆண்டில் 126 விடுதிகளுக்கு ஒரு விடுதிக்கு தலா ரூ.1,17,936 வீதம் மொத்தம் 1 கோடியே 48 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில், சூரிய ஒளி மூலம் நீரை சூடுபடுத்தும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் இரண்டு கள்ளர் சீரமைப்பு விடுதிகளுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் 2 நீராவி கொதிகலன்கள் (Steam Boilers) வழங்கப்பட்டுள்ளன.

★ 2008–09ஆம் ஆண்டில் 65,452 விடுதி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் 49 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ 1 இலட்சத்து 27 ஆயிரத்து 721 மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 92 இலட்சத்து 67 ரூபாய் செலவில் படுக்கை விரிப்புகள் மற்றும் கோரைப் பாய்கள் வழங்கப்பட்டன.

★ 2009–10ஆம் ஆண்டில் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கைக்கு கூடுதலாக 4,000 இடங்கள் நிரந்தர அடிப்படையில் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ 2009–10ஆம் ஆண்டில் விடுதிகளில் அமைந்துள்ள நூலகங்களில் புத்தகங்களை சரிவர பராமரிப்பதன்பொருட்டு, முதற்கட்டமாக 128 பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு ஸ்டீல் புத்தக அலமாரிகள் 12 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

★ 2009–2010ஆம் ஆண்டில் விடுதிகளில் பயிலும் மாணவ/மாணவியரின் உடல் நலனை பேணிக் காப்பதின் பொருட்டும், அனைத்து விடுதிகளுக்கும் தலா 2 சதுரங்கப் பலகை, 1 கேரம்போர்டு வீதமும் மற்றும் விளையாட போதுமான இடவசதியுள்ள 300 விடுதிகளுக்கு வலை மற்றும் கைப்பந்து ஆகியன மொத்தம் ரூ. 24 இலட்சத்து 68 ஆயிரம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

★ 2009–2010ஆம் ஆண்டில் விடுதி மாணவ, மாணவியருக்கு சுகாதாரமான உணவு வழங்கும்பொருட்டு, விடுதிகளில் உள்ள சமையல் கூடங்களில் பூச்சி அழிப்பான் மின் கருவிகள் (Electric Flying Insect Killer) 61 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் பொருத்த ஆணையிடப்பட்டு பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது

★ 2009–10ஆம் ஆண்டில் அனைத்து விடுதிகளுக்கும் 21" அளவிலான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் 48 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

★ 225 கணினிகள் 98 இலட்சம் ரூபாய் செலவில் 75 பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் இருந்து பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஒவ்வொரு ஆண்டும், ஆண்டிற்கு 3 முறை இலவசமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது.

★ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் நல விடுதிகளில் மாணவ/ மாணவியர் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு

வருமான வரம்பு ரூ.50,000 லிருந்து ரூ.1,00,000 ஆக உயர்த்தி 28.2.2009இல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

★ 2005–06ஆம் ஆண்டில் புதியதாக துவங்கப்பட்ட 108 விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட 108 தொகுப்பூதிய காப்பாளர் / காப்பாளினி பணியிடங்கள், 108 சமையலர் மற்றும் 108 காவலர் மற்றும் ஏவலர் பணியிடங்கள் ஆகியன 28.12.2007 முதல் சம்பள ஏற்றமுறை பணியிடங்களாக மாற்றி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ விடுதிகளில் பணியாற்றும் 563 சமையலர்கள் மற்றும் காவலர்களின் நீண்ட கால கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, அவர்களின் பணி முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்பட்டுள்ளன. அதே போன்று மிகச் சொற்ப ஊதியத்தில் சில்லரை செலவின முறையில் பல ஆண்டுகள் பணிபுரிந்த 15 சமையலர் / காவலர்களின் பணிகள் வரன்முறை செய்யப்பட்டு சம்பள ஏற்றமுறை பணியிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

★ 2006–07ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டம், கோபாலபுரம், ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஆகிய பகுதிகளில் உள்ள விடுதிகளுக்கு 12 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

★ இஸ்லாமிய மாணவியருக்குப் புதிதாக திருச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதிகளைப் போன்று 250 பள்ளி/ கல்லூரி மாணவியர் தங்கும் வகையில் விடுதிகள் 2008ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

★ இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர்கள் கணினி பழகும் வகையில் பகுதி IIஆம் திட்டத்தின் (2009–10) கீழ் ரூ.10.13 இலட்சம் செலவில் 25 கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2009–10ஆம் ஆண்டில் மேற்படி 5 விடுதிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, ரூ.20 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன.

★ 31.50 இலட்சம் ரூபாய் அளவிற்கு 227 பிற்படுத்தப்பட்டோர் /மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் கல்லூரி விடுதி நூலகங்களுக்கு பாடக்குறிப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

★ 24 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு 1 கோடியே 56 இலட்சத்து 51 ஆயிரம் செலவில் சுற்றுச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

★ 53 அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 67 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் கணினி மற்றும் துணைச் சாதனங்கள் வழங்கப்பட்டன.

★ 2006–07ஆம் ஆண்டில் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கிவரும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 5 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 4 இருக்கைகள் கொண்ட இரும்பு மற்றும் மரத்தால் ஆன 4,650 எண்ணிக்கை சாய்வு மேஜை இணைந்த பெஞ்சுகள் 2 கோடியே 69 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டன.

★ 3 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 6 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன.

★ 2008–09ஆம் ஆண்டில் 19 அரசு கள்ளர் பள்ளிகளுக்குக் கூடுதலாக 19 வகுப்பறைகள் 66 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

★ 7 அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 96 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் செலவில் ஆய்வகங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ கடந்த நான்காண்டுகளில் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை, 15 இலட்சத்து 47 ஆயிரத்து 242 மிதிவண்டிகள் மொத்தம் ரூபாய் 358.07 கோடி செலவில் 11ஆம் வகுப்புகளில் பயின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ கடந்த நான்காண்டுகளில் ரூ.2 கோடியே 39 இலட்சத்து 79 ஆயிரம் செலவில் 9,680 தையல் இயந்திரங்கள் இலவசமாக பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ கடந்த நான்காண்டுகளில் ரூ.3 கோடியே 39 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் 14,497 சலவைப்பெட்டிகள் இலவசமாக பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு வழங்கப்பட்டன.

★ கடந்த 4 ஆண்டுகளில் ரூபாய் 12.78 கோடி அளவில் 21,179 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

★ கடந்த 4 ஆண்டுகளில் 49 ஆயிரத்து 440 வேலையற்ற இளைஞர்களுக்கு ரூ.38.91 கோடி செலவில் வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

- ★ சீர்மரபினர் நல வாரியம் 20.4.2007இல் தோற்றுவிக்கப்பட்டு, 31.3.2010 வரை, இந்நலவாரியத்தில் 20,387 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு, 1,736 நபர்களுக்கு ரூ. 21.14 இலட்சம் செலவில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- ★ தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் 27.05.2008 அன்று ஏற்படுத்தப்பட்டு, 31.3.2010 வரை இந்நலவாரியத்தில் 8,105 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு, 1,022 நபர்களுக்கு ரூ. 21.86 இலட்சம் செலவில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- ★ "வன்னியர் பொதுச்சொத்து நல வாரியம்" தமிழக அரசால் 2.3.2009அன்று அமைக்கப்பட்டது.

- ★ வன்னியர் பொது சொத்துக்கள் தொடர்பாக சுமார் 67 அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டுள்ளன. வாரியப்பணிகளை மேற்கொள்ள 5 பணியிடங்கள் இ.ஆ.ப. நிலையில் உள்ள தனி அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் வகையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 2010–11ஆம் ஆண்டிற்கு இவ்வாரியத்தின் நிருவாகச் செலவிற்காக 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ★ உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 24.08.2009அன்று துவக்கப்பட்டு, இதுவரை இந்த வாரியத்தில் 10,294 உறுப்பினர்களுக்கு (15.4.10 வரை) அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. 27 பயனாளிகளுக்கு ரூ.89,440 செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்தில் உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்கு "உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீடு" திட்டத்தில் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியத்திற்கென 2010–11ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ★ 2006–07 முதல் 2009–2010 வரை இத்துறையில் செயல்படும் விடுதிகளில் காப்பாளர், சமையலர் மற்றும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆசிரியர்களாக கருணை அடிப்படையில் 73 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- ★ பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 30% இடஒதுக்கீட்டிலிருந்து கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கென தனியே 3.5 சதவீத இடஒதுக்கீடு 15.9.2007 முதல் வழங்கப்படுகிறது.

- ★ முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் துவங்குவதற்கு உதவித்தொகையாக தலா ஒரு இலட்சம் வீதம் ரூ.30 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. சங்க வளர்ச்சிக்காக இச்சங்கங்கள் திரட்டும் நிதி ஆதாரத்திற்கு இணையாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் இணை மானியம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டு, இதுவரை 11 மாவட்டங்களுக்கு இணைமானியமாக ரூ.27.83 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

- ★ இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை யினருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ், சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று வெளி வந்த 7 பயனாளிகளுக்கு தலா ரூ.10,000 வீதம் ரூ.70,000 நிதி உதவி 2009–10ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

- ★ மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள இனத்தைச் சேர்ந்தவர்கள் குடியேறியுள்ள பகுதிகளிலேயே அவர்களுக்குரிய சாதிச்சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சாதி சான்றிதழ்கள் பெறுவதில் இருந்து வந்த இன்னல்கள் களையப்பட்டுள்ளது.

- ★ இத்துறையின் நலத்திட்டங்களை விரைந்து செயல்படுத்தும் பொருட்டு ரூ.44,60,000 செலவில் 2007–08ஆம் ஆண்டில் 10 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு 10 ஈப்புகளும், 2008–09இல் மதுரை கள்ளர் சீரமைப்பு மாவட்ட வருவாய் அலுவலருக்கு ரூ.5 இலட்சம் செலவில் ஒரு ஈப்பும் வழங்கப்பட்டன. இதே போன்று மாநில சிறுபான்மையினர் ஆணையத்துக்கு ரூ. 8 இலட்சம் செலவில் புதிய ஸ்கார்பியோ ஈப்பு வழங்கப்பட்டது.

- ★ தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் புதுதில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் குழகத்தின் நிதி உதவி பெற்று, டாப்செட்கோவின் நிதி பங்களிப்புடன் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனி நபர், குழுக்கள் மற்றும் சங்கங்களுக்கு அவர்களது பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடும் வகையில் சிறு தொழில்கள், வியாபாரம் அல்லது திட்டங்கள் தொடங்க குறைந்த வட்டி விகிதத்தில் கடன் உதவி வழங்கி வருகிறது.

- ★ கடந்த நான்கு ஆண்டுகளில் டாப்செட்கோ மூலம் பொதுக்கடன் 2,419 பயனாளிகளுக்கு ரூ.1,020.43 இலட்சம் பொதுக் கடனாகவும், 1,01,749 பயனாளிகளுக்கு ரூ.8,975.43 இலட்சமும் சிறு வணிகக்கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. புதிய பொற்காலத் திட்டம் மூலம் 1,591 நபர்களுக்கு ரூ.245.63 இலட்சமும், நடமாடும் சலவையகம் வைப்பதற்கு 877 நபர்களுக்கு ரூ.43.85 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த 4 ஆண்டுகளில் 7,233 நபர்களுக்கு ரூ.1,032.85 இலட்சம் ஆவின் நிறுவன கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ நீர்பாசனம் அமைப்பதற்கான மானியம் வழங்கும் திட்டத்தின் மொத்தம் 231 நபர்களுக்கு ரூ.114.98 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தனி நபர் கடனாக 6,900 நபர்களுக்கு ரூ.2,826.66 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த 4 ஆண்டுகளில் 873 நபர்களுக்கு ரூ.929.26 இலட்சத்தில் ஆட்டோ வாங்க கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ கறவை மாடுகள் வாங்கிட கடன் வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 146 பயனாளிகளுக்கு ரூ.27.94 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ சிறுவணிகக்கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் 30,220 நபர்களுக்கு ரூ.3,688.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ கல்வி கடனாக 45 நபர்களுக்கு ரூ.32.11 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ மகிளா சம்ரிதி யோஜனா திட்டத்தின்கீழ், இதுவரை 120 நபர்களுக்கு ரூ.5,40,000 வழங்கப்பட்டுள்ளது.

★ தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடம் 85% நிதி உதவி பெற்று மத்திய அரசு பயிற்சி நிறுவனங்கள் மூலம் தோல் மற்றும் காலணி தொழில் மற்றும் இதர பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இதன்மூலம் 540 நபர்களுக்கு ரூ.22.80 இலட்சம் செலவில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

★ வேலையில்லாத சிறுபான்மையின மாணவ, மாணவிகள் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கும் அவர்களது திறனை மேலும் மேம்படுத்தும்வகையில் தகவல் மற்றும் தொழில்நுட்பம், ஆயத்த ஆடை வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு, காலணிகள் வடிவமைப்பு போன்றவற்றில் தொழில்நுட்ப சிறப்புப் பயிற்சித் திட்டம் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு தமிழக அரசின் நிதியுதவி பெற்று ரூ.2.50 கோடி செலவில் 2007–08 முதல் செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம், ரூ.750 இலட்சத்தில் 28,954 நபர்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் நிருவாகச் செலவுகளுக்காக நான்காண்டுகளுக்கு ரூ.2.67 கோடி மானியமாக வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு வக்ஃபு வாரியப் பணியாளர்களுக்கு 6ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட சிறப்பு மானியம் ரூ. 87,72,800ம் அடங்கும்.

★ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்கு மற்றும் வாரியச் சொத்துக்களை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு கடந்த நான்காண்டுகளில் ரூ.2.23 கோடி வழங்கப் பட்டுள்ளது.

★ 2007–2008இல் உலமா ஒய்வூதிய திட்டத்தின் கீழ் ஒய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 2,200லிருந்து 2,400ஆக உயர்த்தப்பட்டது.

★ நிருவாகச் செலவினங்களுக்காக தமிழ்நாடு மாநில ஹஜ்குழுவிற்கு நான்காண்டுகளில் ரூ.40 இலட்சம் வழங்கப்பட்டது.

★ புனித ஹஜ்பயணிகள் சவூதி அரேபியாவில் தங்குவதற்கு ஏற்ற கட்டடங்களைத் தேர்வு செய்வதற்கு கட்டடத் தேர்வு குழுவில் செல்லும் உறுப்பினருக்கான செலவு மற்றும் ஹஜ் தொண்டர்களின் பயணச் செலவுகள் ஆகியவற்றிற்கு கடந்த நான்காண்டுகளில் ரூ. 42.95 இலட்சம் வழங்கப்பட்டது.

★ 2008–09ஆம் ஆண்டில் வல்லநாட்டு செட்டியார், பாண்டிய வெள்ளாளர், சேரகுல வெள்ளாளர் வகுப்புகள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

★ குறும்பக் கவுண்டர், அரயர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தில் மட்டும்) தொரையர் (சமவெளி), தொரையர் (நீலகிரி), எர்ர கொல்லர் (தொட்டிய நாயக்கர் வகுப்பின் உட்பிரிவாக), கன்னியாகுமரி மாவட்ட இலத்தீன் கத்தோலிக்க கிறித்துவ வண்ணார், பணிசெய்வான், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த கிறித்துவ பரதவா வகுப்புகள் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாக அறிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

★ ★ ★



# நெசவாளர் நிலை உயர பல்வேறு நலத்திட்டங்கள்

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்கள்

★ இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ.256 கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளில் 635.08 இலட்சம் சேலைகளும் 633.22 இலட்சம் வேட்டிகளும் ரூ.1,024 கோடி செலவீட்டில் ஆண்டொன்றுக்கு சுமார் 3.18 கோடி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில் ரூ.225.09 கோடி மதிப்பீட்டில் 622.04 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளன.

★ கைத்தறி நெசவாளர்களின் நீண்டநாள் கோரிக்கையான இலவச மின்சாரம் வழங்கக் கோரிய கோரிக்கை இவ்வரசால் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இரு மாதத்திற்கு ஒருமுறை கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட்டுகள் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட்டுகள் வரையிலும் 1.8.2006 முதல் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 1,52,538 கைத்தறி நெசவாளர்களும், 1,16,049 விசைத்தறி தொழிலாளர்களும் பயன்பெற்று வருகின்றனர். கடந்த நான்காண்டுகளில் 2,68,587 பயனாளிகளுக்காக ரூ.256.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ கைத்தறித் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் சிட்டா நூலுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த 2 விழுக்காடு விற்பனை வரி முழுவதுமாக விலக்களிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 6.08 இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர். வரி விலக்கு அளித்ததன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.56 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

★ 60 வயதைக் கடந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஒய்வூதியத் தொகை 1.6.2007 முதல் ரூ.200லிருந்து ரூ.400ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் (31.03.2010 தேதியில்) 15,872 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். கடந்த நான்காண்டுகளில் ரூ.2,453.83 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஒய்வூதியத் தொகை 1.5.2007 முதல் ரூ.350லிருந்து ரூ.550ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31.03.2010 தேதியில் கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்கள் 1,244 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர். கடந்த நான்காண்டுகளில் ரூ.267.52 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மட்டுமே இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த "சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின்" கீழ் கூட்டுறவு அமைப்பில் இல்லாத இதர கைத்தறி நெசவாளர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், கைத்தறித் தொழிலுக்கு தொடர்புடைய உப தொழில்களில் ஈடுபட்டுள்ள கைத்தறித் தொழிலாளர்களுக்கும் 2007–08 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் 3,19,023 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ், குடும்பத்திலுள்ள 4 உறுப்பினர்கள் ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.15,000 வரை மருத்துவ உதவி பெறலாம்.

★ சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில் 3,19,023 நெசவாளர்கள் பயனடையும் வகையில் ரூ..1,793.19 இலட்சம் காப்பீட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

★ மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா என்ற காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில் 2,45,000 நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.636.25 இலட்சம் காப்பீட்டு கட்டணமாக அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

★ ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் குமாரபாளையம், மதுரை, கரூர், கடலூர் மற்றும் ஆண்டிபட்டி ஆகிய 5 இடங்களில் உயர் தொழில்நுட்பப் பூங்கா / பதனிடும் பூங்கா அமைக்கும் திட்டங்களை ரூ.336.41 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த மத்திய அரசின் ஒப்புதலை இவ்வரசு பெற்றுள்ளது. இவற்றுள் குமாரபாளையம் மற்றும் மதுரை பகுதியில் உள்ள ஜவுளிப் பூங்காக்களில் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

மீதமுள்ள 3 இடங்களில் பூங்காக்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவ்வகைப் பூங்காக்கள் அமைப்பதன் மூலம், மாநிலத்திலுள்ள சுமார் 38,000 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

★ கைத்தறி, விசைத்தறி மற்றும் ஜவுளித் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அவ்வப்போது தீர்வு காணும் வகையில், மாநில அளவிலான கைத்தறி மற்றும் துணித் தொழில் ஆலோசனைக் குழு (State Level Advisory Committee for Handlooms and Textiles) 21.2.2007ஆம் தேதியிட்ட அரசாணையின்படியும், மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்களும் 5.3.2007ஆம் தேதியிட்ட அரசாணையின்படியும் அமைக்கப்பட்டுள்ளன. ஆலோசனைக்குழுக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு கைத்தறி, விசைத்தறி மற்றும் துணி தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது.

★ 2004–05 மற்றும் 2005–06ஆம் ஆண்டுகளுக்கான தள்ளுபடி மானிய நிலுவைத் தொகைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன், 2006–07ஆம் ஆண்டிற்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.102 கோடியுடன் கூடுதலாக ரூ.106 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி கடந்த நான்காண்டுகளில் ரூ.562 கோடி தள்ளுபடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ கைத்தறி நெசவாளர்கள் ஹட்கோ நிறுவனத்திடம் பெற்ற வீடு கட்டும் கடன் தொகையினைத் திரும்பச் செலுத்த இயலாத நிலையில் உள்ளதால், 31.03.2008 தேதியில் நிலுவையாக உள்ள கைத்தறி நெசவாளர்களின் வீடுகட்டும் கடன் தொகையினை முழுவதுமாகத் தள்ளுபடி செய்வதெனவும், ஹட்கோ நிறுவனத்திற்கு 2008 முதல் 2015 ஆண்டு முடிய உள்ள காலங்களுக்கு செலுத்த வேண்டிய தவணைத் தொகைகள் ஒவ்வொரு காலாண்டிலும் அரசே செலுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 2008–09ஆம் ஆண்டில் ரூ.306.67 இலட்சமும் 2009–10ஆம் ஆண்டில் ரூ.300.23 இலட்சமும் அரசால் ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 11,078 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுவார்கள். கடந்த இரண்டாண்டுகளில் ரூ.606.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டிச் சுமையினைக் குறைக்கும் பொருட்டு, அரசு வட்டி மானியத் திட்டத்தினை 01.04.2008 முதல் மீண்டும் செயல்படுத்த ஆணையிட்டுள்ளதோடு, வட்டி மானிய விகிதத்தினை 3 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு ஆக உயர்த்தியுள்ளது. அதன்படி, 2008–09 ஆம் ஆண்டில் ரூ.4.70 கோடியும், 2009–10ஆம் ஆண்டில் ரூ.12.66 கோடியும் அரசால் வழங்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் ரூ.17.36 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ கைத்தறி நெசவாளர்களின் நீண்டகாலக் கோரிக்கையினைப் பூர்த்தி செய்யும் வகையில், கைத்தறி நெசவாளர்களுக்கு 1.5.2007 முதல் அடிப்படை கூலியில் 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வும், 01.06.2008 முதல் அடிப்படை ஊதியத்தில் 10 விழுக்காடு கூலி உயர்வும் வழங்கப்பட்டதோடு 05.12.2009 முதல் மேலும் அகவிலைப்படியில் 15% கூலி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2010 மே மாதம் முதல் அடிப்படை ஊதியத்தில் மீண்டும் 10% கூலி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

★ 2000–2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் பல்வேறு தொழிலில் ஈடுபட்டுள்ள உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கென தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம் உள்ளிட்ட 9 புதிய நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டன. 21.7.2004 முதல் இந்நல வாரியம் உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. இதன்பின், 01.09.2006 முதல் இவ்வாரியம் தனியாகச் செயல்பட ஆணை வெளியிடப்பட்டு, இயங்கி வருகிறது. இவ்வாரியத்தில் 1,62,082 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இந் நலவாரியத்தின் மூலம் 82,360 பயனாளிகளுக்கு ரூ.17.49 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நல வாரியம் மூலம் விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியத்தில் 64,837 நெசவாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இந்நலவாரியத்தின் மூலம் 12,384 விசைத்தறித் தொழிலாளர்கள் பயனடையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களுக்காக ரூ.2.56 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை மாற்றி அமைக்க தமிழக அரசால் ஒரு குழு நியமனம் செய்யப்பட்டு, மேற்படி குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 01.01.2008 முதல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து ஆணை வழங்கியது. இவ்வ[illegible] மாற்றியமைக்கப்பட்ட புதிய ஊதிய விகிதங்க[illegible] நடைமுறைப்படுத்துவதன் மூலம் பணியாளர்[illegible] 31.12.2007ஆம் தேதியில் பெற்று வந்த அடிப்[illegible] ஊதியத்தில் 27% உயர்வு பெறுகின்றனர். இ[illegible] சுமார் 4,000க்கும் மேற்பட்ட பணிய[illegible] பயன்பெற்றனர்.

★ கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நிறுவனங்களில், பணியில் இருக்கும்போது காலமான தொழிலாளர்கள் / பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 62 நபர்களுக்கும், கைத்தறித் துறையில் பணியாற்றி காலமான பணியாளர் ஐவரின் வாரிசுதாரருக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது.

**பட்டு வளர்ச்சித்துறை**

★ மல்பரி விரிவாக்கத்தில், இந்த நான்கு ஆண்டுகளில் 38,861 ஏக்கரில் புதிதாக நடவு செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளின் சாதனையை காட்டிலும் 20,762 ஏக்கர் அதிகமாகும். சாதனை உயர்வு விகிதம் 115 சதவீதம் ஆகும்.

★ பட்டு முட்டை உற்பத்தியில் இந்த நான்கு ஆண்டுகளில் 232.679 இலட்சம் முட்டைகள் அரசு வித்தகங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளின் சாதனையைக் காட்டிலும் 116.986 இலட்சம் முட்டைகள் அதிகமாகும். சாதனை உயர்வு 101% ஆகும்.

★ வெண்பட்டு முட்டை உற்பத்தியில் இந்த நான்கு ஆண்டுகளில் 51.201 இலட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளின் சாதனையை காட்டிலும் 49.667 இலட்சம் முட்டைகள் அதிகம் ஆகும். உற்பத்தி உயர்வு 3,238% ஆகும்.

★ பட்டு முட்டை வளர்ப்பில் இந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 563.291 இலட்சம் முட்டைகள் வளர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளின் சாதனையை காட்டிலும் 294.808 இலட்சம் முட்டைகள் அதிகமாகும். சாதனை உயர்வு 110% ஆகும்.

★ பட்டுக்கூடு அறுவடையில் இந்த நான்கு ஆண்டுகளில் 36142.90 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் அறுவடை செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளின் சாதனையை காட்டிலும் சுமார் 21,687.30 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு 150% ஆகும்.

★ கச்சா பட்டு நூல் உற்பத்தியில் இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 5,136.07 மெட்ரிக் டன் பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளின் சாதனையை காட்டிலும் சுமார் 3,179.73 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு 163% ஆகும். இதில் வெண்பட்டு நூல் உற்பத்தி இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 1,345.75 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளின் சாதனையை காட்டிலும் சுமார் 1,062.35 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு 375% ஆகும். வெண்பட்டு உற்பத்தியில் நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

★ கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் இந்த நான்கு ஆண்டுகளில் 1,94,305 நபர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளின் சாதனையை விடவும் 1,03,810 நபர்கள் அதிகமாகும். சாதனை உயர்வு 115% ஆகும்.

★ ஒரு ஏக்கருக்கு பட்டுக்கூடு அறுவடை அளவு, இந்த நான்கு ஆண்டு இறுதியில் 257.413 கி.கி. அளவுக்கு உயர்ந்துள்ளது. 100 முட்டை தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை 61.130 கி.கிலிருந்து தற்போது 65.430 கி.கி. ஆக உயர்ந்துள்ளது.

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் (2008–09 மற்றும் 2009–10) 5,370 மகளிர் பட்டு விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்திற்கு நல காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ இந்த நான்கு ஆண்டுகளில் ரூ.5,091.135 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளில் ரூ.983.306 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மட்டுமே வழங்கப்பட்டது. இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் கூடுதலாக ரூ.4,107.829 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# நல வாரியங்கள் மூலமாக நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
திரு. **தா.மோ.அன்பரசன்** அவர்கள்

★ **13.05.2006** முதல் **31.03.2010** வரையிலான காலத்தில் **21,159** தொழிற்பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன. இவற்றுள் தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு **12(3)**ன் கீழ் **4,240** சமரச ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ பிரிக்கால் லிமிடெட்., கோவை மற்றும் எம்.ஆர்.எப்., சென்னை நிருவாகங்கள் அறிவித்த கதவடைப்பினை தொழிலாளர்கள் நலன் கருதி தடை செய்யப்பட்டது.

★ நீண்ட நாட்கள் மூடப்பட்டிருந்த டன்லப் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டது.

★ **1,864** குழந்தைத் தொழிலாளர்கள் பணியிலிருந்து மீட்கப்பட்டு, அவர்களில் **848** குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். **1,016** குழந்தைகள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

★ **17** மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ், **477** சிறப்புப் பள்ளிகளில் **17,067** குழந்தைகள் கல்வி பயில்கின்றனர்.

★ தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் இயங்கும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசப் பயணப் பேருந்து அட்டை மற்றும் சீருடை வழங்கப்படுகிறது.

★ குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் மாவட்டந்தோறும் சிறப்பாகப் பணியாற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு விருது வழங்கப்படுகிறது.

★ தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளியில் பணியாற்றும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது.

★ **76,826** குழந்தைகள் சிறப்புப் பள்ளிகளிலிருந்து முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

★ தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப்பள்ளியில் பயின்று, பின்னர் பொதுத் தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்படுகிறது.

★ பணியில் இருந்து மீட்கப்பட்டு, மேல் படிப்பு படித்து வரும் **50** மாணவர்களுக்கு, கல்வி உதவித்தொகையாக மாதம் ரூ.**250** வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

★ தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்கு ஜுலை **2009** முதல் அவர்கள் பெறும் மதிப்பூதியம் உயர்த்தப்பட்டது.

★ சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பருத்தி மற்றும் பருத்தி விதைத் தொழிலில் ஈடுபடும் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் 'யுனிசெப்' நிறுவனம் மற்றும் தொழிலாளர் துறையும் இணைந்து 'ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தினை' செயல்படுத்தி வருகின்றன

★ இதுவரை மொத்தம் **72** தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

★ திருமணமாகாத இளம் பெண்கள் "வேலை பழகுநர்கள்" என்ற பெயரில், பணிக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு விடிவு காண அரசு, பஞ்சாலைத் தொழிலில் வேலை பழகுநர்களுக்கென (Apprentice) குறைந்தபட்ச ஊதியம் நிர்யணம் செய்துள்ளது. தற்போது இத்தொழிலாளர்கள் அகவிலைப்படி உட்பட ரூ.**171** தினசரி ஊதியமாகப் பெற்று வருகின்றனர்.

★ பஞ்சாலைகளில் வேலை பழகுநர்கள் அல்லாத வேறு வகைப் பணியாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது.

★ வேளாண்மைத் தொழிலில் பணிபுரியும் ஆண் தொழிலாளர்களுக்கு ஆறு மணி நேர வேலைக்கு ரூ.**100**ம் பெண் தொழிலாளர்களுக்கு ஐந்து மணி நேர வேலைக்கு ரூ.**85**ம் குறைந்தபட்ச ஊதியமாக மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

★ **37** தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

★ விசைத்தறித் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்திட குழு அமைக்கப்பட்டுள்ளது. முந்திரித் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டது.

★ மூன்று இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச ஊதியம் மறு

நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டது. தற்போது தேயிலைத் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அகவிலைப்படி உட்பட ரூ.126 தினசரி ஊதியமாக பெற்று வருகின்றனர்.

★ தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுவாடகைப் படியினை ரூ.50லிருந்து ரூ.75 ஆக உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

★ தொழிற்சாலைகளில் "வேலை பழகுநர்கள்" பயிற்சிக் காலத்தினை குறைத்தும், மொத்த தொழிலாளர்களில் பயிற்சியாளர்களின் விழுக்காட்டினை நிர்ணயித்தும் சட்டத் திருத்தம் கொண்டு வர மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

★ தொழிலாளர் நீதிமன்றங்களுக்கு உரிமையியல் நீதிமன்றங்களுக்குண்டான அதிகாரங்கள் வழங்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

★ கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் மேல்முறையீட்டில் தொழிலாளிக்கு வழங்கப்படும் சாதகமான ஆணையினை எதிர்த்து, நிருவாகம் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு மூலம் வழக்குத் தொடரும் பட்சத்தில், தொழிலாளி கடைசியாகப் பெற்று வந்த சம்பளத்தினை இறுதி உத்தரவு வழங்கும் வரை நிருவாகம் வழங்க வேண்டும் என்ற புதிய சட்டப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

★ மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டத்தில் ஐந்து தொழிலாளர்கள் என்ற வரைமுறையினை நீக்கி ஒரு தொழிலாளி பணிபுரிந்தாலும் சட்டம் பொருந்தும் வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

★ ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 1,303 வீடுகள் கட்டுவதற்கு மாநில அரசின் மானியமாக மொத்தம் ரூ.65,15,000 வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 1,027 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ மாநிலங்களில் எடையளவுகள் துறையை மேம்படுத்தும் வகையில், எடைப் பாலங்களை துல்லியமாகப் பரிசோதிக்க, தலா ரூ.53 இலட்சம் மதிப்பில், எடைப் பாலங்களைப் பரிசோதிக்கும் இரண்டு நடமாடும் ஊர்திகள் திருவள்ளூர் மற்றும் கோவை மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்**

★ தொழிலாளர் நல மையங்களில் பயிலும் தையற்பயிற்சி மாணவிகளுக்கான உதவித்தொகை ரூ.80லிருந்து ரூ.150 ஆக உயர்த்தப்பட்டது.

★ நலத் திட்டங்களைப் பெரும்பாலானோர் துய்ப்பதற்கு ஏதுவாக ஊதிய உச்ச வரம்பினை ரூ.7500லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டது.

★ புத்தக உதவித் தொகை பட்டப்படிப்பிற்கு ரூ.250லிருந்து ரூ.500ஆகவும், முதுநிலைப் பட்டப்படிப்பிற்கு ரூ.300லிருந்து ரூ.750ஆகவும் உயர்த்தப்பட்டது

★ பாலர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு கூடுதல் சத்து கிடைத்திடும் வகையில் வாரத்திற்கு இரண்டு முட்டைகளுக்குப் பதிலாக மூன்று முட்டைகள் வழங்கப்படுகின்றன.

★ இளங்கலைப் பட்ட ஆசிரியர் / உடற்பயிற்சிக் கல்வி பயில்பவர்களுக்கு ரூ.2,400வீதமும், இப்பட்டயக் கல்வி பயில்பவர்களுக்கு ரூ.1,440 வீதமும், கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

★ அனைத்துத் தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பிற்கும் ரூ.3,000 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

★ மூக்குக் கண்ணாடி உதவித் தொகை ரூ.400லிருந்து ரூ.500ஆக உயர்த்தப்பட்டது.

★ ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ.1,500லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தப்பட்டது.

★ 1,07,209 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.2,78,61,970 செலவிடப்பட்டுள்ளது.

★ உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன், ஆட்டோ ரிக்ஷா / டாக்சி ஓட்டுநர், சலவைத் தொழில், தலைமுடி திருத்துபவர், தையல் கலை, கைவினைஞர்கள், பனைமரத் தொழிலாளர்கள், கைத்தறி மற்றும் பட்டு நெசவாளர்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள் தொழில், ஓவியர்கள் என 01.09.2006 முதல் தனித்தனி நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன.

★ புதிதாக பொற்கொல்லர்கள், மண்பாண்டம் மற்றும் வீட்டுப் பணியாளர்கள் நலன் காக்க நல வாரியங்கள் அமைக்கப்பட்டன.

★ விசைத்தறித் தொழிலாளர் நலன் காக்க தமிழ்நாடு விசைத்தறித் தொழிலாளர் நல வாரியம் உருவாக்கப்பட்டது.

★ பாதையோர வணிகர்கள் நலன் காக்க தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர் நல வாரியம் உருவாக்கப்பட்டது.

★ உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 24,06,505 ஆகும். இதில் 16,41,904 நபர்கள் இவ்வரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர் பதிவு செய்துள்ளனர்.

★ 7,39,306 பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களின் கீழ் உதவித் தொகையாக மொத்தம் ரூ.172.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில், இவ்வரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர் 6,74,487 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.159.08 கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நலவாரியத்திற்கென தனியாக ஒரு தொழிலாளர் இணை ஆணையர் உள்ளிட்ட 12 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன.

★ அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது இத்தொகை ரூ.300 லிருந்து ரூ.400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மகப்பேறு நல நிதி உதவித் தொகை ரூ.3,000லிருந்து ரூ.6,000ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ இறப்பு மற்றும் விபத்து ஊனத்திற்காக காப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 01.09.2006 முதல் வாரிய நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

★ சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர், காலணி / தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், மண்பாண்டம் செய்வோர் ஆகிய தொழிலாளர்களுக்கு அவர்களது பணி தொடர்பான கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

★ வாரியப் பணிகளைத் துரிதப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் மாவட்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

★ அனைத்து மாவட்ட வாரிய அலுவலகங்களும் தற்போது கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

★ முடித்திருத்துவோர், தையல் தொழிலாளர், காலணி / தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், கைவினை மற்றும் பனைமரத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர நல வாரியங்களுக்கென மானியமாக ரூ.127.74 கோடி இவ்வரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்**

★ இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 19,88,882 இதில் 9,00,090 பேர் இவ்வரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர் பதிவு செய்துள்ளனர்.

★ 2,99,309 பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.94.76 கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ இதில், இவ்வரசு பொறுப்பேற்றதற்கு பின்னர் 2,28,949 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.69.84 கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ ஒய்வூதியத் தொகை ரூ.300லிருந்து ரூ.400ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ மகப்பேறு நல நிதி உதவித் தொகை ரூ.3,000லிருந்து ரூ.6,000ஆக உயர்த்தப்பட்டது.

★ பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தொழில் பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

★ காப்பீட்டுப் பங்குத் தொகையில் மாநில அரசின் பங்களிப்பான 25 சதவீதத் தொகை ரூ.2.93 கோடி இவ்வரசால் வழங்கப்பட்டுள்ளது.

★ காஞ்சிபுரம் மாவட்டத்தில் 59,668 மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் 90,701 குடும்பங்களுக்கு மின்னணு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் 4,317 பேர்களுக்கு ரூ.97.48 இலட்சம் மருத்துவ செலவினமாக காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

★ 'உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' 16 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டுள்ள 40 இலட்சத்திற்கும் மேலான தொழிலாளர்களுக்கும் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் 191 தொழிலாளர்களுக்கும், 379 தொழிற்சாலைகள் நிருவாகத்தினர் களுக்கும் ரூ.17.04 இலட்சம் செலவில் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் மற்றும் பாதுகாப்பு விருதுகள் வழங்கப் பட்டுள்ளன

★ பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு விருதுகள் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.1,11,000 செலவில் 9 தொழிற்சாலை நிருவாகங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன

★ 11,103 புதிய தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டதன் விளைவாக 1,63,840 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்

★ 21,370 தொழிற்சாலைகளில் 1,32,159 தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்

★ பஞ்சாலைகளில் குறைந்தபட்ச ஊதியம் தொடர்பாக 1,954 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட 1,002 கோரிக்கை மனுக்களில் 31 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு 1,468 வேலை பழகுநர்களுக்கு ரூ.30.61 இலட்சம் பெற்று வழங்கப்பட்டுள்ளன.

★ சட்ட விதி மீறல்கள் காணப்பட்ட நிர்வாகத்தினர்கள் மீது 15,251 வழக்குகள் தொடரப்பட்டு ரூபாய் 5.07 கோடி நீதிமன்ற அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

- ★ பட்டாசுத் தொழிற்சாலைகளின் பாதுகாப்பை மேம்படுத்த ரூ.4.50 இலட்சம் செலவில் 166 பிரச்சார முகாம்கள் நடத்தப்பட்டு 14,672 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- ★ இரசாயன தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் சாயப்பட்டறைகளின் பாதுகாப்பிற்காக ரூ.9 இலட்சம் செலவில் 114 பிரச்சார முகாம்கள் நடத்தப்பட்டு 4,114 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- ★ ரூ.3,06,000 நிதி ஒதுக்கீட்டில் அரசுக் குடியிருப்புகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- ★ ரூ.60.04 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

- ★ 2004ஆம் வருடம் 5,67,619 ஆக இருந்த வருடாந்திர பதிவானது கடந்த 2009 ஆம் ஆண்டு 13,11,948 ஆக உயர்ந்துள்ளது.
- ★ 2004 ஆம் ஆண்டு 41,51,170 ஆக இருந்த உயிர்பதிவேடானது 31.3.2010இல் 61,98,028ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 29,16,920 பெண்கள் ஆவர்.
- ★ 2009ஆம் ஆண்டில் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.
- ★ வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம் 2006 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு 3,53,801 வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். இவர்களில் 1,11,774 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆவர்.
- ★ வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.24,000லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ★ 31.3.2010 வரை ரூ.261 கோடி வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- ★ பார்வையற்றோருக்கான வேவைாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ.180.41 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1,239 கண் பார்வையற்ற மனுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.
- ★ அரசுப் பணிகளுக்கான உச்ச வயது வரம்பினை கடந்த இளைஞர்களுக்கு உதவிடும் வகையில் 5 ஆண்டுகள் வயது வரம்பு தளர்த்தப்பட்டது.
- ★ இந்த அரசின், இளைஞர்களின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளால், வேவைாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்பவர்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்ததோடு அல்லாமல் அவர்கள் அரசுப் பணிகளில் இதுவரை காணாத அளவு பணி வாய்ப்பினை வேலைவாய்ப்புத் துறை, தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் மூலமாக 4,65,748 நபர்கள் பணி வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.
- ★ இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுகளைப் புதுப்பிக்காதவர்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்பட்டதன் காரணமாக 4,57,259 பதிவுதாரர்கள் பயன்பெற்றுள்ளனர்.
- ★ 2009ஆம் ஆண்டில் மட்டும் இந்த புதுப்பித்தல் சலுகையால் 39,618 பதிவுதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.
- ★ தமிழகத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களை வலைபின்னல் மூலம் ஒருங்கிணைக்கும் பொருட்டு ரூ.2.90 கோடி செலவில் எல்காட் மூலம் பணி நடைபெற்று வருகின்றது.
- ★ இணையதளம் மூலம் தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல் ஆன்லைன் மற்றும் வீடியோ கான்பரன்ஸ் மூலம் நடைபெற்றது.
- ★ + 2 பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பிலான இலவச தொலைபேசி அழைப்பு வழி தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி 7 நாட்கள் நடைபெற்றது.
- ★ சென்னையை அடுத்துள்ள பன்னாட்டு நிறுவனங்களின் உதவியுடன் சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அந்நிறுவனங்களில் 24,006 நபர்கள் பணி வாய்ப்பு பெற்றுள்ளனர்.
- ★ சென்னை கிண்டியில் வேலைவாய்ப்பு அலுவலக வளாகம் கட்டுவதற்காக ரூ.92 இலட்சம் செலவில் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.
- ★ நடப்பு நிதியாண்டில் திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ★ தற்போதைய அரசின் ஆட்சி காலத்தில் தொலைபேசி வசதி இல்லாத 11 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளது.

**பயிற்சித் துறை**

- ★ அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு இலவச பேருந்துப் பயணச் சலுகையினை ரூ.3.84 கோடி செலவினத்தில் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

★ பெரம்பலூர், ஆண்டிமடம், சிவகங்கை மற்றும் நாகலாபுரம் ஆகிய இடங்களில் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.990.90 இலட்சத்தில் துவங்கப்பட்டுள்ளன.

★ 11 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற்பிரிவுகள் ரூ.448.74 இலட்சத்தில் துவங்கப்பட்டுள்ளன.

★ 28 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின் கீழ் ரூ.70 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

★ 22 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.63 கோடி செலவில் திறன்மிகு மையங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

★ 5 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.2 கோடி செலவில் "பின்னலாடை மற்றும் தையல் இயந்திரம் இயக்குபவர்" தொழிற் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

★ அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் கட்டடங்கள் ரூ.125 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன.

★ திருக்குவளை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் ரூ.138.60 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

★ அம்பத்தூர், மதுரை, திருநெல்வேலி, கோவை மற்றும் திருச்சி ஆகிய 5 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு உலகத்தர சான்றிதழ் ISO: 9001: 2008 பெறப்பட்டுள்ளது.

★ அரசினர் தொழிற்பயிற்சி நிலங்களின் மூலம் கடந்த வருடங்களில் 54,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் கூடுதல் இருக்கைகள் 30 சதவீதம் என உயர்த்தி ஆண்டுக்கு 8,500 பேர் கூடுதலாகப் பயிற்சி பெறும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

★ வேலைவாய்ப்பு தொடர்பான வழிகாட்டுதலுக்காக பணியமர்வுப் பிரிவு சென்னை மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகத்தில் துவங்கப்பட்டுள்ளது.

★ கடந்த நான்காண்டுகளில் 60,000–க்கும் மேற்பட்டோர்க்கு தொழிற் பழகுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ வளாகத் தேர்வு மூலம் சுமார் 34,500 பயிற்சியாளர்கள் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

★ மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தலைமையில் தொழிற்திறன் பயிற்சியினை மேம்படுத்த மாநிலத் திறன் மேம்பாட்டுக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது.

★ வேலைவாய்ப்பற்ற 48,135 இளைஞர்களுக்கு ரூ.537.14 கோடி செலவில் குறுகிய கால இலவசப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ 2009–2010இல் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் குறுகிய காலப் பயிற்சித் திட்டத்தின் கீழ் ரூ.489.57 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, இதுவரை 7,445 இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

★ தொழிற்பள்ளிகளில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு மாநில அளவில் திறனாய்வுத் தேர்வுப் போட்டி நடத்தி தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது .

★ அரசினர் தொழிற்பயிற்சி நிலையப் பயிற்றுநர்களுக்கு நல்லாசிரியர் விருது ரொக்கப் பரிசு ரூ.500 என்பது ரூ.1,000 என உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ 36 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் புதிதாகத் துவங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

★ அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 72 பணிமனை உதவியாளர்கள் காலமுறை ஊதியத்தில் நியமிக்கப்பட்டனர்.

★ தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 66 இளநிலை உதவியாளர்களும், 23 தட்டச்சர்களும், கருணை அடிப்படையில் 28 இளநிலை உதவியாளர்களும், 12 இளநிலைப் பயிற்சி அலுவலர்களும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ அரக்கோணம் எஃகு தொழிற்சாலையில் பணியாற்றி பணி துறவு செய்யப்பட்ட 52 நபர்கள் இத்துறையில் இளநிலைப் பயிற்சி அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ ஆணையரகத் தேர்வுக் குழுமம் ரூ.1.50 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

★ பொது மற்றும் தனியார் பங்களிப்பின் கீழ், செங்கற்பட்டில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டுமான தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கக் கட்டுமான கலைக்கழகம் நிறுவப்படவுள்ளது.

★ திருச்சி, கோவை மற்றும் செங்கல்பட்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுநர் பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது

★ பயிற்சி மானியம் பொறியியல் அல்லாத மற்றும் பொறியியல் பயிற்சியாளர்களுக்கு ரூ.30 மற்றும்

ரூ.40 என்பது ரூ.50 மற்றும் ரூ.60 என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ அயல்நாட்டு வேலைக்குச் செல்பவர்களுக்கு அவர்களைத் தயார்படுத்தும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

★ மலேசியா நாட்டின் மொழி, கலாச்சாரம் மற்றும் தொழிலாளர் சட்டங்கள் போன்ற முக்கியப் பிரிவுகளுக்கான உள்இணைப்புப் பயிற்சி அந்த நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலமாக சான்றிதழ் பெற்றவர்களுக்கு மட்டுமே வேலைக்கான விசா அளிக்கப்படும் என மலேசிய அரசு முடிவெடுத்ததற்கிணங்க 13.05.2006 முதல் 21.04.2007 வரை நடைபெற்ற பயிற்சியில் 2,756 நபர்கள் பயிற்சி பெற்று பயன் அடைந்தனர்.

★ முந்தைய ஆட்சியின் பணி நியமனத் தடைச் சட்டம் நீக்கப்பட்டபின், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் 7 அலுவலர்கள் பணிநியமனம் செய்யப்பட்டதில் ஒருவர் மாற்றுத் திறனாளி ஆவார்.

★ இந்திய அரசின் அயல்நாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தின் ஆணைக்கிணங்க புத்தாக்கப் பயிற்சித் திட்டத்தின் மூலம் வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்கு 2007–2008ஆம் ஆண்டில் 8,459 தொழிலாளர்களும், 2008–2009 ஆம் ஆண்டில் 7,110 தொழிலாளர்களும் பயன் அடைந்தனர்.

★ அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட அயல்நாடுவாழ் இந்தியர் களுக்கான சமூக பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 13.05.2006 முதல் 31.03.2010 வரை 257 நபர்கள் பயன் அடைந்தனர்.

★ 21,294 நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் 13.05.2006 முதல் 31.03.2010 வரை பதிவு செய்துள்ளனர்.

★ 1,264 நபர்கள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பல்வேறு நாடுகளில் 13.05.2006 முதல் 31.03.2010 வரை பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் அரசு நிறுவனம் ஆகும். கடந்த 2006 – 2007 ஆம் நிதியாண்டில் ரூ.22.94 இலட்சம், 2007 – 2008 ஆம் நிதியாண்டில் ரூ.5.52 இலட்சம், 2009 – 2010 ஆம் நிதியாண்டில் ரூ.11.38 இலட்சம் (தற்காலிக இலாபம்) இலாபம் அடைந்துள்ளது.

★ கடந்த நிதியாண்டில் (2009 – 2010) மட்டும் 5 மாவட்டங்களில் நடைபெற்ற சிறப்புப் பதிவு முகாமில் சுமார் 11,424 நபர்கள் பதிவு செய்து பயனடைந்தனர்.

★ கடந்த 4 ஆண்டுகளில் 18,000 தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 6 இடங்களில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவக்கப்பட்டுள்ளன.

★ கடந்த 4 ஆண்டுகளில் 24,127 தொழிலாளர் நலனுக்காக 29 புதிய பகுதிகளுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தினை விரிவுபடுத்தி அருகிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

★ சுழல் நிதியிலிருந்து கடந்த 4 ஆண்டுகளில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்கென ரூ.9.32 கோடி காப்பீட்டு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ செறிவுத் திட்டத்தின் கீழ் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சை செலவுக்கென கடந்த 4 ஆண்டுகளில் தனியார் மருத்துவமனைகளுக்கு ரூ.8.02 கோடி வழங்கப்பட்டுள்ளன.

★ அனைத்துத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.77.33 இலட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ பலதரப்பட்ட 398 பணியிடங்கள் கடந்த 4 வருடங்களில் நிரப்பப்பட்டுள்ளன.

★ திருநெல்வேலியில் 50 படுக்கைகள் கொண்ட, முழுவதும் குளிர்சாதன வசதியுடைய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவங்குவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ திருப்பூரில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவதற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

★ சென்னை அயன்புரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் மருத்துவப் பட்டம் மற்றும் பட்டய மேற்படிப்புகள் துவங்குவதற்கும், கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது.

★ கடந்த 4 ஆண்டுகளில் 3,20,81,194 பிணியாளர்கள் உள் நோயாளிகளாகவும், வெளி நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

★ தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்திற்கு கடந்த 4 ஆண்டுகளில் ரூ.413.92 கோடி செலவாகியுள்ளது.

★ ★ ★



# திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள்

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்

திரு. **கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள்

★ தமிழகம் முழுவதும் 4,539 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

★ திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்வதற்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு மானியத் தொகை ரூ.75 இலட்சத்திலிருந்து, ரூ.3 கோடியாக உயர்த்தப்பட்டது.

★ திருக்கோயில்களில் திருப்பணி உள்பட பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கு ரூ. 402 கோடி மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ மிகவும் சிதிலமடைந்து, பழமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க 48 திருக்கோயில்களைத் திருப்பணி செய்து பாதுகாக்க, வரலாற்றுப் பெருமை மிக்க பழமை வாய்ந்த சின்னங்களைச் சீரமைக்கும் திட்டத்தின்கீழ், 12ஆவது நிதி ஆணைய நல்கையிலிருந்து ரூ. 9.87 கோடி விடுவிக்கப்பட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ தேவார திருமுறைகளிலும் திவ்வியப் பிரபந்தங்களிலும் பாடிப்பரவப்பட்ட, நீண்டகாலமாக, திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத 30 புராதன திருக்கோயில்களை ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டு, திருப்பணிகள் முடிவுற்றுள்ளன.

★ நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதிவசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதிமாற்றம் மூலம் 150 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ.12.32 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.





சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு விசாலாட்சி அம்பாள் உடனுறை விருபாக்ஷீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. (3.7.2009)

★ ஆதிதிராவிடர்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள 3,677 திருக்கோயில்கள் புதுப்பிக்கப் படுவதற்கு ரூ.9.19 கோடி நிதி உதவி வழங்கப் பட்டுள்ளது.

★ பொது நலநிதியின் மூலம் இவ்வரசு பொறுப்பேற்றபின் 368 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.10.53 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ கிராமப்புர திருக்கோயில்கள் திருப்பணித் திட்டம் மூலம் இந்த அரசு பொறுப்பேற்ற பின் 35 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.1.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி திரட்டி நிரந்தர முதலீடு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தற்போது இத்தொகை ரூ.8 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 22 திருக்கோயில்களின் திருப் பணிகளுக்கு ரூ. 1.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ "திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" திட்டத்தின் மூலம், வரலாற்றுச் சிறப்பு மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த புராதனத் திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து 11 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.53 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு காஞ்சிபுரம் நகரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வதீர்த்த குளத்தினை சீரமைத்திட ரூ.43.90 இலட்சம் மற்றும் அருள்மிகு அஷ்டபுஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரங்கசாமி குளத்தினை சீரமைத்திட ரூ.22.50 இலட்சம் ஆக கூடுதல் ரூ.66.40 இலட்சம் அரசு நிதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 16 திருக்கோயில்களில் புதியதாகத் தங்கரதத் திருப்பணி நிறைவடைந்து தங்கரத உலா நடைபெற்று வருகிறது: மேலும் 14 திருக்கோயில்களில் புதியதாகத் தங்கரதம் செய்யும் திருப்பணி நடைபெற்று வருகிறது.

★ 3 திருக்கோயில்களில் புதியதாக வெள்ளி ரதத் திருப்பணி நிறைவடைந்து வெள்ளி ரத உலா நடைபெற்று வருகிறது.

★ இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் மொத்தமுள்ள மரத்தேர்கள் 960 ஆகும்.

★ 16 திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருத்தேர்கள், சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.83.85 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டன. இவற்றுடன் சேர்த்து 735 தேர்கள் நல்ல நிலையில் உள்ளன. பழுதடைந்துள்ள 225 தேர்களை நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி ஆதாரம் ஏற்படுத்தி, ரூ.10.84 கோடி மதிப்பீட்டில் திருத்தேர் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ திருவாரூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில்,100 ஆண்டுகளுக்கு முன்பாக செய்யப்பட்டு பழுதடைந்திருந்த அம்பாள் தேருக்குப் பதிலாக, ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்யப்பட்டு 04.05.2008 அன்று தேரோட்டம் நடத்தப்பட்டது.

★ பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் தற்போது பஞ்சாமிர்தம் நவீன முறையில் சுத்தமாகவும், சுகாதார முறையிலும் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்ட தானியங்கி இயந்திரங்கள் மூலமாக தயாரிக்கப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

★ 12 முக்கிய திருக்கோயில்களில் பின் சுழற்சி சவ்வூடு பரவுதல் முறையில் (Reverse Osmosis) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

★ தமிழகத்தின் முக்கிய திருக்கோயில்களில் பக்தர்களுக்கு வழங்கப்படும் விபூதி மற்றும் குங்குமம் நவீன முறையில் தானியங்கி இயந்திரங்கள் மூலம் இறைவன், இறைவியின் திருவுருவங்கள் அச்சிடப்பட்ட சிறிய உறைகளில் இடப்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றன.

★ ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் சார்பில் புதிய நவீன திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 13.4.2007 அன்று திறக்கப்பட்டது.

★ ரூ. 61.30 இலட்சம் மதிப்பீட்டில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் புதிய நவீன திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 22.10.2009 அன்று திறக்கப்பட்டது.

★ திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் சிற்ப சாத்திரங்களிலும், ஆகமங்களிலும் குறிப்பிட்டுள்ளபடி நடைபெறுவதை உறுதி செய்ய, துறையின் மூலம் 184 ஸ்தபதிகள் முறைப்படி ஸ்தபதிகளாக அங்கீகாரம் வழங்கப்பட்டு திருக்கோயில் திருப்பணி தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

★ சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் நோக்கோடு ரூ.7.6 கோடி செலவில் அருள்மிகு மாரியம்மன் மூலவர் விமானம் தங்க விமானமாக அமைக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது.

★ ஸ்ரீபெரும்புதூர், அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பாஷ்யக்கார சுவாமி திருக்கோயிலுக்கு

ரூ.2.08 கோடி மதிப்பீட்டில் தங்க விமானம் அமைக்கப்பட்டு 30.04.2007இல் குடமுழுக்கு நடைபெற்றது.

★ தகுதியும் திறமையும் பெற்ற அனைத்து இந்துக்களும் சாதிவேறுபாடின்றி திருக்கோயில்களில் அர்ச்சகராகலாம் என 2.1.2007 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதனையடுத்து, பழனி, திருச்செந்தூர், மதுரை, திருவண்ணாமலை ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும், சென்னை, திருவரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகியன இலவசமாக அளிக்கப்படுவதுடன் மாணவர் ஒருவருக்கு மாதம் 1க்கு ரூ.500 ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 34 மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 76 மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 55 மாணவர்கள், இதர வகுப்பைச் சார்ந்த 42 மாணவர்கள் உட்பட மொத்தம் 207 மாணவர்கள் ஓராண்டு கால "இளநிலை அர்ச்சகர் சான்றிதழ்" இலவச பயிற்சியை முடித்து சான்றிதழ் பெற்றுள்ளனர்.

★ கிராமக்கோயில் பூசாரிகள் நலனுக்கென ஒரு நலவாரியம் 23.1.2007 அன்று அமைக்கப்பட்டு இதுவரை 38,946 பூசாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 700 பூசாரிகளுக்கு ரூ.16.07 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ "தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்" என்பதை மாற்றி "தமிழில் அர்ச்சனை செய்யப்படும்" என்று அறிவித்து தமிழ் அர்ச்சனை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இத்துறையால் தமிழில் அர்ச்சனை நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்டந்தோறும், சிறப்பாக தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களை கண்டறிந்து அவர்களுக்கு ஊக்க பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

★ நீண்ட காலத்திற்கு பின்பு, சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் (நடராசர்) திருக்கோயில் திருச்சிற்றம்பல மேடையில் தமிழ் தேவார திருமுறைகள் ஓதுவதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டு பக்தர்களால் தேவார திருமுறைகள் ஓதப்படுகின்றன.

★ உலகப் புகழ் வாய்ந்த சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் (நடராசர்) திருக்கோயில் நலன் மற்றும் பொதுநலன் கருதி இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தின் சட்டப்பிரிவு 45(1)ன் கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டதை எதிர்த்து பொது தீட்சிதர்களால் தொடரப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு செயல் அலுவலர் நியமனம் உறுதி செய்யப்பட்டு செயல் அலுவலர் 2.2.2009 அன்று பொறுப்பேற்றுள்ளார். இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலனை கருத்திற்கொண்டு உயர் கோபுர மின் விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் இதர வசதிகள் ரூ.34.45 இலட்சம் இவ்வரசால் நிதி உதவியாக வழங்கப்பட்டு பக்தர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. திருக்கோயிலில் உண்டியல் காணிக்கை, பக்தர்கள் நன்கொடை மற்றும் பிரசாத விற்பனை ஆகியவற்றை முறைப்படுத்தியதன் மூலம் திருக்கோயில் வருவாயாக 2.2.2009 முதல் ஓராண்டில் ரூ.26 இலட்சம் கிடைக்கப்பெற்றுள்ளது.

★ "ஆண்டவன் முன் அனைவரும் சமம்" என்ற கோட்பாட்டினை உறுதி செய்யும் வகையில், திருக்கோயில்களில் கடைபிடிக்கப்பட்டு வந்த, முக்கிய பிரமுகர்களுக்கு பரிவட்ட மரியாதை செய்யும் வழக்கம் நிறுத்தப்பட்டது.

★ திருக்கோயில் மற்றும் இதர சமய நிறுவனங்களை நிருவகிக்க ஏற்படுத்தப்படும் அறங்காவலர் குழுவில் மகளிர் ஒருவரையும், ஆதிதிராவிடர் ஒருவரையும் அறங்காவலராக நியமிப்பது சட்டமாக்கப்பட்டுள்ளது.

★ திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க அனைத்து வசதிகளும் நிறைந்த, ஒருங்கிணைந்த கோசாலைகள் பழனி, திருச்செந்தூர், இராமேசுவரம், திருச்சி ஆகிய நான்கு இடங்களில் அமைக்கப்பட்டன. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் 267 கால்நடைகளையும், திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மூலம் 189 கால்நடைகளையும், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மூலம் 278 கால்நடைகளையும், அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலிலிருந்து 176 கால்நடைகளையும், ஸ்ரீவாஞ்சியம், அருள்மிகு வாஞ்சிநாத சுவாமி திருக்கோயில், திருவாரூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் மற்றும் திருக்கண்ணபுரம், அருள்மிகு சௌரிராஜப் பெருமாள் ஆகிய திருக்கோயில்கள் மூலம் 16 கால்நடைகளையும், மகளிர் சுயநிதி உதவிக் குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்/பூசாரிகளுக்கும் இவ்வரசு பொறுப்பேற்றபின் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

★ இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாகத்தை செம்மைப்படுத்தவும், மாவட்டந்தோறும் மக்கள் பணி செய்ய ஓர் அலுவலகம் என்ற நிலையை உருவாக்கிடவும், கரூர், திண்டுக்கல், திருவாரூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஐந்து வருவாய் மாவட்டங்களில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகம் புதிதாக ஏற்படுத்த ஆணையிடப்பட்டு, அவை 15.4.2008 முதல் செயல்படத் தொடங்கியுள்ளன.

★ இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டது முதல் இதுவரை, இந்து சமய அறநிலையத்துறையில் 74 செயல் அலுவலர்கள், 31 தணிக்கை ஆய்வர்கள், 130 இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள், 42 அலுவலக உதவியாளர்கள், ஒட்டுநர்கள் மற்றும் இரவுக் காவலர்கள் ஆக மொத்தம் 277 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில் 9 மாற்றுத் திறனாளிகளும் அடங்குவர்.

★ திருக்கோயில்களின் திருப்பணிகளைக் கண்காணித்திடவும், மதிப்பீடுகளை கூர்ந்தாய்வு செய்திடவும் ஒரு உதவிப் பொறியாளர் (சிவில்), உதவிப் பொறியாளர் (மின்சாரம்) ஒரு முதுநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் ஒரு வரைதொழில் அலுவலர் ஆகிய நான்கு பணியிடங்கள் தலைமையிடத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ தஞ்சாவூரில் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகம், உதவி ஆணையர் அலுவலகம், பொறியியல் பிரிவு மற்றும் தணிக்கை அலுவலகம் ஆகியவை ஒரே இடத்தில் இயங்கும் வகையில், ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் ரூ.70.83 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டு, 27.9.2007 அன்று திறக்கப்பட்டது.

★ தூத்துக்குடியில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகத்திற்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 1.12.2009 முதல் செயல்பட்டு வருகிறது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் மனைகளில் குடியிருப்பவர்களுக்கான வாடகை விகிதம் பாதியாகக் குறைத்து வாடகை நிர்ணயம் சீரமைக்கப்பட்டது. திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம், மனை ஆகியவற்றில் குடியிருப்போர், வணிகம் செய்வோர் ஆகிய அனைத்துத் தரப்பினரும் செலுத்த வேண்டிய மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையான வாடகை உயர்வை 33.3 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் நீண்ட காலமாக கூட்டாக ஆக்கிரமித்து குடியிருப்போர்களை, திருக்கோயிலுக்கு நன்மை பயக்கும் வகையில் வாடகைதாரர்களாக அங்கீகரிக்க அரசாணை வெளியிடப்பட்டு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், இதுவரை 3,570 பேரின் ஆக்கிரமிப்புகள் வரன்முறை செய்யப்பட்டு, அவர்களுக்கு வாடகை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்களுக்கு மின்சாரம், குடிநீர், சாலைப் போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ சென்னை, சென்னையைச் சுற்றியுள்ள நிலங்களின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடங்களைப் பாதுகாக்கும் நோக்கோடும், திருக்கோயில் வருவாயைப் பெருக்கிடவும், திருக்கோயிலுக்குச் சொந்தமான ஏழு இடங்களில், வாகனப் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ திருக்கோயில்களின் அசையா சொத்துக்களை மீட்க தாக்கல் செய்யப்படும் விளம்புகை வழக்குகளில் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்குகள் மதிப்பீடு சட்டத்தின் கீழ் சொத்து மதிப்பில் 7.5 விழுக்காடு செலுத்த வேண்டுமென்று இருந்ததை உயர்ந்தபட்சமாக ரூ.100 என நிர்ணயித்து 9.04.2010 அன்று அரசு ஆணை வழங்கியுள்ளது.

★ இவ்வரசு பொறுப்பேற்றபின் 1,567 திருக்கோயில்கள் மட்டுமே நிதிவசதியின்மையால் ஒரு கால பூஜை கூட நடைபெறாத நிலை உள்ளது எனக் கண்டறியப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது 1,243 திருக்கோயில்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளன.

★ திருக்கோயில்களில், திருப்பணி மேற்கொள்வதற்கான நிதி ஆதாரத்தினைத் திரட்டிட "புரவலர் விருது மற்றும் தங்க நிற அட்டை" வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ரூ.5 இலட்சம் நன்கொடை வழங்குபவருக்கு அல்லது நன்கொடை அளிக்கும் நிறுவனத்திற்கு, "திருக்கோயில் புரவலர்" என்று பொறிக்கப்பட்ட "தங்க நிற அட்டை" வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இவர்கள் குடும்பத்தினருக்கு அல்லது நிறுவனத்திற்கு 5 நபர்களுக்கு மிகாமல், அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் 20 வருடங்களுக்கு தரிசனம் செய்ய சிறப்பு நுழைவு அனுமதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 42 புரவலர்களுக்கு தங்க நிற அட்டை வழங்கப்பட்டுள்ளதன் மூலம் ரூ.2.10 கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது.

★ நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதிமாற்றத்தின் மூலம் ரூ.5 கோடி அளவில் மைய நிதி உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.15 இலட்சம் வீதம் ரூ.45 இலட்சம் இந்து சமய அறநிலையத்துறையால் நடத்தப்படும் பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், தேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, பூம்புகார் கல்லூரி, மேலையூர் ஆகிய மூன்று கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கட்டடங்கள், ஆய்வகம், நூலகம், கணினி, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளைச் செய்திட நிதி உதவி வழங்க ஆணையிடப்பட்டது. இந்த மைய நிதி வட்டித் தொகையிலிருந்து மேலையூர், பூம்புகார் கல்லூரியில் புதிதாக ஆய்வகம் கட்டுவதற்காக ரூ.13 இலட்சமும், குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில் தார் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.13 இலட்சமும் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

★ நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதிமாற்றத்தின் மூலம் ரூ.5 கோடி அளவில் மைய நிதி உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, ஆண்டுதோறும், இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 36 பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களது நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான அடிப்படை வசதிகள், ஆய்வகங்கள், நூலகங்கள் மற்றும் கணினி வசதிகள் செய்திட நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டது. இந்த மைய நிதி வட்டித் தொகையிலிருந்து திருவெண்காடு, எஸ்.எஸ்.டி. மேல்நிலைப்பள்ளி ஆய்வுக் கூடம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.9 இலட்சமும், திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பண்பொழி, அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடப் பணிக்கு ரூ.9 இலட்சமும், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை, அருள்மிகு பெரியநாயகி அம்மன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடப் பணிக்கு ரூ.9 இலட்சமும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வரும் கருணை இல்ல மாணவ, மாணவிகளுக்கு இந்து சமய அறநிலையத்துறையால் நிருவகிக்கப்படும் கலைக்கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள் ஆகியவற்றில் அவர்களுக்கு கல்விக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

★ திருக்கோயில்களுக்கு களவு எச்சரிக்கை மணிகள் பொருத்திட நிதி வசதிமிக்க திருக்கோயில் களிலிருந்து ரூ.5 கோடி நிதி பெற்று ஒரு மைய நிதி உருவாக்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இம்மைய நிதியிலிருந்து பெறப்பட்ட வட்டித் தொகையில் 22 திருக்கோயில்களுக்கு ரூ.3,43,793 வழங்கப் பட்டுள்ளது. மேலும், ஆணையர் பொது நல நிதி மூலம் 24 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு ரூ.3,79,711 நிதி வழங்கி புதிதாக களவு எச்சரிக்கை மணிகள் பொருத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ போதிய பாதுகாப்பு வசதியற்ற திருக்கோயில்களின் உலோகத் திருமேனிகளை பாதுகாத்திட 15 இடங்களில் "உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்" கட்டப்பட்டு உள்ளன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்ற வகையில் திருவொற்றியூர், திருத்தணி, விருதுநகர், விழுப்புரம் மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்காக ரூ.1.75 கோடி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 1.1.2006 முதல் ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.750 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மாதம் ஒன்றுக்கு ரூ.750 என வழங்கப்பட்ட ஓய்வூதியம் 1.1.2010 முதல் ரூ.800 ஆக உயர்த்தப்பட்டும், 1.1.96 முதல் 31.12.2005 முடிய ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கும் 1.1.2010 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.800 வீதம் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 829 ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுவருகிறது.

★ திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பளத்துடன் 50% அகவிலைப்படி சேர்க்கப்பட்டு, ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ திருக்கோயில் பணியாளர்களுக்கு, பணிக்காலத்தில் இறக்கும் பணியாளர்களது குடும்பத்தார்களுக்கு உதவும் முகமாக, அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப நலநிதித் தொகை ரூ.75,000 என்பதனை 20.10.2008 முதல் ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 334 பணியாளர்களது குடும்பத்தாருக்கு குடும்பநல நிதியாக ரூ. 2.53 கோடி வழங்கப்பட்டு உள்ளது.

★ ஆண்டு வருவாய் ரூ.1 இலட்சம் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருவாய் வரப்பெறும் திருக்கோயில்களில் பணியாற்றி பணி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு, சிறப்பு சேம நலநிதித் திட்டத்தின் கீழ் பணிக்கொடையாக ரூ.1,000 என வழங்கப்பட்டு வந்ததனை ரூ.5,000 என உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ ஆண்டு வருவாய் ரூ.40,000க்கு குறைவான வருவாய் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் ரூ.400க்கு கீழ் மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவைத் தொகை வழங்க பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடியை வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைப்பு நிதி முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகையில் இருந்து இந்தப் பணியாளர்களின் சம்பள நிலுவைத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 20.10.2008 முதல் ரூ.1 இலட்சத்திற்குக் குறைவான ஆண்டு வருவாய் உள்ள திருக்கோயில்கள் பயன்பெறும் வகையிலும், அங்கு பணிபுரியும் ரூ.750க்கு கீழ் சம்பளம் பெறும் பணியாளர்கள் பயன்பெறும் வகையிலும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபின் இதுவரை 2,588 திருக்கோயில்களில் பணிபுரியும் 3,673 பயனாளிகளுக்கு சம்பள நிலுவைத் தொகையாக ரூ.1.09 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ மேல்நிலைப் பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளர்களின்

மகன் அல்லது மகளுக்கு அவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில், 15.05.2010 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 90 மாணவ, மாணவியருக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

★ அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்புப் பயிலும் 3 மாணவர்களுக்கு முதலாம் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகித நிதியுதவிக்கான காசோலையை 15.05.2010 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

★ திருக்கோயில் பணியாளர்களைப் பொதுமக்கள் எளிதில் அடையாளம் காணும் வகையில் இதுவரை, முக்கியத் திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான சீருடைகள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ திருக்கோயில் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அடிப்படை கணினிப் பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டு, இதுவரையில் 180 முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

★ ஒரு கால பூசை நடைபெறும் நிதிவசதியற்ற கிராமப்புரங்களில் அமையப்பெற்ற திருக்கோயில் களில் பணிபுரியும் அர்ச்சகர் மற்றும் பூசாரிகளுக்கு திருக்கோயிலுக்கு சிரமமின்றி சென்று குறித்த நேரத்தில் பூசைகள் செய்ய ஏதுவாக 10,000 மிதிவண்டிகள் இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

★ திருக்கோயில்களில் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் பள்ளிச் சீருடை இலவசமாக வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதுவரை 1,810 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.

★ திருக்கோயில்களால் நடத்தப்பட்டு வரும் கருணை இல்லங்களில் தங்கிப் படிக்கும் 8 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு தட்டச்சு, கணினி, இசை மற்றும் தையல் ஆகியவற்றில் இலவசமாகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதுவரை 71 மாணவர்களுக்கு கணினிப் பயிற்சியும், 18 மாணவர்களுக்கு தட்டச்சுப் பயிற்சியும் 30 மாணவர்களுக்குத் தையல் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

★ நிதிவசதியும், இடவசதியும் உள்ள 114 முக்கியத் திருக்கோயில்களில், பக்தர்களின் பயன்பாட்டிற்காக புதியதாக நூல் நிலையங்கள் துவங்கப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டில் உள்ளன. ஏற்கெனவே நூல்நிலையங்கள் உள்ள திருக்கோயில்களில், அவற்றை மேம்படுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ நிதிவசதியும், இடவசதியும் உள்ள 52 திருக்கோயில்களில், பொதுமக்கள்/பக்தர்களின் உடல் நலத்தையும், மனநலத்தையும் பேணிக்காக்கும் பொருட்டு தினந்தோறும் காலை வேளையில் தகுதியான பயிற்சியாளர்களைக் கொண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான நல்ல காற்றோட்டமும் சுகாதார வசதியுமுள்ள இடங்களில் யோகாசனப் பயிற்சி மற்றும் தியானப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

★ அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்கள் உட்பட மொத்தம் 485 திருக்கோயில்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நேரத்தில் சிறுவர்களுக்கு ஆன்மிக நெறி, நீதி மற்றும் ஒழுக்கத்தை கற்பிக்கும் ஆன்மிக வகுப்புகள் சான்றோர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற பின் இத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலையில் ஆன்மிக வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தினமும் மதியம் இலவசமாக அன்னதானம் வழங்கும் திட்டம்**

★ 360 திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அன்னதானத் திட்டத்திற்கென தனியே ஆணையர் அலுவலகத்தில் வங்கிக் கணக்கு ஒன்று தொடங்கப்பட்டு, நன்கொடையாக ரூ.3.27 கோடி பெறப்பட்டுள்ளது. மேலும் நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரிநிதியில் இருந்து ஒரு சிறப்பு நிரந்தர முதலீடாக ரூ.21.83 கோடி நிதி இத்திட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இந்த நிதி ஆதாரத்திலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் நிதிப்பற்றாக்குறை ஏற்படும் திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இவ்வரசு பொறுப்பேற்றபின் இதுவரை ரூ.5.60 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ தை மாதம் முதல்நாளை தமிழ்ப் புத்தாண்டு தினமாக அறிவித்ததனையடுத்து இத்துறை ஆளுகையின் கீழுள்ள முக்கிய திருக்கோயில்களில் தமிழ்ப் புத்தாண்டு சிறப்பாக கொண்டாடவும் அந்நாளில் பள்ளி மாணவ, மாணவியருக்கு திருக்குறளில் கட்டுரை எழுதுதல், குறள் ஒப்புவித்தல், பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்க ஆணையிடப்பட்டு,அதன்படி இந்த ஆண்டு தை மாதம் முதல் தேதியன்று தமிழ்ப் புத்தாண்டு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

★ ★ ★



# சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டம் அறிமுகம்

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள்

**2006–2007**

★ 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 1,525 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டன.

★ 120 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 120 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

★ பொது நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்களின் படிகள் எண்ணிக்கை 1,000 ஆக உயர்வு.

★ ஆசிரியர் இடமாற்றத்திற்கு ஒளிவு மறைவற்ற வெளிப்படையான கலந்தாய்வு.

★ 7,635 ஆசிரியர்கள், தேர்வு வாரியம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர்.

★ பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாகப் பள்ளிகளில் கொண்டாடச் சட்டம் இயற்றப்பட்டது.

★ உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளுக்கு கூடுதலாக 7,979 பட்டதாரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டனர்.

★ 525 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பட்டதாரித் தமிழாசிரியர்கள் பணியிடம் வழங்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

★ 500 வட்டார வளமைய ஆசிரியர்கள் பணி மூப்பு அடிப்படையில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம்.

★ 2006–2007இல் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 1,075 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்களுக்கு கட்டடம் கட்டப்பட்டது.

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 14,354 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ பொது நூலகத் துறையில் பகுதி நேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புர நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த 207 பேர் மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டனர்.

**2007–2008**

★ 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

★ நவீன மாநில நூலகம் கட்டும் பணி தொடங்கி வைக்கப்பட்டது.

★ தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக் கட்டணம் நீக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 4 ஆம் வகுப்புகளில் செயல்வழிக் கற்றல் முறை தொடங்கி வைக்கப்பட்டது.

★ கல்வியில் பின்தங்கிய 8 மாவட்டங்களில் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பதவிக்கு நேரடி மற்றும் பதவி உயர்வு விகிதம் 30 : 70 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

★ தொடக்கக் கல்வித் துறையிலும், பள்ளிக் கல்வித் துறையிலும் ஏற்பட்ட 13,683 ஆசிரியர் காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

★ 443 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம், குடிநீர் வசதி, ஆய்வகம், கழிவறை வசதி, சுற்றுச் சுவர் மற்றும் தளவாட சாமான்கள் பணிகளுக்காக நபார்டு வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டு முதல் தவணையாக ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 1,583 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15,845 வகுப்பறைகளுக்கு மாணவர்கள் அமர இருக்கைகள், மேசைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு மேசை, நாற்காலிகள் டான்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

★ அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ நூறு விழுக்காடு தேர்ச்சி விகிதம் காட்டிய அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் ரூ.2000 வழங்கப்பட்டுள்ளது.

★ மாணவ– மாணவியருக்கு யோகா பயிற்சி மற்றும் வாழ்வியல் திறன் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

★ நல்லாசிரியர் விருதுத் தொகை ரூ.2,000த்திலிருந்து ரூ.5,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 8 மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

★ கூடுதலாக 5 மெட்ரிக் பள்ளி ஆய்வர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு கட்டடம், பணியிடைப் பயிற்சி, ஆராய்ச்சி, கணினி மற்றும் நூல் வாங்கிட ரூ.20.21 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ 76 புதிய நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

★ கோவை, மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

★ வேலைவாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வருட பணி முடித்த 27 பகுதிநேர நூலகர்கள், ஊர்ப்புர நூலகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட கோடைக்கால பயிற்சி முகாம் மூலம் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

★ மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.2.25 கோடி செலவில் தமிழ் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

**2008– 2009**

★ தமிழ் வழியில் பயின்று 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 1,000 மாணவ/ மாணவிகளுக்கு மாவட்ட வாரியான தரப்பட்டியல் அடிப்படையில் ஊக்கப்பரிசாக கணினிகள் வழங்கப்பட்டன.

★ 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு கவனத்தை ஒருமுகப்படுத்தும் நேரமாக ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ள 10 நிமிடங்களுடன், விடைத்தாளில் விவரங்களை நிறைவு செய்தல் நேரமாக மேலும் 5 நிமிடங்கள் கூடுதல் கால அவகாசம் மார்ச் 2009 முதல் வழங்கப்படுகிறது.

★ 100 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

★ 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் மொழி ஆய்வகங்கள் அமைக்கப்பட்டது.

★ அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் 6,650 நடுநிலைப் பள்ளிகளில் முதற்கட்டமாக 2,200 பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் அத்துறையில் பணிபுரிவோர் நலன் காத்திட அவர்களுக்கென தனி நல வாரியம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

★ அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களிடமிருந்து பெறப்படும் சிறப்புக் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ அரசு மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்விப்பாடப் பிரிவில் விவசாயம் பயிலும் மாணவர்களுக்கு கற்பிக்க 176 விவசாயப் பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ பள்ளிகளில் கணினிக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் 1,686 கணினி பயிற்றுநர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ பள்ளிக் கல்வித் துறையில் நடப்பாண்டில் கட்டப்படும் அனைத்துக் கட்டடங்களுக்கும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு கட்டடம் என்று பெயர் சூட்டுதல்.

★ 2008–2009ஆம் ஆண்டு 1,005 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன மற்றும் 1,577 புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன.

★ 2008–2009 ஆம் கல்வியாண்டில் 9,397 ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப ஆணையிடப்பட்டுள்ளது.

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.192 கோடி செலவில் 5,949 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

★ அனைத்து சமத்துவபுரங்களிலும் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ 100 ஊர்ப்புர நூலகங்கள் கிளை நூலகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

★ கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகம் மற்றும் மாவட்ட நூலகர் அலுவலகம் ரூ.1 கோடி மதிப்பிலும் ஈரோடு மாவட்டத்தில் நூலகம் ரூ.1 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ளன.

★ 47 நூலகங்களுக்கு ரூ.5.31 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ மாவட்டங்களில் செயல்படும் நூலகங்களுக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2009– 2010**

★ சமச்சீர் பள்ளிக்கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக்கல்வி முறைச் சட்டம், 2010 இயற்றப்பட்டுள்ளது.

★ பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துவதற்கு, தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 இயற்றப்பட்டு இச்சட்டம் 07.12.2009 அன்று முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான சட்ட விதிகளும் 07.12.2009 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

★ நபார்டு உதவியுடன் பகுதி 10 திட்டத்தின் கீழ் 2009–2010ஆம் ஆண்டில் 303 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக ரூ.24,706.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ மைய அரசு, பெண்கள் எழுத்தறிவில் 50 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள மாவட்டங்களில் 'கற்கும் பாரதம்' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ 2,500 நடுநிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 3 மடிக்கணினி (Laptop) வீதம் ரூ.50 கோடி செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ முதன் முறையாக நேரடி நியமனம் மூலம் 67 உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ 12,058 ஆசிரியர் காலிப்பணியிடங்களை நிரப்ப ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

★ 5 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டன. 831 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன.

★ 115 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 115 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

★ தேசிய பெண்கல்வி ஊக்குவிப்பு இடைநிலைக்கல்வித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு தேர்வு பெற்று ஒன்பதாம் வகுப்பில் பயிலும் 16 வயதுக்குட்பட்ட மாணவியருக்கு ரூ.3,000 வீதம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

★ ரூ.100 இலட்சம் மதிப்பில் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.100 இலட்சம் மதிப்பில் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணித ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ ரூ.52 இலட்சம் மதிப்பில் 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் மொழி ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ ரூ.150 இலட்சம் மதிப்பில் திருவள்ளூரில் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 6,7,8 வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவிகள் வசதிக்காக ரூபாய் 46 கோடி செலவில் பள்ளிகளுக்கு இருக்கைகள் மற்றும் மேசைகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் 6.5 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை வளர்க்கும் வகையில் 75 ஆங்கில சிறுகதைப் புத்தகங்கள் (Supplementary Readers) உருவாக்கப்பட்டு அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஜோகில்பட்டி அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.60 இலட்சத்தில் புதிய கட்டட வசதி ஏற்படுத்தப்பட்டது.

★ ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் மூலம் ரூ.5.22 கோடி செலவில் 82,000 ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ ஊர்ப்புர நூலகர்களுக்கு வழங்கப்பட்ட தொகுப்பூதியமான ரூ.1,500ஐ சிறப்புக் காலமுறை ஊதியமாக ரூ.2,500– 5000 + ரூ.500/– என உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ வாடகைக் கட்டடத்தில் செயல்படும் 25 கிளை நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

★ ★ ★



# உணவுப் பொருட்கள் பலவற்றிற்கு முழு வரிவிலக்கு

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்கள்

★ 1.1.2007 முதல் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 நடைமுறைப்படுத்தப்பட்டு, உபரி வரி, கூடுதல் விற்பனை வரி, மறு விற்பனை வரி போன்றவை நீக்கம் செய்யப்பட்டன.

★ திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டும் தமிழ் மொழியை மேம்படுத்துவதற்காகவும், 22.7.2006 முதல் தமிழில் பெயரிடப்பட்ட புதிய படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது. பின்னர், திரைப்படத் துறையினரின் வேண்டுகோளின்படி 22.7.2006–க்கு முன்னர் வெளியிடப்பட்ட தமிழ் பெயர் கொண்ட பழைய திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டது.

★ மக்களுக்குப் பயன்படும் வகையில் கேபிள் டி.வி உரிமையாளர்களால் செலுத்தப்பட வேண்டிய கேளிக்கை வரிக்கு 1.4.2008 முதல் வரிவிலக்கு அளிக்கப்பட்டது. கேபிள் டி.வி. நடத்துவோர் செலுத்த வேண்டிய 31.3.2008 வரையிலான கேபிள் டி.வி. மீதான கேளிக்கை வரி நிலுவை ரூ.20.14 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது.

★ வணிகர் நல வாரியத்தின் கீழ், ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த குடும்பநல உதவித் தொகை ரூ.20,000லிருந்து ரூ.50,000 ஆக 2.7.2007 முதல் உயர்த்தப்பட்டது. 2006–07 முதல் 2009–10–ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் 36 உறுப்பினர்களுக்கு ரூ.7.80 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ இருதய அறுவை சிகிச்சை மற்றும் புற்று நோய் அறுவை சிகிச்சைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.25,000 உதவித் தொகை ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டது. பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2006–07 முதல் 2009–10–ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் 5 உறுப்பினர்களுக்கு ரூ1.15 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ உறுப்பினர்களின் வாரிசுகளின் கல்லூரிப் படிப்பிற்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த வருடாந்திர கல்வி உதவித் தொகை ரூ.3,000இல் இருந்து ரூ.5,000ஆக உயர்த்தப்பட்டது. தொழிற் கல்விக்கு ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் ரூ.10,000 வழங்கப்படுகிறது. 2006–07 முதல் 2009–10–ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் 10 உறுப்பினர்களுக்கு ரூ.0.48 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ நலிவுற்ற வியாபாரிகளுக்கு கூட்டுறவுத் தொழிற் கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டிக் கடை அல்லது மூன்று சக்கர மிதிவண்டி வாங்க ரூ.10,000 நிதி உதவி வழங்கப்படுகிறது.




மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள், வணிகவரித்துறை அலுவலர்களின் பணித்திறனை ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு கைத்தொலைபேசி வழங்கி, தணிக்கைச் சாவடிகளில் வாகனங்களின் போக்குவரத்தினைக் கண்காணிக்க நிறுவப்பட்ட கேமராக்களைத் துவக்கி வைத்தார். (2.12.2009)

★ வணிகர் நட்புறவான சமாதானத் திட்டம் 1.10.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2008இல் மேலும் ஒரு முறை தீர்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, மொத்தம் 10,250 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூ.85.39 கோடி வரி நிலுவை வசூல் செய்யப்பட்டது.

★ இந்த ஆட்சி பொறுப்பேற்றபின் வரி கைவிடுதல் ஆய்வுக்குழு துவக்கப்பட்டு மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டு, 66 வரி கைவிடுதல் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டு, 65 இனங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

★ 2006–07–ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பருப்பு மற்றும் பயறு வகைகளின் மாவு, வறுகடலை, சமையல் எண்ணெய், தமிழ் மென்பொருட்கள், சாம்பிராணி, எரிசாம்பல், சிட்டா நூல், வெல்லம், தேங்காய், பட்டாணி, புண்ணாக்கு ஆகிய பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

★ 2007–08–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 'உள்ளூர் வரி' செலுத்தப்பட்ட இரசாயன உரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கலப்பு உரக் கலவைகள், விதைப்பதற்காக மட்டும் உபயோகப்படுத்தப்படும் அனைத்து விதைகள், கேன்கள் மற்றும் பாக்கெட்டுகளில் விற்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், குறிப்பிட்ட 38 வகை நாட்டு மருந்துகள், தஞ்சாவூர் தட்டு, பென்சில்கள், எழுதும் மை போன்ற மேலும் 25 பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

★ 2008–09–ஆம் ஆண்டில், எடை நிபந்தனை ஏதுமின்றி மங்கல நாணாகப் பயன்படுத்தப்படும் தங்கத்தினால் செய்யப்பட்ட தாலி, கருகமணி மற்றும் சிலுவை, பன் மற்றும் ரஸ்க், துணி உள்ளொட்டிய காகித உறை, அனைத்து சித்த மருந்துகள், சோயா எண்ணெய், மஞ்சள் பொடி, மிளகாய் பொடி மற்றும் தனியா பொடி, தேங்காய் துருவல், தேங்காய் பால் மற்றும் தேங்காய் பால் பொடி ஆகியவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

★ 2009–2010ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் மிளகு மற்றும் சீரகம் (மொத்த விற்பனைத் தொகை நிபந்தனைக்குட்பட்டு, பருப்பு, பயிறு மற்றும் பட்டாணி ஆகிய பொருட்களை உபயோகித்து மாவு தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய கொள்முதல் வரி, கையினால் தயாரிக்கப்படும் இரும்புப் பெட்டி (trunk box), கையினால் தயாரிக்கப்படும் தகர டின்கள் ஆகியவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

★ 2010–2011ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் மிளகு, சீரகம் மற்றும் சோம்பு ஆகியவற்றின் பொடி வகைகள் (விற்பனை மீதான வரி), அவற்றை தயாரிக்கப் பயன்படும் பொருட்கள் (மீதான கொள்முதல் வரி), சோற்றுக் கற்றாழையினைப் பயன்படுத்தி, தயாரிக்கப்படும் பொருட்கள் (விற்பனைத் தொகை வரம்பிற்கு உட்பட்டு), வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை (ஒரு ஆண்டு காலத்திற்கு மட்டும்), நகராட்சி திடக் கழிவிலிருந்து தயாரிக்கப்படும் எரிபொருட்கள், பாக்கு மர இலையில் தயாரிக்கப்படும் தட்டு, தொன்னை உள்ளிட்ட கோப்பை, சிறு வீடுகள் கட்ட பயன்படுத்தப்படும் பனஞ் சட்டங்கள், ஐஸ் கட்டிகள், ஜரிகை (பாலியஸ்டர் பிலிம் நூல் மற்றும் ரேடியன்ட் நூல் நீங்கலாக) (கொள்முதல் மற்றும் விற்பனை வரி) ஆகிய பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

★ 2007–08ஆம் ஆண்டில், சாதாரண மக்களால் உபயோகப்படுத்தப்படும் பஜ்ஜி மாவு, பேரீச்சம்பழம் பாகு, தாவர எண்ணெய் போன்ற உணவுப் பொருட்கள் மற்றும் மாவு அரவை இயந்திரங்கள், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய சிகிச்சை பொருட்கள், நோய் அறிதற்கான சோதனைக் கருவிகள் போன்ற ஏனைய பொருட்களுக்கான வரிவிகிதம் 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டது.

★ 2008–09–ஆம் ஆண்டில், பாக்கின் வறுக்காத சீவல், மொசைக் சில்லுகள், காகித அட்டையினால் தயாரிக்கப்பட்ட கோப்பு அட்டைகள் (Files and folders), மின் உற்பத்தி எந்திரங்கள் (Generators), ஆகியவற்றின் மீதான வரி 12.5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

★ வணிகச் சின்னமிட்ட நெய், வணிகச் சின்னமிட்ட ஊறுகாய், கையினால் தயாரிக்கப்படும் இரும்புப் பெட்டகம் (iron safe), உலர்ந்த திராட்சை, இணைப்பான்களாகப் பயன்படுத்தப்படும் குண்டூசி, ஊக்கு, ஜெம் கிளிப்புகள், அடையாள அட்டை கிளிப்புகள், தேர்வு அட்டை கிளிப்புகள், இரப்பர் பேண்ட், ஸ்டேப்ளர் பின், தகவல் தொழில்நுட்பப் பொருளான ஐ–பாட் (i-pod), MP3 மற்றும் MP4 பிளேயர்கள் ஆகியவற்றின் மீதான வரி 12.5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப் பட்டது.

★ மேலும், சாதாரண மக்கள் பயன்படுத்தும் பொருட்களான வணிகச் சின்னம் இடப்பட்ட காபித்தூள் (உடனடி காபித்தூள் தவிர), பெயிண்ட் பிரஷ், வணிகச் சின்னம் இடப்பட்ட இனிப்பு மற்றும் கார வகைகள், கத்தி, கத்தரிக்கோல், தையலுக்குப் பயன்படுத்தப்படும் கை ஊசிகள், வணிகச் சின்னம் இடப்பட்ட உடனடி உணவுப் பொருள்கள் (மாவு, பொடி மற்றும் ஈரமாவு) ஆகியவற்றின் மீதான 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

★ கோதுமை மீதான 4 சதவிகித வரி 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

★ சேலம் சேகோசர்வ் மூலம் விற்கப்படும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மீதான வரி 2 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

★ 1.1.2007 முதல் 31.3.2010 வரையிலான காலத்தில், மொத்தம் 763 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

அதில், 280 பணியிடங்கள் கருணை அடிப்படையில் நிரப்பப்பட்டுள்ளன.

★ 1.1.2009 முதல் 31.12.2009 வரையிலான கால அளவில், தகவல் அறியும் உரிமைச் சட்டம்–2005–இன் கீழ் 241 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அனைத்து விண்ணப்பங்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ மேலும், வணிகர் குறித்த விவரங்களை வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) வழியாக "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி"(Interactive Voice Response System) மூலமாக அறிந்து கொள்ளலாம். இதற்கான கட்டணமற்ற தொலைபேசி எண் 1800 2200 17.

★ இத்துறையில் வணிகப் பெருமக்களின் பயன்பாட்டிற்காக www.tnvat.gov.in என்ற இணையதளமும், துறை பயன்பாட்டிற்காக உள் இணையதளம் (intranet) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ இத்துறையில், ரூ.2.35 கோடி செலவில் மின் ஆளுகை முறை, வணிகர்களின் நலன் கருதி செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதாந்திர நமூனாக்கள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல், இணையதளம் மூலமாக வரிவிதிப்பு செய்தல் மற்றும் இணையதளம் மூலமாக சட்டப்பூர்வமான படிவங்கள் வழங்குதல் போன்ற மின் சேவைகள் வணிகவரித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

★ மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956–இன் கீழ் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கும் மாதாந்திரப் படிவங்களை மின்னணு முறையில் தாக்கல் செய்வதற்கும் மென்பொருள் இத்துறையினால் உருவாக்கப்பட்டு அனைத்து வரிவிதிப்பு வட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளது.

★ LAN (Local Area Network) உள் வலை இணையம் மற்றும் இணைய அகல் வழி (Internet Broad Band) இணைப்பு வணிகவரித் துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் ரூ.3.75 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

★ உள்ளீட்டு வரி வரவு திரும்பப் பெற விரும்பும் அனைத்து வணிகர்களும் மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்ய வேண்டிய மாதாந்திரப் படிவங்களை www.tnvat.gov.in என்ற இணையதளம் மூலம் மின்னணு முறையில் தாக்கல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, சுமார் 1,80,000 வணிகர்கள், தங்களுடைய மாதாந்திரப் படிவங்களை தாக்கல் செய்து வருகின்றனர்.

★ இணையதளம் மூலமாக நேரடியாக வரி செலுத்தும் முறை பாரத ஸ்டேட் வங்கி மூலமாக www.tnvat.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக அக்டோபர் 2009 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ.1,400 கோடி வரி இந்த முறையில் வணிகர்களால் செலுத்தப்படுகிறது. 2010–2011–ஆம் ஆண்டில் இதே முறை மேலும் சில வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படும்.

★ வணிகர்கள் சட்டரீதியான படிவங்களை இணையதளம் மூலம் கேட்பதற்கும், அவற்றை வரிவிதிப்பு வட்டத்திலிருந்து பெறுவதற்கான தேதியை மின் அஞ்சல் மூலம் அறிவதற்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ 'பூஜ்ய வரி' விற்பனையில் (zero rated sales), உள்ளீட்டு வரி திரும்பக் கோரும் ஏற்றுமதியாளர்களுக்கு, படிவம் 'W' நமூனா ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவைக்கான இணையதள மென்பொருள் தேசியத் தகவல் மையத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

★ தணிக்கைச் சாவடிகள் நவீனப்படுத்தப்பட்டு உள் கட்டமைப்பு வசதிகள் ரூ.87 இலட்சம் செலவில் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

★ வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள் / சேவைகள் www.tnvat.gov.in என்ற இணையதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன. சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் பிறப்பிக்கப்பட்ட உடனேயே அறியும் வசதி. வணிகர் பற்றிய விவரங்கள், செலுத்திய வரி போன்ற விவரங்களை அறிய பேரேடு வசதி. பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி. வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர் மூலம் வணிகர்களின் முழு விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி. வரிவிதிப்பு வட்டத்தில் வரித் திருப்புகை அளித்த விவரத்தினைப் பார்வையிடும் வசதி.

★ TINXSYS திட்டத்தின் மூலம் சலுகை வரி அடிப்படையில் மாநிலங்களுக்கிடையே விற்கப்படும் பொருட்களின் விவரங்களை சிறந்த முறையில் கண்காணிக்கப் பயன்படுகிறது. வணிகப் பெருமக்கள் மற்றும் வணிகவரித் துறை அலுவலர்கள் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட படிவங்கள் மற்றும் வணிகர்களின் விவரங்கள் குறித்தும் சரி பார்க்க இத்திட்டத்தினைப் பயன்படுத்தலாம்.

★ ஒசூரில் 33,136 சதுர அடி பரப்பளவில் ரூ.1.60 கோடி செலவில் புதிதாகக் கட்டப்பட்ட பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு கட்டடத்தை மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் 11.9.2009 அன்று திறந்து வைத்தார். பல்வேறு இடங்களில் செயல்பட்டுக் கொண்டிருந்த வணிகவரி அலுவலகங்கள் இக்கட்டடத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன. ★



# சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு விழிப்புணர்வுப் பிரச்சாரம்

மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்
திரு. **டி.பி.எம்.மைதீன்கான்** அவர்கள்

★ சுற்றுச்சூழல் விழிப்புணர்வினைப் பள்ளி மாணாக்கர்களிடையே வலுப்படுத்த தமிழ்நாடு முழுவதும் 30 மாவட்டங்களில் 7,500 பள்ளிகளில் மைய அரசின் நிதியுதவியுடன் தேசிய பசுமைப்படை துவங்கப்பட்டுள்ளது. இவ்விழிப்புணர்வு இயக்கத்தில் 3 இலட்சம் மாணாக்கர்கள் பங்கேற்று வருகின்றனர். மைய அரசு 2006–07, 2007–08, 2008–09 மற்றும் 2009–2010ஆம் நிதியாண்டுகளில் ஆண்டிற்கு ரூ.1,95,00,000 தேசிய பசுமைப்படைத் திட்டத்திற்கு மானியம் வழங்கியுள்ளது.

★ பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு 1,200 சுற்றுச்சூழல் மன்றங்கள் மாநில அரசு நிதியுதவியுடன் துவக்கப்பட்டுள்ளன. மேலும் 2008–2009ஆம் ஆண்டில் சூழல் மன்றங்கள் புதிதாக 669 பள்ளிகளில் ஆரம்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தேசிய பசுமைப்படை / சூழல் மன்றங்கள் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளில் சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. நடப்பாண்டிலும் சூழல் மன்றங்களின் செயல்பாட்டிற்காக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ போகித் திருவிழாவின் போது டயர்கள், பிளாஸ்டிக் மற்றும் இதரப் பொருட்களை எரிப்பதை தடுக்கும் நோக்கத்துடன் சென்னை மாநகரம் முழுவதும்




மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்,
கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் இருந்து சேகரிக்கப்பட்ட ஒரு முறை பயன்படுத்தும்
15.75 டன் பிளாஸ்டிக் கழிவுகளை 10 லாரிகள் மூலம் திருநெல்வேலி இந்தியா சிமெண்ட் தொழிற்சாலையில்
எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்புவதை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
உடன் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான்,
மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ்ராஜன் ஆகியோர் உள்ளனர். (02.12.2009)

துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும், டயர்கள் எரிப்பதை கைவிடக்கோரி விழிப்புணர்வுப் பிரச்சாரமொன்றும் சுற்றுச்சூழல் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள சூழல் மன்றங்கள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் டயர்கள், பிளாஸ்டிக் முதலியவற்றை எரிக்கும் வழக்கம் நகர்ப்புரங்களில் பெரிதும் குறைந்துள்ளது.

★ தேசிய பசுமைப்படையின் சுற்றுச்சூழல் மன்ற உறுப்பினர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போட்டிகள் 2006ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் இப்போட்டிகள் நடத்த ரூ.32.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்களுக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 52.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ சுற்றுலாத் தலமாகிய குற்றாலம் நகரினை மேம்படுத்த ரூ.10 இலட்சம் செலவில் ஒரு சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் 2007–2008ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட ஆணை பெறப்பட்டது. பெறப்பட்ட இறுதி அறிக்கையின் செயலாக்க அம்சங்கள் நிதியுதவி அளிக்கும் முகமைகள் மூலம் நிறைவேற்றப்படும்.

★ சென்னை மாநகரில் பல்லாவரத்தை அடுத்துள்ள பால்கேனி எனும் சிறு ஏரி ஒன்று 2007–2008ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் செலவில் தூய்மைப் படுத்தப்பட்டது.

★ தமிழ்நாட்டில் பருவநிலை மாறுதலால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து அறிந்து கொள்ளவும் அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்ய சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்த ஆராய்ச்சி மையத்திற்கு ரூ.1.10 கோடி நிதியுதவி 2008–2009ஆம் ஆண்டில் வழங்கப் பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டின் தாவர இனத்தின் விவரங்களை சேகரித்து கையேடு தயாரிக்கும் பணிக்காக ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு 2009–2010ஆம் ஆண்டில் செய்யப்பட்டு கையேடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

★ தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் மேலாண்மை சோதனைக்கூடம் அமைப்பதற்கு 2009–2010ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு சோதனைக் கூடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

★ சுற்றுச்சூழல் துறையால் பாலாறு முதல் குமரி மாவட்டத்திலுள்ள தேங்காபட்டினம் வரை உயர் அலைமட்ட குறியீட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. உயர் அலை மட்டத்தினை அதற்கான கிராம வரைபடங்களில் 1:5000 என்ற அளவீட்டில் குறியீடு செய்யும் பணிகள் ரூ.2.23 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலையுணர்வு மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ கடலோரத்தில் வசிக்கும் மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக உயர் அலை மட்டக் குறியீடு செய்யப்பட்டு 250 மீட்டர் இடைவெளியில் கடலோரத்தில் கல்தூண்கள் நடப்படும்பணி ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் மற்றும் அதிக அளவில் பாதிப்பிற்குள்ளாகும் கடற்கரையோரப் பகுதிகளின் வரைபடம் தயாரிக்கும் பணி ரூ.4.92 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்**

★ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளுக்கு உதவும் வகையிலும், விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பதாரர்கள் சிரமமின்றி பூர்த்தி செய்து அதனை வாரியத்தில் எளிய முறையில் சமர்ப்பிக்கவும், இசைவாணைகளை உரிய காலத்திற்குள் வழங்கும் வகையில் இதற்கென தனியாக ஒரு உதவி மையத்தை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து இசைவாணை கட்டணங்களும் உதவி மையத்தில் செலுத்தலாம்.

★ அதிகளவில் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஏற்படும் விபத்து மற்றும் அதனால் ஏற்படும் மாசு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு வாரியம் தமிழ்நாட்டில் 10 இடங்களை முக்கிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளாகத் தேர்வு செய்துள்ளது. இந்த பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும் அந்த பகுதியில் உள்ள பொதுமக்களை நேரடியாகத் தொடர்புகொள்ளவும் தனித்தனியாக ஒரு உதவி சுற்றுச்சூழல் பொறியாளரை வாரியம் நியமித்துள்ளது.

★ தமிழகத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் அதிக அளவில் தொழிற்சாலைகள் இருப்பதால் அனைத்து தொழிற்சாலைகளையும் சீரிய முறையில் கண்காணிக்கும் பொருட்டு இம்மூன்று மாவட்டங்களையும் இரண்டாக பிரித்து மூன்று புதிய மாவட்ட அலுவலகங்கள் முறையே ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் மற்றும் பெருந்துறையினை தலைமையிடமாகக்கொண்டு ஆகஸ்டு 2008ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது.

★ தமிழகத்தை 6 மண்டலமாகப் பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் மண்டல அளவிலான இசைவாணை வழங்கும் குழு 2009ஆம் ஆண்டு மார்ச் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளுக்கான இசைவாணைகள் கால விரயம் ஏற்படாமல் வழங்க ஏதுவாகும்.

★ தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாக கையாளுவதற்கு கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட் வளாகத்தில் தீங்கிழைக்கும் கழிவுப் பொருட்களை சுத்திகரித்து பாதுகாப்பாக அகற்றுவதற்கான பொது வசதி செயல்பட துவங்கியுள்ளது.

★ அறிவியல் ரீதியாக திடக்கழிவு மேலாண்மை செய்வதற்கு 8 நகராட்சிகள் முறையே காஞ்சிபுரம், ஒசூர், நாகப்பட்டினம், திருச்செங்கோடு, ஆலந்தூர், அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் கடையநல்லூர் ஆகியவை தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு நகராட்சிக்கும் ரூ.12.50 இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூ.1 கோடியினை வாரியம் வழங்க உள்ளது.

★ ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எரியும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான பொருட்கள் பயன்படுத்துவது குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், 9 வழிப்பாட்டுத் தலங்கள் மற்றும் 6 சுற்றுலாத்தலங்களில் விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்வதற்காக வாரியம் மொத்தம் ரூ.30 இலட்சம் தொகையை அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு கொடுத்து விழிப்புணர்வு பிரச்சாரம் செய்துள்ளது. மேலும் கன்னியாகுமரி மாவட்டம் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எரியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தாத மாவட்டம் (ஞடயளவஉை கசநந னுளைவசஉைவ) என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ வாரியம், பொது மக்கள், காற்று மாசு அளவினை அறிந்து கொள்ளும் வண்ணம் சுமார் 30 இலட்சம் செலவில் மின்னனு தகவல் பலகை 6 வாங்கப்பட்டு சென்னையில் உள்ள கத்திவாக்கம் மற்றும் மதுரை, திருச்சி, கோயம்பத்தூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. தொழிற்சாலை களிலிருந்து ஆவியாகக்கூடிய கரிம கூட்டுப் பொருட்கள் வெளியேறுவதை கண்காணிக்க ஆவியாகக் கூடிய கரிம கூட்டுப் பொருட்களை அளவிடும் 6 கருவிகள் மற்றும் மெர்கேப்டன்களை அளவிடும் 2 கருவிகளை வாங்க வாரியம் ரூ.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

★ வாரியத்தின் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும்பொருட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மார்ச் 2007 ஆம் ஆண்டு முதல் வேலூரில் புதிய அலுவலகம் கட்டப்பட்டு இயங்கிவருகிறது. மேலும் அரும்பாக்கத்தில் புதிதாக மாவட்ட அலுவலகம் கட்டப்பட்டு டிசம்பர் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. தூத்துக்குடியில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு பிப்ரவரி 2009ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகின்றது. காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான அலுவலகம், மறைமலைநகரில் கட்டப்பட்டு ஜூலை 2009ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகின்றது.

★ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மார்ச் 2007 ஆம் ஆண்டு முதல் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஊர்தி மூலம் நடமாடும் சுற்றுச்சூழல் கண்காட்சியானது அரசு சாரா அமைப்பின் உதவியுடன் தமிழகத்தின் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளி கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகிறது. இந்த நடமாடும் கண்காட்சியால் சுமார் 5,76,879 பயன் அடைந்துள்ளனர்.

★ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பணியில் இருந்து மரணம் அடைந்தவர்களின் வாரிசுதாரர்களின் அவரவர் கல்வித்தகுதியின் அடிப்படையில் இதுவரை 8 பேருக்கு பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 13 உதவிப் பொறியாளர்கள், 8 சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள், 19 உதவியாளர்கள், ஒரு களப்பணி உதவியாளர், 8 ஆய்வக உதவியாளர்கள் மற்றும் 7 தட்டச்சருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 2 தட்டச்சர் மற்றும் ஒரு சுற்றுச்சூழல் விஞ்ஞானி ஆகியோர் ஊனமுற்றவர்களாவர். வாரிய பொறியாளர்களுக்கு சுமார் 15 ஆண்டுகளாக வழங்கப்படாது இருந்த பதவி உயர்வு கடந்த 2007ஆம் ஆண்டு சுமார் 63 பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதோடு விஞ்ஞானிகள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

★ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பத்து வருடங்களுக்குப் பிறகு செய்தி மடல் வெளியிட்டு புத்துயிர் அளித்துள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் வாரியம் 30 நான்கு சக்கர (இலகு) வாகனங்களும் ஒரு கனரக வாகனமும், 5 இரு சக்கர வாகனங்களும் வாங்கியது. இவற்றின் செலவின மதிப்பு ரூ.171.82 இலட்சம் ஆகும்.

★ நகரங்களில் வாகனங்களால் ஏற்படும் காற்று மாசினைக் குறைக்கும் பொருட்டும் பசுமைப் போர்வையினை அதிகப்படுத்தும் நோக்கிலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதுவரை சுமார் ரூ.4.5 கோடி தொகையினை வனத்துறையிடம் அளித்துள்ளது. இதைத்தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு கிராமத்தினை பசுமை போர்வை ஏற்படுத்தி முன்மாதிரி கிராமமாக திகழ்வதற்கென ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.3.50 இலட்சத்தினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கவுள்ளது.

★ கரியமில வாய்வின் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கும் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சென்னை மாவட்டத்தை தவிர்த்த 31 மாவட்டங்களுக்கு ரூ.31 இலட்சத்தினை அரசுப் பள்ளிகளில் பசுமை போர்வையினை ஏற்படுத்த வழங்கியுள்ளது. ★



# புதிய விளையாட்டு அரங்குகள் - நீச்சல் குளங்கள் அமைப்பு

மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்
திரு. **டி.பி.எம்.மைதீன்கான்** அவர்கள்

★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 2006–2007ஆம் ஆண்டில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் செயற்கை இழை தடகள ஓடுதளப் பாதை ரூ.240 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

★ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசுப் பங்கீட்டுத் தொகை ரூ.30 இலட்சம் கொடுக்கப்பட்டு, நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது.

★ திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டத்தில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் ரூ.14 இலட்சத்தில் அமைக்க ஆணை வழங்கப்பட்டு, திருநெல்வேலியில் பணி முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது. சேலம் மாவட்டத்தில் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

★ சென்னை மாவட்டத்தில் இரண்டு இடங்களிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம், பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், சென்னை செனாய்நகர் நீச்சல்குள வளாகத்திலும், தெற்காசிய விளையாட்டு கிராமத்திலும் இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

★ திருவண்ணாலை மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் தலா ரூ.33 இலட்சம் அரசுப் பங்கீட்டுத் தொகையுடன் நீச்சல் குளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணி நிறைவடைந்துள்ளது.

★ மதுரை மாவட்ட ரேஸ் கோர்ஸ் விளையாட்டரங்கத்தில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மின்னொளியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த மின்னொளி வசதிகள் செய்யப்பட்டன.

★ சென்னை நேரு உள் விளையாட்டரங்கத்தில் அரசு மானியம் ரூ.200 இலட்சம் அனுமதித்து,




மாண்புமிகு சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள்
31ஆவது முதியோர் தேசிய தடகளப் போட்டியைத் தொடங்கிவைத்து
அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். (4–02–2010)

ரூ.131 இலட்சத்தில் உள் விளையாட்டரங்க மேற்கூரையை அப்புறப்படுத்தி, புதுப்பிக்கப்பட்டு உள்ளது.

★ திருநெல்வேலி மற்றும் சென்னையில் விளையாட்டு விடுதி கட்ட அரசு அனுமதித்து ரூ.56 இலட்சத்தில் திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கத்தில் விளையாட்டு விடுதி கட்டும் பணி முடிவடைய உள்ளது.

★ திருநெல்வேலி, திருப்பூர் மாவட்டத்தில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் கட்ட ரூ.1 கோடி அரசுப் பங்கீட்டுத் தொகை அளித்து திருநெல்வேலி மாவட்டத்தில் உள் விளையாட்டரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் சிக்கன்னா கலைக் கல்லூரியில் உள் விளையாட்டரங்கம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ தருமபுரி மாவட்டத்தில் அரூரிலும், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியிலும் தலா ரூ.15 இலட்சம் அரசுப் பங்கீட்டுத் தொகை அளித்து சிறிய விளையாட்டரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

★ விழுப்புரம் மாவட்டத்தில் அரசுப் பங்கீட்டுத் தொகையாக ரூ.35 இலட்சம் வழங்கி நீச்சல் குளம் கட்ட 17.11.2009 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி நடைபெற உள்ளது.

★ கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கத்தில் "டி" பகுதியில் செயற்கை இழை ஓடுகளப் பாதை அமைக்க அரசு ரூ.25 இலட்சம் அனுமதித்து பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ திருச்சி அண்ணா விளையாட்டரங்கத்தில் செயற்கை ஆக்கி மைதானம் அமைக்க அரசு ரூ.300 இலட்சம் அனுமதித்து பணி நடைபெற்று வருகிறது.

★ முதலாவது இளையோர் காமன்வெல்த் வாள்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியை 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை சென்னையில் நடத்த அரசு அனுமதித்து ரூ.4 இலட்சம் வழங்கி சிறப்பாக நடத்தியது.

★ ஆண்களுக்கான ஆசிய கோப்பை வளைகோல்பந்துப் போட்டி 2007ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை சென்னையில் நடத்த அரசு அனுமதித்து ரூ.25 இலட்சம் வழங்கி சிறப்பாக நடத்தியது.

★ 12ஆவது சர்வதேச கடற்கரை கையுந்துபந்துப் போட்டி 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை சென்னையில் நடத்த அரசு அனுமதித்து ரூ.5 இலட்சம் வழங்கி சிறப்பாக நடத்தியது.

★ சர்வதேச ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியை சென்னையில் நடத்த அரசு அனுமதித்து ரூ.5 இலட்சம் வழங்கி சிறப்பாக நடத்தியது.

★ சென்னை ஓபன் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் சதுரங்கப் போட்டியை 2010ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் தேதி முதல் பிப்ரவரி 3ஆம் தேதி வரை சென்னையில் நடத்த அரசு அனுமதித்து ரூ.10 இலட்சம் வழங்கி சிறப்பாக நடத்தியது.

★ சர்வதேச அளவிலான சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் சென்னையில் நடத்திட அரசுப் பங்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.1 கோடியை அனுமதித்து வழங்கி 2006–2007, 2007–2008, 2008–2009, 2009–2010 ஆகிய ஆண்டுகளில் சிறப்பாக நடத்தப்பட்டது.

★ சென்னை மாராத்தான் போட்டிகள் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் வெற்றி பெற்றவர்களுக்கு சுமார் ரூ.11 இலட்சம் வரை பரிசுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

★ கத்தார் நாட்டில் டோகா நகரில் நடைபெற்ற 15ஆவது ஆசிய விளையாட்டு சதுரங்கப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த திரு.சசிகிரணுக்கு ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டது.

★ தடகளப் பிரிவில் மகளிருக்கான 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப்பதக்கம் வென்ற புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. சாந்திக்கு ரூ.15 இலட்சம் வழங்கப்பட்டது.

★ நீளம்தாண்டும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற திருமதி.அஞ்சு பி.ஜார்ஜ்க்கு ரூ.15 இலட்சம் வழங்கப்பட்டது.

★ ஸ்குவாஷ் ஒற்றையர் போட்டியில் வெண்கலம் வென்ற திரு.சௌரவ் கோசலுக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது.

★ வாள்வீச்சுப் போட்டியில் பங்குபெற துருக்கிக்கு செல்லும் செல்வி.பவானி தேவிக்கு ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

★ சதுரங்க வீரர் திரு.விஸ்வநாதன் ஆனந்திற்கு ரூ.32.73 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீடு ஒதுக்கியமைக்கு திருத்திய மறு ஒப்பளிப்பு செய்து 19.7.2006இல் ஆணை வழங்கப்பட்டது.

★ மொத்தமாக 2006ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்க உதவித் தொகையாக ரூ. 3.59 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

★ ஜனவரி 2007ஆம் ஆண்டு புதுதில்லியில் அகில இந்திய அளவில் இயக்ககங்களுக்கு இடையே நடைபெற்ற 'குடியரசு தினவிழா பயிற்சி முகாம்' போட்டியில், தமிழ்நாடு தேசிய மாணவர்படை மாணவர்கள் மூன்றாவது இடத்தைப் பெற்று பதக்கங்களை வென்றுள்ளனர்.

★ ஜனவரி 2008ஆம் ஆண்டு புதுதில்லியில் அகில இந்திய அளவில் இயக்ககங்களுக்கு இடையே நடைபெற்ற 'குடியரசு தினவிழா பயிற்சி முகாம்' போட்டியில், தமிழ்நாடு மாணவர்கள் மூன்றாவது இடத்தைப் பெற்று பதக்கங்களை வென்றுள்ளனர்.

★ ஜனவரி 2009ஆம் ஆண்டு புதுதில்லியில் அகில இந்திய அளவில் இயக்ககங்களுக்கு இடையே நடைபெற்ற 'குடியரசு தினவிழா பயிற்சி முகாம்' போட்டியில், தமிழ்நாடு மாணவர்கள் நான்காம் இடத்தைப் பெற்று பதக்கங்களை வென்றுள்ளனர்.

★ ஜனவரி 2010ஆம் ஆண்டு புதுதில்லியில் அகில இந்திய அளவில் இயக்ககங்களுக்கு இடையே நடைபெற்ற குடியரசு தினவிழா பயிற்சி முகாம் போட்டியில், தமிழ்நாடு மாணவர்கள் ஆறாவது இடத்தைப் பெற்று பதக்கங்களை வென்றுள்ளனர்.

★ இளநிலை உதவியாளர் 43, ஓட்டுநர் 35, இரவுக் காவலர் 7, பண்டகக்காப்பாளர் 18, அலுவலக உதவியாளர் 6, படகுக் காவலர் 1, துப்புரவுப் பணியாளர் 7 ஆகிய பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

★ நாட்டு நலப்பணித்திட்டம் தமிழகத்தில் செப்டம்பர், 1969 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 3,70,018 மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் தமிழகத்தில் கல்வி நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. இதற்கான நிதியை மத்திய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் பகிர்ந்து வழங்குகின்றன. தற்போது, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 2009–10ஆம் ஆண்டிற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் இயக்ககங்களுக்கான தகுதியுடைய தொகை (eligible grant) ரூ.11,47,05,580. இத்தொகையில், ரூ.6,69,11,588 மைய அரசின் பங்கும், ரூ.4,77,93,992 மாநில அரசின் பங்கும் அடங்கும். 2009–10ஆம் ஆண்டிற்கான முழுத் தொகையும் பல்கலைக் கழகங்கள் மற்றும் இயக்ககங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

★ நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவத் தொண்டர்களிடம் ஆளுமைத் திறன் வளர்த்தல் ஆகும். இதன் அடிப்படையில் பின்வரும் செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தலைமைப் பண்பு வளர்த்தல், யோகா மற்றும் தியானம், வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல், மென்திறன் வளர்த்தல், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு, முதலுதவிப் பயிற்சி, சுற்றுச்சூழல் மேம்பாடு, சாலைப் பாதுகாப்பு மற்றும் சாலை விதிகளை மதித்தல், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கு மீண்டும் படிப்பைத் தொடர உதவி செய்தல், குருதிக் கொடை, குருதி வகைப்படுத்தல், குருதிக் கொடையாளர் பட்டியல் தயாரிக்கும் பணி ஆகிய செயல்பாடுகள் தேவைக்கேற்றபடி நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழுநோய் கண்டறிதல், கண், பல், மார்பகப் புற்றுநோய் ஒழிப்பு, இதயநோய், தாய்சிசு நலன், எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் பொதுவான மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

★ இளைஞர்களிடையே சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வு, பாதுகாப்பான போக்குவரத்து முறைகளையும், முதலுதவி மற்றும் காவல்துறை எனது நண்பன் போன்ற முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. ஓசோன் படலத்தைப் பாதுகாத்திட, பொதுமக்களின் துயரைக் குறைத்திட, சமுதாய வனத்திட்டங்கள், மாதிரி வனச்சரகம், பசுமை எல்லை மரக்கன்று நடுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிளாஸ்டிக் பாலித்தீன் ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பைத் தோற்றுவித்தல், மழை பெறுவதற்கு வனங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துதல் போன்ற விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

★ சிறப்பு முகாம்களின்போது, மாணவர்கள் கிராமத்திலுள்ள இளைஞர்களுடன் இணைந்து அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான கழிப்பிடம், தண்ணீர்த் தொட்டிகள், சமூகக் கூடங்கள், சுற்றுச்சுவர் கட்டுதல், விளையாட்டு மைதானங்கள் உருவாக்குதல், சாலை அமைத்தல் மற்றும் மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளை செய்து வருகின்றனர்.

★ ★ ★



# பசுமைப் பரப்பளவு அதிகரிப்பு

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. **என். செல்வராஜ்** அவர்கள்

★ இந்தியாவிலேயே முன் மாதிரியாக "தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத்திட்டம்" மூலம் வனப்பகுதிகளுக்கு வெளியே பசுமை போர்வையை அதிகரிக்க தமிழ்நாடு வனத்துறையால் 2007–2008ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இலாபம் தரும் மரக்கன்றுகளான தேக்கு, சவுக்கு, பெருமரம், சில்வர் ஒக், மலைவேம்பு போன்றவற்றை ஆண்டிற்கு 100 இலட்சம் மரக்கன்றுகள் வீதம் மூன்று ஆண்டுகளில் 300 இலட்சம் மரக்கன்றுகள் சுமார் 8,0410 ஏக்கர் நிலப்பரப்பில் வனப்பகுதிகளுக்கு வெளியே பசுமை போர்வையை அதிகரிக்கும் நோக்குடன் செயல்படுத்தப்பட்டது.

★ கருவேல் தோட்டங்கள் அறுவடை செய்யப்பட்ட பரப்பு 26,852 ஏக்கர் – ஈட்டப்பட்ட வருவாய் ரூ.4,039 இலட்சம்.

★ நகர்புர வனவியல் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 1,36,046. இதற்கான செலவு ரூ.595.31 இலட்சம் ஆகும். 2009–2010 ஆம் ஆண்டு, வனவளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் 19,000 மரக்கன்றுகள் ரூ.0.65 கோடி செலவில் சென்னை மற்றும் மதுரை மாநகராட்சி அதனைச் சார்ந்த பகுதிகளில் நடப்பட்டுள்ளன.

★ தமிழகத்தில் உள்ள பசுமைப் பரப்பளவை அதிகப்படுத்துவதன் நோக்கத்திலும் தடி மரங்களின் வளத்தினை அதிகப்படுத்துவதற்கும் விழுப்புரம், சேலம், ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள கால்வாய் ஓரங்களில் வருட வாரியாக தேக்கு மரங்கள் நடப்பட்டு பசுமை பரப்பளவினை அதிகரிக்கச்செய்யப்பட்டுள்ளன. 2006–2008 வரை 6,440 எக்டர் பரப்பளவில் ரூ.1,016.48 இலட்சம் செலவில் தேக்கு மரங்கள் நடப்பட்டன.

★ 2008–2009 முதல் விழுப்புரம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், சிவகங்கை, மதுரை ஆகிய படுகை நிலங்களில் 2008–2009ஆம் ஆண்டில் 6,186 எக்டர் பரப்பளவில் ரூ.606.87 இலட்சம் செலவிலும், 2009–2010 ஆம் ஆண்டில் 6,900 எக்டர் பரப்பளவில் ரூ.1,056.07 இலட்சம் செலவிலும் தேக்கு மரங்கள் நடப்பட்டுள்ளன.

★ கடலோரப்பகுதியிலுள்ள மக்களின் உடமைகளையும், உயிர் சேதங்களையும் தடுக்கும் நோக்கத்துடன் உலக வங்கி நிதியுடன் அவசரகால சுனாமி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கடலோரப் பகுதியில் சதுப்பு நிலக்காடுகளும் கடலோரதொடர் தடுப்புக் காடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. 4 வருடங்களாக உருவாக்கப்பட்ட சதுப்பு நிலக்காடுகள் – 1,462 எக்டர், உருவாக்கப்பட்ட கடலோர தடுப்பு காடுகளின் பரப்பளவு – 3,678 எக்டர், உருவாக்கப்பட்ட காடுகளின் மொத்த நிலப்பரப்பளவு 9,240 எக்டர், மொத்த செலவு – ரூ.1,961.89 இலட்சம்.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் சூழல் அமைப்பினை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நான்கு வருடங்களில் 1,179 எக்டரில் ரூ.1,053.63 இலட்சத்தில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் கோவை, திண்டுக்கல், மதுரை, தேனி, ஈரோடு, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு காடு வளர்ப்பு, மண்வளப்பாதுகாப்புப் பணிகள், வேட்டைத் தடுப்புப்பணிகள், தகவல் தொடர்பு மேம்பாடு, மருத்துவத் தாவரங்கள் பாதுகாப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், நீர்பிடிப்புப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளுக்காக 2006–2007 முதல் 2009–2010 ஆம் ஆண்டுவரை 713 எக்டரில் ரூ.1,326.17 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

★ தமிழகத்தில் பள்ளி, கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் பொது சுகாதார நிலைய வளாகங்களில் மாசினைக் குறைப்பதற்காக கடந்த நான்கு வருடங்களாக 5,75,115 மரக்கன்றுகள் 128.97 இலட்சம் மதிப்பீட்டில் வளர்க்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது.

★ 2006–2007 ஆம் ஆண்டு முதல் 2009–2010 ஆம் ஆண்டு வரை ரூ. 2,734.66 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மற்றும் பழனி மலைகளில் 750 எக்டேர் தரம் குன்றிய காடுகளில் சுற்றுச்சூழல் மீட்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள், தமிழ்நாடு வனப்பகுதிகளில் சாலைகளின் மேம்பாடு, உயிர்ப்பன்மை பாதுகாப்பு, வனத்துறைக் கட்டடங்கள் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ முதுமலை புலிகள் சரணாலயமாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்டது. 2008–09 நிதியாண்டிற்கு மூன்று புலிகள் காப்பகத்திற்கும் ரூபாய் 13.70 கோடி ஒப்பளிப்பு செய்து அதில் ரூ.8.50 கோடி விடுவிக்கப்பட்டது. அவற்றில் ரூபாய் 5.75 கோடி செலவில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதே போன்று 2009–10 நிதியாண்டிற்கு பணியாளர்கள் செலவினத்தையும் சேர்த்து ரூ. 8.30 கோடி செலவில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. முதன் முறையாக தமிழகத்தில் புலிகள் வாழுமிடங்களை பாதுகாத்திட மார்ச் 2010ம் மாதம் புலிகள் பாதுகாப்பு அமைப்பு பதிவு செய்யப்பட்டு அதற்கான விதி முறைகள் அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது

★ வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச்சேதங்கள், பயிர்ச் சேதங்கள் மற்றும் பொருட்சேதங்களை தவிர்க்கும் பொருட்டு, தேவைப்படும் இடங்களில் அதிக அளவில் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 1167.40 கி.மீ நீளத்திற்கு ரூ.18.73 கோடி செலவில் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

★ தமிழகத்தில் முதல் முறையாக யானை மற்றும் ஊண்உண்ணிகளான புலி, சிறுத்தை மற்றும் கழுதைப்புலி தவிர மற்ற வன உயிரினங்களாலும் மனித உயிரிழப்பு, பயிர் சேதம் மற்றும் உடமைகளுக்கு ஏற்படும் சேதாரத்திற்கும் இழப்பீடு தொகை வழங்க 2006ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. 2006–2007 முதல் 2009–2010ஆம் ஆண்டு முடிய ரூ.3.86 கோடி இழப்பீடு தொகையாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவு நேர வன உயிரின உலாவிடம் ரூ.256 கோடி திட்ட செலவில் ஏற்படுத்த முடிவு மேற்கொள்ளப்பட்டு 2007–2008ம் ஆண்டில் ரூ.5 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதில் 2008–2009ம் ஆண்டு முடிய ரூபாய் 1.35 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டது. மீதமுள்ள தொகைக்கு மறு உயிர்ப்பாணை 2009–2010ஆம் ஆண்டில் அரசிடமிருந்து பெற்று அவற்றில் ரூ.3.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ 2008–2009 மற்றும் 2009–2010ஆம் நிதியாண்டில் சத்தியமங்கலம் மற்றும் மேகமலை புதிய வன உயிரின சரணாலயங்கள் முறையே, அறிவிக்கை செய்யப்பட்டது.

★ திருச்சி எம்.ஆர்.பாளையத்தில் யானைகள் மறுவாழ்வு மையம் அமைப்பதற்கு இந்திய அரசு கொள்கை அளவில் முடிவு செய்து 2009–2010ஆம் நிதியாண்டில் ரூபாய் 1.25 கோடி ஒப்பளிப்பு செய்து அதில் முதல் தவணையாக ரூபாய் 0.90 கோடி விடுவிக்கப்பட்டது. இத்திட்டம் 2010–2011ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

★ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தரங்குன்றிய காடுகளை மேம்படுத்திட ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் கடனுதவியுடன் தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ரூ. 567.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

★ இத்திட்டத்தின் வாயிலாக ஜப்பான் நிதி உதவி மற்றும் மாநில நிதி உதவியுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் (2006 –2007 முதல் 2009 – 2010 வரை) 1,48,250 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 815 கிராம வனக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2,810 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நிறுவப்பட்டு 38,033 மகளிர் பயனடைந்துள்ளனர்.

★ ரூ. 80.53 கோடி செலவில் 739.22 மில்லியன் கன அடி கொள்ளவு கொண்ட 3,485 தடுப்பணைகள் மற்றும் 1,194 கசிவு நீர்க்குட்டைகள் கட்டப்பட்டுள்ளன.

★ கிராம வனக்குழு கட்டடம், கதிரடிக்களம், ஆழ்துளைக் கிணறு, மேல்நிலைத் தொட்டிகள், கிராம வனக்குழு கட்டிடம், பள்ளிகளில் சுற்றுச்சுவர் போன்ற 2,194 கிராம வளர்ச்சிப்பணிகள் மேற்கோள்ளப்பட்டன.

★ களப்பணியாளர்கள் நலத்தினை கருத்தில் கொண்டு 463 குடியிருப்புக் கட்டடங்கள் உட்பட 512 கட்டிடப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ இத்திட்டத்தின் கீழ் 145.53 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ 2006–2007ஆம் ஆண்டு பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி கழகம் (TAHDCO) இடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.160.60 இலட்சம் செலவில் பழங்குடியினர்களுக்கு பவர் டில்லர், டீசல் இன்ஜின் மற்றும் மின் மோட்டார்கள் ஆகியவை வாங்க நிதயுதவி வழங்கப்பட்டது. இதன் மூலம் 3,342 நபர்கள் மற்றும் 2 பழங்குடியினர் குடியிருப்புகள் ஆகியோர் பயனடைந்துள்ளனர்.

★ 2008–2009 ஆம் ஆண்டில் ரூ. 201.00 இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டு 2009–2010 ஆம் ஆண்டில் பழங்குடியினர் பகுதிகளில் கசிவுநீர் குட்டைகள் அமைத்தல், மரங்களல்லாத வனப்பொருட்கள் சேமிப்பு கிடங்கு கட்டுதல், தேன் சேகரிப்பு பெட்டிகள் வழங்குதல், பழங்குடியினர்கள் திறன் மேம்படுத்தும் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ 2009–2010 ஆம் ஆண்டில் கசிவு நீர் குட்டைகள் அமைத்தலுக்காக ரூ.40 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பழங்குடியினர்களுக்கு ரூ. 2 இலட்சம் செலவில் தேனீ சேமிப்புப் பெட்டிகளும் ரூ. 25 இலட்சங்கள் செலவில் பள்ளிக்கட்டிட உள்கட்டமைப்பு மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர, 2009–2010ஆம் ஆண்டில் ரூ.547.32 இலட்சம் செலவில் 957 பழங்குடியினர்களுக்கு வீடு கட்டித்தர இதர துறைகளுக்கு வழங்கப்பட்ட தொகை தற்போது வனத்துறை மூலம் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படு வருகிறது.

★ 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.139 இலட்சம் செலவில் பழங்குடியினர் பகுதிகளில் கசிவு நீர்குட்டைகள் அமைத்தல் மற்றும் தடுப்பணைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 4,742 பழங்குடியினர்கள் பயனடைந்துள்ளனர்.

★ 2008–2009ஆம் ஆண்டில் வேலூர் மண்டலத்தில் நெல்லிவாசல் கிராமத்தில் உள்ள வனத்துறை நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் மேம்படுத்தும் பணிக்காக ரூ.10 இலட்சம் செலவிடப்பட்டது.

★ 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளில் நபார்டு வங்கி நிதி உதவி மூலம் வனத்துறையைச் சார்ந்த 19 பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளுக்கு ரூ.507.05 இலட்சங்கள் செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

★ 2008–2009 ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் வனப்பகுதியினுள் அமைந்துள்ள குடிநீர் வசதி இல்லாத 8 பழங்குடியினர் குடியிருப்புக்களுக்கு ரூ.25இலட்சம் செலவிலும், 2009–2010ஆம் ஆண்டில் 2 பழங்குடியினர் குடியிருப்புக்களுக்கு ரூ.8 இலட்சங்கள் செலவிலும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்ப ட்டுள்ளது.

★ உயிர்ப்பன்மை பாதுகாப்பு அவற்றின் நிலையான பயன்பாடு, உயிரின வளங்களின் பயன்பாட்டிலிருந்து கிடைக்கும் பலன்களின் சரியான பங்கீடு, உயிரின வளங்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் ஒப்புதல்களை முறைப்படுத்துதல் போன்றவற்றில் மாநில அளவில் முடிவெடுக்க மாநில உயிர்ப்பன்மை வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் 1877.768 எக்டேர் வனப்பரப்பு ஆக்கிரமிப்பாளர் பிடியிலிருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளது (31.12.2009 வரை) வன நிலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் வன எல்லைகளை சரியாக நிர்ணயித்து நான்கு ஆண்டுகளில் ரூ. 483.54 இலட்சங்கள் செலவில் 50,959 நிலையாக எல்லைக் கற்கள் கட்டப்பட்டுள்ளன. 2010–2011ம் ஆண்டில், 3416 எல்லைக் கற்கள் கட்ட ரூ.41 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் ரூ.28.02 கோடி செலவில் 403.54 கி.மீ துாரம் வனச்சாலைகள் மேம்பாடு / பராமரிப்பு மேற்கொள்ளப் பட்டன.

★ 2006–2007 ஆம் ஆண்டு முதல் 2008–2009 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மூலம் 512 கட்டடங்கள் ரூ.16.25 கோடியில் கட்டப்பட்டுள்ளன. மேலும், கடந்த மூன்றாண்டுகளில், 12வது நிதிக்குழுத் திட்டம் 2006–2007ல், 224 கட்டிடங்களில் ரூ.135.00 இலட்சம் செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2007–2008 மற்றும் 2008–2009ஆம் ஆண்டுகளில் புதியதாக மூன்று வன ஓய்வு விடுதிகள் முசிறி, துவரங்குறிச்சி மற்றும் பெரம்பலூரில் கட்டுவதற்கு ரூ.60 இலட்சம் அரசாணை அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2009–2010ம் ஆண்டில் கள்ளக்குறிச்சியில் மாவட்ட வன அலுவலம் ரூ.20 இலட்சம் செலவிலும் நாமக்கலில் மாவட்ட வன அலுவலர் குடியிருப்பு ரூ.25.00 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டுள்ளது.

★ சமூக வன ஊழியர்கள் மற்றும் / தோட்டக் காவலர்கள் ஊதியம் ரூ.817.50/– லிருந்து ரூ.2126/– மாத ஊதியமாக செப்டம்பர் 2008 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாநில முதுநிலைப்பட்டியலில் இடம் பெற்று, 10 ஆண்டுகள் பணிநிறைவு செய்து, தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் 3,058 தற்காலிக சமூக வன ஊழியர்கள் மற்றும் தோட்டக்காவலர்களை ரூ.2,500–5,000 + தர ஊதியம் ரூ.500 என்ற சிறப்பு ஊதிய விகிதத்தில் தோற்றுவிக்கப்பட்ட "தோட்டக்காவலர்" என்ற மிகைப்பணியிடத்தில் பணியமர்த்தி வரன்முறை செய்திட ஆணைகள் வழங்கப்பட்டது. அரசாணை அடிப்படையில் 2,069 தோட்டக்காவலர்கள்/சமூக வன ஊழியர்கள் ஆகியோர் "தோட்டக்காவலர்" என்னும் மிகைப்பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ அரசு ரப்பர் கழகமானது தமிழ்நாடு வனத்துறையிடமிருந்து 4279.7 எக்டர் நிலப்பரப்பில் உள்ள ரப்பர் மரங்களை குத்தகைக்கு எடுத்து 1.10.1984 முதல் கம்பெனி சட்டம் 1956 ன்படி 10.8.1984இல் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இது தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான ஒரு பொதுத்துறை நிறுவனம் ஆகும்.

★ அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு புதிய சம்பள ஒப்பந்தம் 22.10.2008 ல் ஏற்படுத்தப்பட்டது. அரசு ரப்பர் கழக தொழிலாளர்களுக்கு முந்தைய நடைமுறைப்படி தனியார் தோட்ட தொழிலாளர்களுக்கு இணையாக வழங்கப்பட்டு வந்த சம்பளத்தை மாற்றி, தனியார் தோட்டத் தொழிலாளர்களைவிட அதிகபடியான சம்பளம் வழங்க அரசு அனுமதி வழங்கியது.

★ அரசு ரப்பர் கழக தொழிலாளர்களுக்குச் சம்பளம் திருத்தியமைக்கப்பட்டு 1.12.2007 முதல் 30.9.2008 முடிய உள்ள காலத்திற்கு ரூ.98.5 இலட்சம் நிலுவைத்தொகை வழங்கப்பட்டது. இதனால் 1,849 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

★ பணியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் 2006–2007இல் முறையே 10% மற்றும் 20% போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டன. 2007–2008இல் பணியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் 20% போனஸ் மற்றும் கருணைத் தொகையும், 2008–2009இல் பணியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் 20% போனஸ் வழங்கப்பட்டது.

★ பணியாளர்களுக்கு 1.7.06 ,1.1.07, 1.7.07, 1.7.08,1.1.09 மற்றும் 1.7.09 முதல் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கியது போல் பஞ்சப்படி வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் , திருச்சிராப்பள்ளி**

★ 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை 13,972 எக்டர் பரப்பில் ரூ.2,138.70 இலட்சம் செலவில் தைலமரத் தோட்டங்களும், 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை 4,195 எக்டர் பரப்பளவில் முந்திரி மரத் தோட்டங்கள் ரூ.791.23 இலட்சம் செலவில் வளர்க்கப்பட்டன. கடந்த 4 ஆண்டுகளில் வரை ரூ.109.50 இலட்சம் செலவில் சவுக்கு மரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன.

★ 2006–2007 ஆம் ஆண்டில் 1,20,846.000 மெட்ரிக்டன் ரூ. 2,175.23 இலட்சமும், 2007–2008 ஆம் ஆண்டில் 55,033.625 மெட்ரிக்டன் ரூ.1,169.69 இலட்சமும், 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.1,36,722.800 மெட்ரிக்டன் ரூ.3,162.96 இலட்சமும், 2009–2010ஆம் ஆண்டில் ரூ.1,50,966.894 மெட்ரிக்டன் ரூ.3,645.85 இலட்சமும் காகித ஆலைகளுக்கு மரக்கூழ் மரங்கள் வினியோகம் செய்யப்பட்டன.

★ முந்திரித் தோட்டங்களை பொது ஏலம் மற்றும் டெண்டர் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு 2006–07 ஆம் ஆண்டில் ரூ.349.80 இலட்சம், 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.803.71 இலட்சம், 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.614.08 இலட்சம், 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.504.53 இலட்சம் வருவாய் பெறப்பட்டது.

★ இக்கழகத்தில் தோட்ட வேலைகள் செயல்படுத்தும்போது 35.05 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன.

★ மத்திய மாநில பண்ணையால் பராமரிக்கப்பட்ட 3,925 எக்டேர் வன நிலங்கள் ரூ.84.70 இலட்சங்கள் மதிப்பில் 17.05.06 அன்று குத்தகை அடிப்படையில் இக்கழகத்தால் எடுக்கப்பட்டது. வன நடவடிக்கைகளான மரக்கூழ் மரத்தோட்டங்கள் இங்கு வளர்க்கப்பட்டு வருகிறது.

★ விருத்தாசலம் மண்டலம் ஜெயங்கொண்டம் சரகத்தில் வன ஓய்வு விடுதிக் கட்டிடம் ஒன்று 2008–2009இல் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது. காரைக்குடி மண்டலம் காரைக்குடி சரகத்தில் வன ஓய்வு விடுதி கட்டிடம் ஒன்றும் 2008–09 ல் ரூ.14.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்**

★ தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் 4,431.92 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டத்தினை

உருவாக்கியும், அதன் மூலம் ஆண்டொன்றிற்கு 120 இலட்சம் கிலோகிராம் தேயிலைத்தூள் உற்பத்தி செய்யும் திறனுள்ள 8 நவீன தேயிலை தொழிற்சாலைகளும் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்திடம் உள்ளன. இக்கழகம் சுமார் 6,350 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், சுமார் 2,500 தொழிலாளர்களுக்கு தற்காலிக வேலை வாய்ப்பும் வழங்குகிறது.

★ தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத் தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த குறைந்த பட்ச ஊதியம் 15.06.2008 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி இக்கழகத் தொழிலாளர்கள் 1.4.2010 முதல் நாள் ஒன்றுக்கு ரூபாய் 126.00 தின ஊதியமாகப் பெற்று வருகின்றனர். மேற்படி தின ஊதியத்திற்கு தொழிலாளர் வைப்புநிதி, போனஸ், பணிக்கொடை போன்ற அனைத்து சட்டப்படியான பயன்பாடுகள் கணக்கீடு செய்து வழங்கப்படுகிறது.

★ இக்கழகத் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு சட்டப்படி குறைந்த பட்ச போனஸான 8.33 சதவீதமே பெறத் தகுதியுள்ளவர்கள் எனினும், அரசின் ஆணைப்படி தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனஸ் மற்றும் கருணைத் தொகையும், பணியாளர்களுக்கு (சி மற்றும் டி பிரிவு) 10 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகையாகவும் ஆக மொத்தம் ரூ.431 இலட்சம் 2008–09–ல் வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–2009–ஆம் ஆண்டில் தேயிலைத்தூளின் தரத்தை மேம்படுத்திய காரணத்தினால் தேயிலைத்தூளின் விலையில் முன்னேற்றம் ஏற்பட்டு 2008–09–ல் இக்கழகம் ரூ.921.21 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. 2009–2010–ல் இக்கழகம் ரூ.1,499 இலட்சம் இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ 8 தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயமாக்க இக்கழகத்தின் இயக்குநர் குழுமம் ரூ.3.50 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி தொழிற்சாலைகளை நவீனமயமாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

★ ஆறாவது ஊதியக்குழு பரிந்துரையின்படி இக்கழக அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.350 இலட்சம் ஊதிய நிலுவைத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

★ பாக்கெட் தேயிலைத்தூள் விற்பனையை மேம்படுத்தவும், விற்பனை அளவை அதிகரிக்கவும், பாரத்பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் மூலமும் மற்றும் தேயிலைத்தூள் விற்பனை முகவர்களை அதிகரிப்பதின் மூலமும் சில்லரை விற்பனையைப் பெருக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் பாரத் பெட்ரோ கெமிக்கல்ஸுடன் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு டிசம்பர் 2009 வரை 4.7 டன் தேயிலைத் தூள் ரூ.5.79 இலட்சத்திற்கு இந்நிறுவனத்தின் சில்லரை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ முற்றிலும் இயற்கை உரங்களை கொண்டு இயற்கை சார்ந்த தேயிலை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக குன்னூர் தேயிலைக் தோட்டத்தில் 7.5 எக்டேரில் இயற்கை தேயிலையை (Organic Tea) சோதனை முறையில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

★ இத்தேயிலைக் கழகம் முழுவதற்கும் ஐ.எஸ்.ஓ. 22000–2005 தரச்சான்றிதழ் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ ★ ★



# சாலைகள், பாலங்கள் மேம்பாடு

மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
திரு. **வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன்** அவர்கள்

★ கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் ரூ.12,094 கோடி செலவில் 57,787 கி.மீ. நீளச் சாலைகளில் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ கிராமச் சாலைகள் திட்டம் மற்றும் பேருந்துத்தட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3,877 கி.மீ. நீள ஊராட்சி ஒன்றியச் சாலைகள், தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் புதிய திட்டத்தின் கீழ் 2006–07ஆம் ஆண்டு முதல் இதுவரை ரூ.368 கோடி மதிப்பில் 2,637 கி.மீ. நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நபார்டு வங்கி நிதி உதவியுடன் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், ரூ.44.04 கோடி மதிப்பில் 274 கி.மீ நீளத் தார்ச் சாலைகள் 330 ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அமைக்கப்பட்டுள்ளன.

★ மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து செறிவுமிக்க மாவட்ட முக்கியச் சாலைகளை முறையே குறைந்தபட்சம் இருவழித்தடம் / இடைவழித்தடமாக அகலப்படுத்தும் கொள்கை முடிவின்படி கடந்த நான்காண்டுகளில் 10,280 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதர சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக 2006ஆம் ஆண்டில் மாநில நெடுஞ்சாலைகளில் 62% ஆக இருந்த இரு வழி மற்றும் பல வழி தடங்கள் 85% ஆக உயர்ந்துள்ளது. இதே போல் மாவட்ட முக்கியச் சாலைகளில் 47% ஆக இருந்த இடைவழி மற்றும் இரு வழி 63% ஆக உயர்ந்துள்ளது.

★ கடந்த நான்காண்டுகளில், 4,225 கி.மீ. நீள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் கரும்புச் சாலைகள் உள்ளிட்ட மொத்தம் 28,145 கி.மீ நீள சாலைகள் ரூ.3,386 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டன.

★ கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 1,046 பாலப் பணிகள் ரூ.881 கோடி செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

★ கடந்த நான்காண்டுகளில் மொத்தம் ரூ.2,246.50 கோடி மதிப்பீட்டில் 104 இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலம் / கீழ் பாலம் கட்ட அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு 22 சாலை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் ரூ.272.30 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், ரூ.969.50 கோடி மதிப்பிலான 43 இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக சாலை மேம்பாலம் / கீழ் பாலம் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ போக்குவரத்து நெரிசல் மிக்க நகரங்களுக்கு புறவழிச்சாலை/வட்டச்சாலை அமைக்க இவ்வரசு முக்கியத்துவம் அளித்து திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் பணி ரூ.4.40 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.112.74 கோடி மதிப்பில், நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் 41 நகரங்களுக்கு புறவழிச்சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ எட்டுக்குடி, காஞ்சிபுரம், துறையூர், இளையான்குடி, வந்தவாசி, ஓசூர் நகரங்களுக்குப் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம், கும்பகோணம் புறவழிச்சாலை விரிவு, சீர்காழி, நாகப்பட்டினம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி மற்றும் அரியலூர் நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் 23 நகரங்களுக்குப் புறவழிச்சாலை பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ நாமக்கல் மாவட்டம் கொக்கராயன் பேட்டையிலிருந்து ஈரோடு மாவட்டம் திண்டல் வரை சுமார் 23.80 கி.மீ. நீள ஈரோடு வட்டச் சாலைப் பணிக்கு நில எடுப்புப் பணிகளுக்கு ரூ.22 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பூர்வாங்கப்பணிகள் துவக்கப் பட்டுள்ளன.

★ திருத்துறைப்பூண்டி, பெரம்பலூர், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் நகருக்கு இரண்டாம் கட்டம், தாராபுரம், இராசிபுரம் ஆகிய நகரங்களுக்குப் புறவழிச்சாலை அமைக்க நில எடுப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் 27 நகரங்களுக்குப் புறவழிச்சாலைப் பணிகள் விரைவில் துவக்கப்படும்.

★ தமிழகத்தில் விபத்துக்குள்ளாகும் பகுதிகளாகக் கண்டறியப்பட்ட 307 இடங்களில், மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள 164 விபத்துப் பகுதிகளிலும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 36 விபத்துப் பகுதிகளிலும் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் ஆய்வுக் குழுவினரின் அறிக்கையில் 2002 முதல் 2008ஆம் ஆண்டுவரை வாகனப் போக்குவரத்து 78% அதிகரித்த போதிலும் விபத்து காரணமான உயிரிழப்பு 10,000 பதிவு செய்த வாகனங்களுக்கு 19 ஆக இருந்தது 11.85ஆக குறைந்துள்ளதாகப் பாராட்டியுள்ளனர்.

★ ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்பட்ட பணிகளில், பச்சையான்குப்பம், பழவேற்காடு, கொடியம்பாளையம் மற்றும் வேட்டைகாரன் இருப்பில் 4 பாலப்பணிகளும், 21 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணியும், மொத்தம் ரூ. 77.79 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

★ மைய அரசு நிதியுதவியுடன், சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் அரசு சாலைகளில், இதுவரை 32 பாலப் பணிகள் மற்றும் 410.07 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.125.85 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஊரகச் சாலைகளில் 32 கி.மீ. நீள சாலைகள் ரூ. 14.64 கோடி மதிப்பில் மேம்பாடு செய்யப்பட்டன. சின்ன கொட்டாயமேடு, வடக்கு பொய்யூர் மற்றும் நாலு வேதபதி ஆகிய இடங்களில் 3 பாலங்கள் ரூ. 7.75 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

★ இராஜீவ் காந்தி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் முதற்கட்டமாக, மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான 22 கி.மீ. நீள சாலை ஆறு வழிச் சாலையாக ரூ.300 கோடி செலவில் மேம்பாடு செய்யப்பட்டது. இரண்டாம் கட்டமாக சிறுசேரியிலிருந்து மாமல்லபுரம் வரையிலான 25 கி.மீ. நீள சாலையினை ஆறுவழிச் சாலையாக மேம்படுத்தும் பணி ரூ.550 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ திருப்பூர் நகர சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.70 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 99 கி.மீ. நீள அனைத்து சாலைப் பணிகளும், 5 பாலப்பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4 பாலப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ மதுரையைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளை மதுரை மாநகருடன் இணைக்கும் மதுரை நகர ஆரச்சாலை அமைப்புத் திட்டத்தின் கீழ் 123.20 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.70.60 கோடி மதிப்பில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

★ காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பகுதியில் பெருகி வரும் தொழிற்சாலைகளுக்கு தேவையான சாலை மற்றும் பாலக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ. 300 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, இதுவரை, 29 கி.மீ. நீளச் சாலைப் பணிகளும், 113 பாலப் பணிகளும் ரூ.186.51 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

★ சென்னை மாநகரில் தற்போதுள்ள சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் வண்டலூரில் தொடங்கி நெமிலிச்சேரி வழியாக மீஞ்சூர் வரை சென்னை பெருநகரைச் சுற்றி ஆறுவழித் தடம் கொண்ட 62 கி.மீ. நீளத்தில் வெளிவட்டச் சாலைப்பணிகள் இருகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு இதில், முதற்கட்டமாக 30 கி.மீ. நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலை 45இல் உள்ள வண்டலூர் முதல் தேசிய நெடுஞ்சாலை 205இல் உள்ள நெமிலிச்சேரி வரை ரூ.1,081.40 கோடி மதிப்பில் பொது–தனியார் பங்களிப்போடு வடிவமைத்தல், கட்டுதல், நிதி திரட்டுதல், செயல்படுத்தல், ஒப்படைத்தல் (DBFOT) அடிப்படையில் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.2,442 கோடி மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்ட 724 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகளில் கடந்த 4 ஆண்டுகளில் நில எடுப்புப் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு 31.03.2010 வரை சுமார் 660 கி.மீ. சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பணிகளுக்காக 13 மாவட்டங்களில் 634 எக்டர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

★ கடந்த நான்காண்டுகளில் 1,018 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில் ரூ.424 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகளும் 289 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில் ரூ.136 கோடி மதிப்பில் பராமரிப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர, 3 பெரிய பாலப் பணிகள் ரூ.43.85 கோடி மதிப்பிலும் 19 சிறிய பாலப் பணிகள் ரூ.13 கோடி மதிப்பிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ நில எடுப்புப் பணிகளில் இருந்து வந்த சுணக்கம் களையப்பட்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சாலைப் பணிகள் துரிதப்படுத்தியதின் விளைவாக 1,044 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் ரூ.5,579 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் கடந்த நான்காண்டுகளில் மட்டும் 4,131 எக்டர் நிலம் ஆணையத்திற்காக கையகப்படுத்தப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது.

★ கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை முன்னிட்டு இரயில் நிலையம், பேருந்து நிலையம் மற்றும் விமான நிலையத்தை இணைக்கும், சுமார் 96 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்தி மேம்பாடு செய்யவும், மையத் திட்டு அமைக்கவும் ரூ.59.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ கோவை மாநகரில் தேசிய நெடுஞ்சாலை 67இல் பங்குச் சந்தை முதல் நரசிம்மநாயக்கன் பாளையம் வரை (கி.மீ.340/0–360/0) உள்ள 20 கி.மீ. நீள சாலையில் உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் பணிகள் ரூ.49.70 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

★ நடப்பாண்டில் ரூ.3.48 கோடி மதிப்பில் சென்னை மற்றும் விழுப்புரம் வட்டங்களுக்கும், திருவள்ளூர், வாணியம்பாடி, நாகப்பட்டினம், தாராபுரம் மற்றும் திருப்பூர் கோட்டங்களுக்கும், நாகை உட்கோட்டம் மற்றும் திருச்சி, விழுப்புரம், சேலம் மண்டல ஆய்வகங்களுக்கும் மொத்தம் 9 அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக கன்னியாகுமரி படகுத் துறைக்கு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ரூ. 2.10 கோடி மதிப்பில் சுமார் 150 பயணிகள் பயணம் செய்யத்தக்க இரண்டு புதிய படகுகள், எம்.எல். குகன் மற்றும் எம்.எல்.பொதிகை வாங்கப்பட்டு பயணிகள் பயன்பாட்டிற்கு முறையே 08.06.08 மற்றும் 19.10.08 ஆகிய நாள் முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

★ தனியார் முதலீட்டுத் துறைமுகங்களை மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது.

★ ரூ.3,375 கோடி மதிப்பில் திருவாளர்கள் எல். & டி. ஷிப் பில்டிங் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் எண்ணூர் அருகில் காட்டுப்பள்ளி துறைமுகம், ரூ.1,800 கோடி மதிப்பில் திருவாளர்கள் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் மூலம் கடலூர் மாவட்டத்திலுள்ள திருச்சோபுரம் துறைமுகம், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்கடையூர் துறைமுக எல்லைகள், திருவாளர்கள் ப்பி.ப்பி.என். (P.P.N.) பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட், நிறுவனத்தினரால் ரூ.200 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்டு நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப் பட்டுள்ளது. திருவாளர்கள் இந்தியன் பவர் ப்ராஜக்ட் லிமிடெட் நிறுவனத்தால் ரூ.1,800 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படவுள்ள தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு சிறு துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு, 100 ஏக்கர் துறைமுக நிலம், கடல்சார் கட்டுமானங்களை நிறுவுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ கடலூரிலுள்ள துறைமுகத்தில் பொது, தனியார் பங்கேற்புடன் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ், அலைநீர் தடுப்பி அமைத்தல், தூர்வாருதல் மற்றும் சரக்கு கையாளும் வசதிகள் போன்றவற்றைத் தனியார் முதலீட்டின் மூலம் மேற்கொண்டு அதில் வரும் வருவாயில் ஒரு பங்கு ஒப்பந்த காலத்தில் தமிழ்நாடு கடல்சார்வாரியத்திற்கு வழங்கப்படும். ஒப்பந்தக் காலம் முடிந்தவுடன் துறைமுகம் வாரியத்திடம் மீள ஒப்படைக்கப்படும்.

★ கடல்சார் வாரியத்தின் சீரிய செயல்பாட்டினால் சரக்குப் போக்குவரத்து வருவாயில் அரசின் பங்குத் தொகை ரூ. 7.50 கோடியாக உயர்ந்துள்ளது.

★ ★ ★



# தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்
டாக்டர் திருமதி. **பூங்கோதை** அவர்கள்

★ தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதி 2005–2006இல் ரூ.13,615.10 கோடி, 2006–2007இல் ரூ.20,701.72 கோடி, 2007–2008இல் ரூ. 28,490 கோடி மற்றும் 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.36,680.40 கோடி ஆகும்.

★ புதிய, தகவல் தொடர்பு தொழில் நுட்பக் கொள்கை – 2008, 29.7.2008 அன்று வெளியிடப்பட்டது.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) சோழிங்கநல்லூரில் 377 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில் நுட்ப / தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினை நிறுவியுள்ளது. எல்காட் நிறுவனம் அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளை ரூபாய் 38 கோடி செலவில் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் செய்து முடித்துள்ளது. இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 13.5.2010 அன்று துவக்கி வைத்தார்.

★ கோவை மாவட்டம் விளாங்குறிச்சியில் 61.59 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ( ELCOT), தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் (TIDCO), டைடல் பார்க் லிமிடெட், இந்திய மென்பொருள் தொழில்நுட்பவியல் பூங்கா (STPI) ஆகியவை கூட்டாகச் சேர்ந்து நிறுவவுள்ள கோவை டைடல் பூங்காவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.2.2007 அன்று, இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. விப்ரோ மற்றும் டைடல் கோயம்புத்தூர் நிறுவனங்கள் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ளன. டைடல் கோயம்புத்தூர் வருகிற ஜுன் 2010–க்குள் தனது தகவல் தொழில் நுட்பவியல் பூங்காவை 17 இலட்சம் சதுர அடியில் கட்டி முடித்துத் தனது பணியை செப்டம்பர் 2010–க்குள் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளையும் ரூபாய் 17 கோடியில் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் செய்து முடித்துள்ளது.

★ தமிழக அரசு மதுரை இலந்தைக்குளம் கிராமத்தில் 28.91 ஏக்கர் நிலத்தையும், மதுரை வடபழஞ்சியில் 245.17 ஏக்கர் நிலத்தையும் இரண்டு தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்க எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.4.2008 அன்று இவ்விரு திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இலந்தைக்குளம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 50,000 சதுரடியில் தகவல் தொழில் நுட்ப மற்றும் நிருவாகக் கட்டடம் ரூபாய் 15 கோடியில் கட்டப்பட்டு வருகிறது. ரூ.7.50 கோடி செலவில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் முடியும் தருவாயில் உள்ளன. வடபழஞ்சியில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.14.20 கோடியில் நடைபெற்று 75% பணிகள் முடிவடைந்துள்ளன.

★ திருச்சி வட்டத்திலுள்ள நவல்பட்டு கிராமத்தில் 147.61 ஏக்கர் நிலத்தை தகவல் தொழில் நுட்ப மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க தமிழக அரசு, எல்காட் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 22.10.2009 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பொது உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.14 கோடியில் நடைபெற்று வருகிறது.

★ சேலம் மாவட்டம், சேலம் வட்டம் ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் 164.26 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் தகவல் தொழில் நுட்பவியல் பூங்காவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.09.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தொடக்கமாக 53 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு பொது உட்கட்டமைப்பு வசதிகள் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

★ எல்காட் நிறுவனம் 500 ஏக்கர் நிலப்பரப்பை கங்கைகொண்டான் கிராமம், திருநெல்வேலி தாலுகா, திருநெல்வேலியில் தகவல் தொழில் நுட்ப / தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க சிப்காட் நிறுவனத்திடமிருந்து வாங்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17.6.2007 அன்று, இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு பொது உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.10 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது.

★ கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், விசுவநாதபுரம் கிராமத்தில் 174.47 ஏக்கர் நிலத்தை தகவல் தொழில் நுட்ப மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க தமிழக அரசு எல்காட் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 26.2.2008இல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் வேலூரில், ஒரு புதிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படும். இத்தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு நிலம் கண்டறியப்பட்டு வருகிறது.

★ தமிழ்நாட்டின் மனிதவளத்தை மேம்படுத்தும் நோக்கில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் மையம் (ICT Academy) 8.4.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தினைப் பாராட்டி சுமார் 600 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

★ தமிழக அரசு காஞ்சிபுரம் மாவட்டம்,செங்கல்பட்டு தாலுக்கா,மேலக்கோட்டையூர் மற்றும் நல்லம்பாக்கம் கிராமங்களில் சுமார் 25 ஏக்கர் நிலத்தை இந்திய தகவல் தொழில் நுட்பவியல் வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி மையத்திற்கு இலவசமாக வழங்கியுள்ளது. இதுவரை சுமார் 150 மாணவர்கள் இந்நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மாநில தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இத்தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழுவின் முதல் கூட்டம் 23, ஆகஸ்ட் 2007 அன்று நடைபெற்றது.

★ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் நான்கு கட்டங்களில் 1,12,80,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள வீடுகளுக்கு வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தினை மேலும் செயல்படுத்தவும் எல்லா மட்டங்களிலும் கிடைத்த பாராட்டைத் தொடர்ந்தும் ஐந்தாம் கட்டமாக 40,00,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விடுபட்ட வீடுகளுக்கு இவ்வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். 2010–2011ஆம் நிதி ஒதுக்கீட்டில் ரூ.500 கோடி இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ மின் ஆளுகை நடவடிக்கைகளில், தனிக் கவனம் செலுத்த ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுகை முகமை என்ற தன்னாட்சி பெற்ற சங்கம் 2006 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

★ 7.2.2008 அன்று சண்டிகர் மாநிலத்தில் நடைபெற்ற 11ஆவது தேசிய மின் ஆளுகை மாநாட்டில் நமது மாநிலத்தின் இணையதளமான http://www.tn.gov.inக்கு, தங்கப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

★ 2008ஆம் ஆண்டு, புகழ்பெற்ற Dataquest பத்திரிகையின் "சிறந்த மின் ஆளுகை மாநிலம்" என்ற விருதினை, நமது மாநிலம் பெற்றுள்ளது.

★ "Comprehensive Web Presence" என்ற பிரிவின் கீழ் 2009 ஆம் ஆண்டிற்கான "Web Ratna Award"இல் முதல் பரிசினை மத்திய அரசிடமிருந்து தமிழகம் பெற்றுள்ளது.

★ தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு என்னும் மிக முக்கியமான வலைத்தளம் 01.12.2007 முதல் செயல்பாட்டில் இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்தை 8.4.2008 அன்று துவக்கிவைத்தார். இந்த இணைப்பு 5,000 கீழ்மட்ட அலுவலகங்களுக்கும் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ மாநிலத் தரவு மையம், தேசிய மின் ஆளுகைத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒரு முக்கியமான கட்டமைப்பு வசதியாகும். இத்திட்டத்திற்கென மைய அரசால், ரூ.55.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின், முதற்கட்டம் ரூ.12 கோடியில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் முடிக்கப்பட்டது. இதன் மூலம், இந்தியாவிலேயே, இத்தகைய அதிநவீன வசதி கொண்டுள்ள முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இந்த மாநிலத் தரவு மையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8.4.2008 அன்று தொடங்கி வைத்தார்.

★ பொதுச் சேவை மையத் திட்டத்தை, முனைப்புடன் செயல்படுத்தும் வெகு சில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழகம் முழுவதும், 5,440 இடங்கள் , பொதுச் சேவை மையங்களை அமைப்பதற்காக கண்டறியப்பட்டுள்ளன. இரண்டு சேவை நிறுவனங்களுள் ஒன்றான திருவாளர்கள் ஸ்ரேய் இன்போடெக் நிறுவனம் நான்கு மாவட்டங்களில் இத்திட்டத்தை வெற்றிகரமாகத் துவக்கி உள்ளது. இதுவரை 5,440 மையங்களில் 1,000 மையங்கள் முழுமையாக செயல்படும் நிலையில் சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 8.4.2008 அன்று முதல் மூன்று பொதுச் சேவை மையங்களைத் தொடங்கி வைத்தார்.

★ மத்தியத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை, "முன்னோடி மின்னணு மாவட்டத்'' திட்டத்தினை ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்துவதற்காக ரூ.12.58 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

★ அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையே தகவல் பரிமாற்றமும் சேவை விநியோகமும் ஒருங்கிணைக்கப் பட்ட முறையில் நடைபெறுவதற்காக, தமிழக அரசு, தமிழ்நாடு மின்னாளுமை முகமை மூலமாக, மாநில

சேவை விநியோக நுழைவாயில் (SSDG) உருவாக்க உள்ளது.

★ உயர்தரத்திலான கம்பிவடத் தொலைக்காட்சி சேவையை நியாயமான கட்டணத்தில் பொது மக்களுக்கு கேபிள் ஆப்பரேட்டர்கள் வாயிலாக வழங்குவதற்காக அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட் என்னும் நிறுவனத்தை 4.10.2007 அன்று தமிழக அரசு தொடங்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2008 ஜூலை 15ஆம் நாள் தஞ்சாவூர் தலைமுனையின் இயக்கம் தொடங்கப்பட்டது. அதே போன்று கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூரில் ஒன்றன் பின் ஒன்றாக தலைமுனைகள் செயல்படத் தொடங்கின. திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஒரு சிறிய அளவிலான அலைவரிசைத் தலைமுனை விழுப்புரம் மாவட்டத்திலுள்ள விக்கிரவாண்டியில் அமைக்கப்பட்டுள்ளது.மாவட்ட அளவில் கட்டண மற்றும் இலவச சேனல்கள் உட்பட 80 சேனல்கள் வரை தமிழ்நாடு முழுவதும் கிடைக்கும் வகையில் மேலே குறிப்பிட்டுள்ள தலைமுனைகள் வாயிலாக அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தால் சிக்னல்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக இதுவரை அரசிடமிருந்து ரூ.25 கோடி பங்குத் தொகையாகவும் ரூ.36.35 கோடி கடனாகவும் இந்நிறுவனத்தால் பெறப்பட்டுள்ளன.

★ கம்பிவடத் தொலைக்காட்சி தொழிலாளர்களின் நலன் கருதி அரசால் நலவாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 30,000 நபர்கள் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசால் இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டில், ரூ.135.54 கோடி மதிப்பிலான, தகவல் தொழில்நுட்பவியல் பொருட்களையும், 2008–2009ஆம் ஆண்டில் ரூ.500 கோடி மதிப்பிலானபொருட்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம், கொள்முதல் செய்துள்ளது.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தனது அலுவலகப் பணிகளைச் செயல்படுத்த தொழில்வளத் திட்ட மென்பொருள் ஒன்றை லினெக்ஸ் திறந்த மூலநிரல் மென்பொருள் மேடையில் உருவாக்கியுள்ளது. இந்த மென்பொருளானது 01.04.2009இலிருந்து படிப்படியாக எல்காட் அலுவலகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

★ வேளாண்மைத் துறையானது விவசாயிகளுக்கு ஒற்றைச் சாளர முறையில் தகவல்களையும் சேவைகளையும் வழங்கும் நோக்கத்துடன் அக்ரிஸ்நெட் என்ற வேளாண்துறைக்கான வலைவாசல் (Agrisnet Portal) ஒன்றை உருவாக்கி ஏற்றம் செய்யும் பணியினை எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

★ தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டப் (TNIAMWARM) பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரவும், தொழில்வள தகவல் மேலாண்மை அமைப்பிற்கான வரைவு, அபிவிருத்தி மற்றும் செயலாக்கத்திற்காக தொழில்நுட்ப ஆலோசகர்களைத் தேர்ந்தெடுக்கவும் அரசு எல்காட் நிறுவனத்தை நியமித்துள்ளது.

★ 2 கோடி குடும்பதாரர்களுக்கு மாநில அளவிலான குடும்பஅட்டை தரவுதளத்தை எல்காட் நிறுவனம் அதன் சேவையகத்தில் உடன்நிகழ் (Online) நிலையில் ஏற்றம் செய்துள்ளது.

★ மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள் மற்றும் புறநகர் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டைத் தன்னியக்கம் செய்ய எல்காட் நிறுவனம் இணையம் சார்ந்த பயன்பாட்டு மென்பொருளை (Web base Application Software) உருவாக்கியுள்ளது. மொத்த வங்கி தன்னியக்க மென்பொருளானது 1,000 வங்கிகளில் கிட்டத்தட்ட 800 வங்கிகளுக்கும் மேல் நிறுவப்பட்டும், 400 வங்கிகளில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

★ 300 நபர்கள் அமரும் இடவசதியுடன் சென்னையிலும், 25 நபர்கள் அமரும் இடவசதியுடன் மாவட்ட அளவிலும் கணினி பயிற்சி மையம் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் 2009–2010ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 18,000 அரசு ஊழியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம், முற்றிலும் மின்னணு ஆக்கப்பட்ட முறையில், சுமார் 70 இலட்சம் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு அட்டைகளை வெற்றிகரமாகத் தயாரித்து வழங்கியுள்ளது.

★ தமிழகத்தில் உள்ள 86 மையங்களில், மென் தகடால் ஆன கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் அட்டை தயாரித்து வழங்கும் பணியானது, போக்குவரத்து ஆணையர் அவர்களால், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★ நகர்ப்புர மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககமானது வரைவு அங்கீகாரம் மற்றும் கட்டட திட்ட அங்கீகாரம் வழங்கும் செயல்களைத் தன்னியக்கம் செய்ய ஒரு பயன்பாட்டு மென்பொருளை உருவாக்கும் பணியினை எல்காட் நிறுவனத்திடம் வழங்கியுள்ளது.

★ வணிகவரித் துறையானது, வியாபாரிகள் உடன்நிகழ் நிலையில் பதிவு செய்யவும், தங்களுடைய மாதாந்திர வாட் ரிட்டர்ன்ஸை உடன் நிகழ் நிலையில் பதிவு செய்யும் வகையில் வணிகவரித் துறை இயங்கும் விதமாக ஒரு பயன்பாட்டு மென்பொருளை உருவாக்கும் பணியினை எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

★ கூட்டுறவுப் பதிவாளர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ்செயல்படும் 28,500 கூட்டுறவு சில்லரை விற்பனை நிலையங்கள் மற்றும்

மண்ணெண்ணெய் நிலையங்களுக்கு கையடக்க பில்லிங் கருவிகளை வழங்கும் பணி எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எல்காட் நிறுவனம் கையடக்க பில்லிங் கருவிகளை சென்னை மாநகரிலுள்ள 1,411 நியாய விலை கடைகள் மற்றும் மண்ணெண்ணெய் நிலையங்களுக்கு வழங்கியுள்ளது.

★ "குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு வலையமைப்பு" என்ற 100 கோடி ரூபாய் திட்டத்திற்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மேலாண்மை ஆலோசகராக (SPMC) காவல் துறையால் நியமிக்கப்பட்டுள்ளது.

★ நல்வாழ்வு மேலாண்மைத் தகவல் அமைப்பு என ஓர் அமைப்பை ரூ.60 கோடி மதிப்பில் தொடங்க தமிழ்நாடு நல்வாழ்வு அமைப்புத் திட்டம் (TNHSP) எல்காட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

★ தடையற்ற தகவல் தொடர்பு வலையமைப்புத் திட்டத்தை அமைத்துத்தரும் பொறுப்பினை மீன்வளத்துறையானது எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இத்திட்டம் ரூ.7 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ளது.

★ பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி இணையத்தின் (முந்தைய தமிழ் இணையப் பல்கலைக்கழகம்) மூலம் கடந்த நான்காண்டுகளில் 2006 –2010 வரை சான்றிதழ்க் கல்விக்கு 3,119 பேர்களும் மேற்சான்றிதழ்க் கல்விக்கு 135 நபர்களும் பட்ட வகுப்பிற்கு 1,028 நபர்களும் பதிவு செய்துள்ளனர்.

★ 2006–2010ஆம் ஆண்டு கல்வித் திட்டத்தின் கீழ், 65 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

★ இதுவரையில் பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி இணையத்தின் இணையத்தளத்தை ஏறத்தாழ 20.89 இலட்சம் பேர் பார்வையிட்டனர்.

★ 2006இல் 12ஆக இருந்த ஒருங்கிணைப்பு மையங்கள், 2010இல் 36 ஒருங்கிணைப்பு மையங்களாக உயர்ந்துள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், 14 நாடுகளில் 24 ஒருங்கிணைப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

★ நான்கு ஆண்டுகளில் 177 புத்தகங்கள் இணையத்தில் இடப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் பல்வேறு பிரிவுகளில் 397 நூல்கள் உள்ளன.

★ தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடான கலைக்களஞ்சியம் 10 தொகுதிகள் தற்போது இணையத்தில் தேடுதல் வசதியுடன் இடப்பட்டுள்ளது.

★ டாக்டர் உ.வே.சா அவர்கள் ஆராய்ந்த 25,000 ஓலைச்சுவடிகள் மின்னூலகத்தில் பெரிதுபடுத்தி பார்க்கவும், இன்றைய எழுத்துவடிவில் படிக்கவும் ஏதுவாகத் தேடும் வசதியோடு வைக்கப்பட்டுள்ளன.

★ 32 துறைகளை சார்ந்த ஏறக்குறைய இரண்டு இலட்சம் கலைச்சொற்கள் இணையத்தளத்தில், தேடுதல் வசதியோடு இடப்பட்டுள்ளன.

★ 2006இல் 137 ஒலி ஒளிக்காட்சிகள் பண்பாட்டுக் காட்சியகத்தில் இடம்பெற்றிருந்தன. 2010இல் 160 ஒலி ஒளிக்காட்சிகள் பண்பாட்டுக் காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன.

★ இதம் 2000 – விண்டோசுக்கு உரிய தமிழ் இடைமுக (Tamil Interface to MS Windows), தமிழ் எழுத்துரு அறிவி (Tamil OCR), தமிழ் இணையதள உலாவி (Web Browser), எந்திர உதவியுடன் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தி (Machine Aided English to Tamil Translator), தமிழில் பேச்சுருவாக்கம் (Speech Synthesizer in Tamil), தமிழில் விண்டோஸ் 95/98 (Localizing Windows 95/98), எந்திர மொழிபெயர்ப்பை மேம்படுத்தும் தமிழ்ச் சொல் வலை (Tamil Word Net to Enhance Machine Translation), தமிழ் லினக்ஸ் தனியாள் கணினி (Tamil Linux PC), செல் பேசியில் தமிழ்ப் பயன்பாட்டிற்காக லினக்ஸைத் தகவமைத்தல் (Linux Localization in Mobile Phones) முதலிய மென் பொருள் திட்டங்கள் முற்றுப் பெற்றுள்ளன.

★ தமிழ்க் கையெழுத்தை அறிந்து கொள்ளும் எழுத்துரு அறிவி மென்பொருள் முதல் கட்டம் (OCR for Hand written Tamil Text, Phas -1)

★ தமிழ் மென்பொருள் உருவாக்குவோரால் TAM/TAB (தமிழ் மட்டும்/ தமிழ் – ஆங்கிலம்) தரங்களுக்கு இணையாகத் தயாரிக்கப்பட்ட 13 மென்பொருள் பொதிகள் பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி இணையத்தால் பரிசோதிக்கப்பட்டுச் சான்றளிக்கப்பட்டுள்ளன.

★ பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி இணைய மின்–நூலகத்தில் உள்ளது போல், தேடும் வசதிகளைக் கொண்ட திருக்குறள், 5 விளக்கவுரைகள் மற்றும் 2 மொழி பெயர்ப்புகளுடன் குறுந்தகடு வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு அரசு பன்னாட்டு தமிழ்ப் பயிற்சி இணையத்திற்கு, கோட்டூர் கிராமத்தில் 2 ஏக்கர் நிலமும் கட்டடம் கட்டுவதற்காக ரூபாய் ஒரு கோடி நிதியும் வழங்கியுள்ளது. பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி இணையக் கட்டடம் கட்டும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டு, 2010 ஜூன் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ ★ ★



# மகளிர் நலன் காக்கும் மகத்தான திட்டங்கள்

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி. **பி. கீதா ஜீவன்** அவர்கள்

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.624 கோடியில் 3,44,206 பேர் பயனடைந்துள்ளனர்.

★ டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி 2008–2009இல் ரூ.20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 655 ஏழைப் பெண்களுக்கு ரூ. 89.35 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ், 9,545 தம்பதியர்க்கு ரூ.1,836.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவையர் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி 2008–2009இல் ரூ.20,000ஆக உயர்த்தப்பட்டது. சென்ற நான்கு ஆண்டுகளில் 11,197 பேருக்கு ரூ. 1,790.75 இலட்சம் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

★ அன்னை தெரசா நினைவு ஆதரவற்றப் பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி 2008–2009இல் ரூ.15,000லிருந்து ரூ.20,000ஆக உயர்த்தப்பட்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் 1,302 பேருக்கு ரூ.198.55 இலட்சங்கள் செலவில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ அரசு, திருமண நிதியுதவித் திட்டத்திற்கும், சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கும் பயனடைய விதிக்கப்பட்டிருந்த ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.12,000இலிருந்து ரூ.24,000க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

★ மறைந்த திருமதி.இந்திரா காந்தி அவர்கள் பாரதப் பிரதமராகப் பதவியேற்ற ஜனவரி 24 ஆம் தேதியை "தேசிய பெண் குழந்தைகள் தினம்" ஆகக் கொண்டாடவும், ஜனவரி 24 ஆம் தேதியிலிருந்து உலக மகளிர் தினமான மார்ச் 8 ஆம் தேதி வரை பெண்களின் மேன்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் 2008இல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ பெண் சிசுக் கொலையினை ஒழித்திடவும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஊக்குவிக்கவும், பெண் கல்வியை மேம்படுத்தவும் 1,97,047 ஏழைப் பெண்குழந்தைகள் பயனடையும் வகையில் கடந்த நான்கு ஆண்டுகளில் சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி, பெண்களுக்கு நவீன வசதிகள் மற்றும் பாதுகாப்புடன் கூடிய உறைவிட வசதி தேவை என்பதைக் கருத்தில் கொண்டு சென்னை, சாலிகிராமத்தில் ஒரு பணிபுரியும் மகளிர் விடுதியை, ஐந்து தொகுப்புகளாக ஏற்படுத்தும் வகையில், மாநில அரசின் நிதியிலிருந்து முதல் தவணையாக ரூ.2 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மைய அரசு (தனது பங்களிப்பாக) ரூ.3.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.

★ நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்ட முன்வடிவை தாக்கல் செய்து பெண்ணுரிமையை நிலைநாட்ட வகை செய்யும்படி மத்திய அரசுக்கு வலியுறுத்தி நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ ஆதரவற்ற குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் அரசு குழந்தைகள் காப்பகம் கட்ட ரூ.39 இலட்சமும், திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு ரூ.25 இலட்சமும் செலவினம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2009–10 ஆம் நிதியாண்டில் தருமபுரி மாவட்டத்தில் அரசு குழந்தைகள் காப்பகக் கட்டடம் கட்ட ரூ.37.50 இலட்சம் செலவினம் அனுமதிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ தாம்பரம் சானிடோரியத்தில் உள்ள அரசு சேவை இல்லத்தில் 40 மாணவிகள் பயன்பெறும் வகையில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

★ அரவாணிகள் நல வாரியம் அமைக்கப்பட்டு, அரவாணிகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அவர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அவர்களுக்காக இடைக்காலத் தங்கும் விடுதி சென்னையில் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. அரவாணிகளை உறுப்பினர்களாகக் கொண்ட 61 சுய

உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 991 அரவாணிகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தகுதியான அரவாணிகளுக்கு குடும்ப அட்டை வழங்க ஆணையர், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு துறை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

☆ இதுவரை மொத்தம் 451 அரவாணிகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. வீடுகட்டிக் கொடுப்பதற்காக ரூ.1 கோடி 2009–2010ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 182 அரவாணிகள் பயனடைவர் (ஒரு வீடு கட்ட ரூ.55,000 வீதம் செலவினம் மேற்கொள்ளப்பட உள்ளது). மேலும், அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தும் வகையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

☆ முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஓய்வூதியம் 1.8.2006 முதல் ரூ.400ஆக உயர்த்தப்பட்டது. மேலும், இத்திட்டம் 19.11.2007 முதல் "இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையான ரூ.400இல், ரூ.200ஐ மத்திய அரசு வழங்குகிறது. மீதமுள்ள ரூ.200ஐ மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. இத்திட்டத்தின் கீழ் மனுதாரருக்கு ஆண் வாரிசு இருந்தாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்தால் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

☆ 50 வயதினை எட்டி, வாய்ப்பு வசதியில்லாததால் திருமணமாகாமலிருக்கும் ஏழை எளிய, உழைக்கும் திறனற்ற பெண்களுக்கு மாதம் ரூ.400 ஓய்வூதியம் வழங்கும், புதிய திட்டம் அரசினால் 1.7.2008 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டங்களின் பயனாளிகளுக்கு இணையாக மாதம் ரூ.400 ஓய்வூதியமாக பெற்று வருகின்றனர். 31.03.2010 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 11,860 ஆகும்.

★ மேலும், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் பயனாளிகளுக்கு இதுகாறும் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம் ரூ.200இலிருந்து ரூ.400 ஆக 1.8.2006இலிருந்து உயர்த்தி வழங்கிட தற்போதைய அரசு ஆணையிட்டது.

★ தமிழக அரசின் அயராத முயற்சியின் விளைவாக மேலே குறிப்பிட்ட ஓய்வூதியத் திட்டங்களினால் கடந்த நான்காண்டுகளில், முறையே 2006–2007ஆம் ஆண்டில் 12.52 இலட்சம் பேர்களும் 2007–2008இல் 14.46 இலட்சம் பேர்களும் 2008–2009இல் 17.24 இலட்சம் பேர்களும் 2009–2010இல் 19.61 இலட்சம் பேர்களும் பயனடைந்து உள்ளனர்.

☆ முதியோர் இல்லங்கள் நடத்திட தற்போது 29 தொண்டு நிறுவனங்களுக்கு, தலா ரூ.2 இலட்சம் மானியமாக ரூ.57.06 இலட்சத்தை மாநில அரசு வழங்கியுள்ளது.

☆ காமராஜர் பிறந்ததினமான ஜூலை 15ஆம் தேதி 'கல்வி வளர்ச்சி நாளாக' அறிவிக்கப்பட்டது. சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டை வழங்கும் திட்டம் 15.7.2006ல் துவங்கி 15.7.2007 முதல் வாரம் மூன்று முட்டை வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதன் மூலம் 68.33 இலட்சம் குழந்தைகள் ஆண்டுதோறும் பயனடைந்து வருகிறார்கள்.

☆ 15.7.2007 லிருந்து, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பயனடையும் 1 முதல் 2 வயது வரையுள்ள 4.80 இலட்சம் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முறை முட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

☆ மேலும், கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் காமராஜர் பிறந்த நாளான 2008 ஜூலை 15 முதல் முட்டையினை உட்கொள்ளாத பயனாளிகளுக்கு முட்டைக்குப் பதிலாக மாற்று உணவாக சுமார் 100 கிராம் எடையுள்ள வாழைப்பழம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 29,007 குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள்.

☆ ஏழு மாவட்டங்களில் குழந்தைகளிடையே பரவலாகக் காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடான இரத்தசோகை மற்றும் இரும்புச் சத்து குறைபாட்டை நீக்கும் வகையில், இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு, சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது. 2007–2008ஆம் ஆண்டு முதல் இரும்புச் சத்து மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு பயன்படுத்துவது மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

★ சத்துணவு மையங்களை நவீனப்படுத்தும் முகமாக ரூ.3.70 கோடி செலவில் 1,850 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் துணி கொள்முதல் செய்வதற்கு கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.123.37 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ இவ்வரசு முதன்முறையாக 2 இலட்சத்து 20 ஆயிரம் சத்துணவுப் பணியாளர்களில் சுமார் 90 ஆயிரம் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு 1.9.2006 முன் தேதியிட்டு சிறப்பு

கால முறை ஊதியம் ரூ.2500–5000+300 தரஊதியம் நிர்ணயித்தது.

★ இதன்படி ஒரு சத்துணவு அமைப்பாளர் / அங்கன்வாடி ஊழியர் ரூ. 2,516இலிருந்து ரூ. 5,357ஆக தற்போது ரூ. 2,841 கூடுதலாக பெறுகிறார் (சென்னை) (இதர மாநகராட்சிகளில் ரூ.5,067 நகராட்சி பகுதிகளில் ரூ.4,917 ஊரக பகுதிகளில் ரூ. 4,797ம் பெறுகின்றனர்)

★ இதன்படி 1.1.2006 அன்று ரூ.1,180 தொகுப்பூதியமாகப் பெற்றுவந்த சமையலர் தற்பொழுது ரூ.1,300–3,000, தர ஊதியம் ரூ.300 என்ற சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் படிகள் உட்பட ரூ.3,008 பெறுகிறார். அதாவது ரூ.1,828 கூடுதலாக பெறுகிறார் (சென்னையில்)

★ ரூ.1,050 தொகுப்பூதியமாகப் பெற்று வந்த சமையல் உதவியாளர் தற்பொழுது ரூ.950 – 2,000, ரூ.200 தர ஊதியம் என்ற சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் வருடாந்திர ஊதிய உயர்வு படிகள் உட்பட ரூ.2380 (சென்னை) பெற்று வருகின்றார்.

★ சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மற்றும் குறு அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ.700 ஓய்வூதியமும், அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை 1 சத்துணவு சமையலர்கள் ஆகியோருக்கு ரூ.600 ஓய்வூதியமும், அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை 2 சத்துணவு சமையல் உதவியாளர்கள் ஆகியோருக்கு ரூ.500 ஓய்வூதியமும் வழங்கப்பட்டுவருகிறது.

★ சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கு பொங்கல் கருணைத் தொகை ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ரூ. 500ஐ இவ்வரசு ரூ.825ஆக உயர்த்தியது. மீண்டும் இவ்வரசு ரூ.825இலிருந்து ரூ.1,000ஆக உயர்த்தி வழங்கியுள்ளது.

★ சத்துணவு / அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களைப் போன்றே தமிழக அரசின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

★ சத்துணவு மற்றம் குழந்தைகள் நல மையங்களில் காலியாக இருந்த 37,988 பணியிடங்களில் ஏழை மகளிர், விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்ட மகளிரைக் கொண்டு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

★ 1,020 சமையலர் / சமையல் உதவியாளர்க்கு சத்துணவு அமைப்பாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

★ தகுதி பெற்ற சமையல் உதவியாளர்களை சமையலர்களாக பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ 15.09.08 முதல் ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர சிறப்பு ஓய்வூதியத் திட்டம் 15.09.08க்கு முன்னர் பணி ஓய்வு பெற்ற அனைத்து சத்துணவுப் பணியாளர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

★ புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் சத்துணவுப் பணியாளர்களுக்கு 10 நாட்களுக்கு மிகாமல் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ சத்துணவுப் பணியாளர்களுக்கு அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போன்றே மருத்துவப் படி மாதம் ரூ.100 வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ சத்துணவு அமைப்பாளர்கள், அருகில் உள்ள அமைப்பாளர் இல்லாத மையத்தில் கூடுதல் பொறுப்பேற்று பணியாற்றும் போது நாளொன்றுக்கு ரூ.2 வீதம் கூடுதல் பணிப்படியாக வழங்கப்பட்ட தொகையினை ரூ.10ஆக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ சத்துணவு பணியாளர்கள் ஒரு மாதம் எடுக்காத விடுப்புடன் சேர்த்து அடுத்த மாதம் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் வரை விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ அரசுப் பணியாளர்களுக்கு வழங்குவதைப் போன்றே இரண்டாயிரம் ரூபாய் பண்டிகைக்கால முன்பணம் வழங்கப்படுகிறது.

★ முன்னாள் மதிய சமையற்கூட சமையலர்களாக இருந்து தற்போது தினக்கூலி அடிப்படையில் ஏறத்தாழ 30 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் 33 பேருக்கு அவர்களின் தகுதிகேற்ப சமூக நலத் துறையில் அலுவலக உதவியாளர் / இரவு கண்காணிப்பாளர் பணியிடங்களில் நியமனம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ ஏற்கெனவே சிறப்புத் தேர்வு மூலம் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்ட பி.எட். முடித்த சத்துணவு அமைப்பாளர் / அங்கன்வாடி பணியாளர்கள் தவிர, மீதம் உள்ள 341 பணியாளர்களுக்கு சிறப்புத் தேர்வு மூலம் ஆசிரியர் பணி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து பதவி உயர்வு பெற்றவர்களுக்கு, அவர்கள் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த காலத்தில் 50 விழுக்காடு காலம் ஓய்வூதியத்திற்கு எடுத்துக்கொள்ள ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சமூக நலத்துறையில், பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பதவி உயர்வும், தகுதிபெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை–2 பணியிடத்தில் பதவி உயர்வும் வழங்கலாம் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பொது வருங்கால வைப்பு நிதி (GPF) தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் தொட்டில் குழந்தை வரவேற்பு மையத்திற்கு வரும் குழந்தைகளை மருத்துவமனை மற்றும் இதர போக்குவரத்திற்காக புதியதாக ஊர்தி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது தற்சமயம், குழந்தைகளிடையே ஊட்டச்சத்து நிலை கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக, மார்ச் 2001இல் 55.70%ஆக இருந்த இயல்பு நிலை குழந்தைகளின் சதவிகிதம் தற்போது மார்ச் 2010இல் 64.08%ஆக உயர்ந்துள்ளது. மிதமான ஊட்டச்சத்து குறைபாடு நிலை 2001இல் 7.49%லிருந்து மார்ச் 2010ல் 1.62%ஆக குறைந்துள்ளது. கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் நிலை 2001இல் 0.21%லிருந்து மார்ச் 2010இல் 0.03%ஆக குறைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், சிசு இறப்பு விகிதமானது 2001இல் ஆயிரத்திற்கு 49ஆக இருந்தது 2008இல் ஆயிரத்திற்கு 31ஆக (SRS)ன்படி குறைந்துள்ளது.

★ தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் மையங்களில் குழந்தைகளின் வளர்ச்சிக்காக 6 மாதம் முதல் 36 மாதம் வரை உள்ள 12.18 இலட்சம் குழந்தைகளுக்கும் 5.38 இலட்சம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும், இணை உணவு (சத்து மாவு) வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள 11.26 இலட்சம் குழந்தைகளுக்கு சூடான சத்தான மதிய உணவாக கலவை சாதம்/ சாம்பார் சாதம் காய்கறிகளுடன் வழங்கப்பட்டு வருகிறது. 2006–2010–ஆம் ஆண்டு வரை இணை உணவிற்கு ஆன செலவினம் ரூ. 540.42 கோடி.

★ தமிழகத்தில் 54,439 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

★ 2006–2010–ஆம் ஆண்டு வரை 7,940 குழந்தைகள் மையங்கள் ரூபாய் 589.65 இலட்சத்தில் சமையல் எரிவாயு இணைப்புடன் அடுப்பு, குக்கர் (அடுகலன்) மற்றும் மின்சார வசதியும் செய்து நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

★ 2006ஆம் ஆண்டு 2010ஆம் ஆண்டு வரை ரூ.195.12 இலட்சம் செலவில் 4,79,755 பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்கப்பட்டன.

★ 2009–2010–ஆம் ஆண்டில் 7,000 மையங்களுக்கு 25 கிலோ தானியங்கள் கொள்ளும் அளவுள்ள இரண்டு ஸ்டீல் சேமிப்பு கலன்கள் ரூ.84 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

★ 2006–2010 வரை குழந்தைகள் மையங்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்கிய செலவினம் ரூ.1,151.04 இலட்சம் ஆகும்.

★ வளரிளம் பெண்களுக்கு பயிற்சி அளிக்க 2008–2009 வரை ஆன செலவினம் ரூபாய் 14.32 கோடி.

★ 2006–2010 வரை வளரிளம் பெண்களுக்கான ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்தின் மூலம் ரூபாய் 676.10 இலட்சம் செலவில்2,89,153 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

★ மருந்துகள் அடங்கிய பெட்டி குழந்தைகள் மையங்கள் மற்றும் குழந்தைகள் குறு மையங்களுக்கு வழங்கவும் தீர்ந்துவிட்ட மருந்துகளை ஈடுசெய்யும் பொருட்டும் 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கும் மொத்தமாக ரூ.1,062.43 இலட்சம் செலவிடப்பட்டது.

★ 2006–2010 வரை தகவல் தொடர்புப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ.752.12 இலட்சம் ஆகும்.

★ 2005–2010 வரை ரூ.407.61 இலட்சம் செலவில் 1,40,891 திட்டப்பணியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

★ 2009–10ஆம் ஆண்டிற்கு ரூ.274.93 இலட்சம் செலவில் களப்பணியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

★ 2006ஆம் ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையிலான காலத்தில் 8,399 அங்கன்வாடிப் பணியாளர்களும், 13,167 அங்கன்வாடி உதவியாளர்களும் ஆக மொத்தம் 21,366 புதிய நியமனம் மூலம் காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

★ தமிழ்நாடு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2,00,000 வரை 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை இலவச மருத்துவ சிகிச்சை அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

★ இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ அத்துடன் அரசு ஊழியர்களைப் போலவே வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் ஒவ்வொரு வருடமும் 3% ஊதிய உயர்வும் 1.6.2009 முதல் பெறுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

★ மேலும் 10 வருடம் பணி முடித்த அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஒரு சிறப்பு ஊதிய உயர்வும், 20 வருடம் பணி முடித்த அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மற்றுமொரு சிறப்பு ஊதிய உயர்வும் 15.9.08 முதல் அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ ஒவ்வொரு பொங்கல் திருநாளின் பொழுதும் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு சிறப்பு கருணைத் தொகையாக ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

## சமூகப்பாதுகாப்புத்துறை

★ சாலையோர சிறார்களின் எண்ணிக்கையை கணக்கீடு செய்யவும் அவர்களுக்கான மறுவாழ்வு வழங்கவும், சமூகத்தோடு ஒருங்கிணைந்து வாழ வகைசெய்யும் விதத்திலும், 2006–2007ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக சென்னை மாநகரில் சாலையோர சிறார்களுக்கென விரிவான திட்டத்தின்கீழ் 6 மையங்கள் துவக்குவதற்கு ரூ.6.75 இலட்சம் அரசினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் 300 சாலையோர சிறார்கள் பயனடைவார்கள்.

★ சென்னை பாலவிஹார் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான குழந்தைகள் இல்லத்தினை வலுப்படுத்துவதற்கென ரூ.2.80 இலட்சம் 2006–2007ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் அரசினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இச்சிறப்பு இல்லங்களில் உள்ள குழந்தைகளைப் பராமரிப்பது மிகவும் கடினமானது மற்றும் அதிக செலவினம் ஆவதால் சிறப்பு சலுகையாக பராமரிப்பு மானியத்தை ரூ.225இலிருந்து ரூ.450ஆக ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ மனவளர்ச்சி குன்றிய சிறுவர்/சிறுமியருக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் 40 குழந்தைகளுக்கென வரவேற்புப் பிரிவு துவங்குவதற்கென 2006–2007ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.1.60 இலட்சம் அரசினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சென்னை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் இளைஞர் நலக்குழுமத்தின் விசாரணைக்குட்பட்ட மனவளர்ச்சி குன்றிய 18 வயதின்கீழ் உள்ள சிறார்கள் சம்பந்தப்பட்ட இளைஞர் நலக்குழுமங்களின் ஆணைப்படி தங்க வைக்கப்படுகிறார்கள்.

★ தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழியங்கும் குழந்தைகள் இல்லங்களில் பிறகாப்புக்குழுக்களை ஏற்படுத்துவதற்கென 2006–2007ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.1.35 இலட்சம் அரசினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 60 சிறார்கள் ஒவ்வொரு ஆண்டும் பயனடைகின்றார்கள்.

★ மயிலாடுதுறையில் இயங்கி வரும் மனநலம் பாதிக்கப்பட்ட மற்றும் உடல் ஊனமுற்ற சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லத்தை வலுப்படுத்துவதற்கென பராமரிப்பு மானியத்தை ரூ.225இலிருந்து ரூ.600ஆக ஒரு மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு உயர்த்தி (மொத்த செலவினம் ரூ.6.75 இலட்சம்) 2006–2007ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் அரசினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வில்லத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை 100இலிருந்து 150 குழந்தைகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு வணிக ரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்தப்படுதலைத் தடுப்பது மாநில அரசின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்திற்கென மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச் செயலரின் தலைமையின் கீழ் 21.11.2001இல் ஏற்படுத்தப்பட்டு, மீண்டும் அரசாணை எண்.82 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள்.1.8.2006ன்படி மாற்றியமைக்கப்பட்டு 12.3.2007 அன்று தலைமைச் செயலரின் தலைமையின்கீழ் முதல் கூட்டம் நடைபெற்றதை தொடர்ந்து கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

★ அரசு கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு வாரம் ஒருமுறை 115 கிராம் கோழிஇறைச்சி வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ சிறார் கடத்தலைத் தடுக்கும் பொருட்டு, மாவட்ட அறிவுரைக் குழுமம் மற்றும் பற்று அலுவலருக்கு அந்தந்த மாவட்டங்களில் நடக்கும் கடத்தல் பற்றிய நிகழ்வுகளைத் தெரிவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 3 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

★ பெற்றோர்களின் இருப்பிடத்தை அறிய இயலாத குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் வசிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களின் இருப்பிடத்தை அறிய அரசு ரூ.48,650 போக்குவரத்து கட்டணம் மற்றும் மதிப்பூதியத்திற்கென ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அதன்படி பெற்றோர்களின் இருப்பிடத்தை அறிய இயலாத 139 குழந்தைகளில் 48 குழந்தைகளின் பெற்றோர் இருப்பிடம் அறியப்பட்டது.

★ மரியாலயா தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் கீழ் இயங்கும் சிறப்புப் பராமரிப்பு மையத்தினை குழந்தைகள் இல்லமாக மாற்றியும் அவ்வில்லத்தில் 30 குழந்தைகளைப் பராமரிக்கவும் அதற்கென மானியமாக ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.450 வீதம் அனுமதி வழங்கியுள்ளது.

★ குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு "சத்யம் பவுண்டேஷன் நிறுவனம்" 80 கணினிகளை வழங்கியுள்ளது.

★ அரசு கூர்நோக்கு இல்லம் / குழந்தைகள் இல்லம் / சிறப்பு இல்லம் / பிற்காப்பு நிறுவனங்கள் மற்றும் மகளிர் பாதுகாப்பு இல்லம் ஆகியவற்றின் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உணவுடன், கூடுதலாக உணவுப்பொருள்கள் வழங்க 2008–2009ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.3.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ இத்துறையின் கீழியங்கும் அரசு கூர்நோக்கு இல்லம்/ குழந்தைகள் இல்லம்/ சிறப்பு இல்லம் வேலூர், அரசு குழந்தைகள் இல்லங்கள், மற்றும் அரசு பிற்காப்பு இல்லங்கள் ஆகியவற்றில் நவீன தொழிற்பயிற்சிகளைத் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் துவங்க 2008–2009ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூ. 15.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு. திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ இத்துறையின் கீழியங்கும் அரசு கூர்நோக்கு / குழந்தைகள் / சிறப்பு / பிற்காப்பு மற்றும் மகளிர் இல்லங்களில் உள்ள மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு சீருடைகள் அல்லாத ஏனைய உடைகள் மற்றும் புதிய உடைகள் வழங்க. ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செய்யப்பட்டுள்ளது. திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

★ செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, மல்லிப்புதூர் மற்றும் பஞ்சப்பள்ளி ஆகிய இடங்களில் அரசு குழந்தைகள் இல்லங்களில் உள்ள சமைபலறைகளை நவீன மயமாக்க 2008–2009ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 15.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

★ குழந்தைகள் இல்லங்களை குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்துவதற்கென 2008–2009ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 43.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ சென்னை இராயபுரம் அரசு குழந்தைகள் இல்ல வரவேற்பு இல்லப் பிரிவை மத்திய, மாநில அரசு பங்களிப்பு மூலம் மேம்படுத்துவதற்காக 2008–2009ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 37.50 இலட்சம் மாநில அரசுபங்காக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

★ புதியதாக பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளிப்பதற்காக 2008–2009ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ இத்துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு மாநில அளவில் ஆண்டு விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தி பரிசுகளை வழங்கி குழந்தைகளை ஊக்க படுத்துதலுக்கென 2008–2009ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ விளையாட்டு, நாட்டியம், இசை, கலை மற்றும் நாடகம் ஆகியவற்றைப் பயிற்றுவிப்பதற்கென ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ இத்துறையின் கட்டுப்பாட்டில் தற்போதுள்ள 11 இளைஞர் வழிகாட்டி நிலையங்களை வள மையங்களாக மாறு சீரமைத்து, கூடுதலாக 20 புதிய வள மையங்கள் தோற்றுவிப்பதற்கென ரூபாய் 7.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ அரசு மகளிர் பாதுகாப்பு இல்லங்களில் நவீன தொழிற்பயிற்சிகளை, தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் துவங்க 2008–2009ஆம் ஆண்டில் ரூ.0.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

★ குழந்தைகளுக்கு மாநில அளவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தி பரிசுகளை வழங்கி குழந்தைகளை ஊக்கபடுத்துதலுக்கென 2009–2010ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு தட்டு மற்றும் குவளைகள் வழங்க 2009–2010ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 9.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

★ மின்மாற்றி இயந்திரம் வழங்க 2009–2010ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 9.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ பஞ்சப்பள்ளி, அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உள்ள 110 குழந்தைகளுக்கு கம்பளி ஆடை வழங்குவதற்கும் மின்மாற்றி இயந்திரம் வழங்க 2009–2010ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 0.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ தஞ்சாவூர், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள நிறுவனங்களுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் பழுது பார்க்க 2009–2010ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

★ பாதிக்கப்பட்ட சிறுமியர்களுக்கு , வேலூரில் மாதிரி நிறுவனம் கட்டும் பணிக்காக, 2009–2010ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு கோடைக்கால முகாம் நடத்த 2009–2010ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★



# ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் மேம்பாடு

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி. **ஆ. தமிழரசி** அவர்கள்

★ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியருக்கு அவர்களது தகுதிக்கேற்றவாறு ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு கல்வி உதவித் தொகை, இலவசக் கல்வி உதவித் தொகை மற்றும் பெண் கல்வி ஊக்கத் தொகை போன்ற கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

★ கடந்த 4 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் (ம) அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 1,369. பயன் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 2,50,962.

★ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர், அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயில பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பின்றி கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் இதன் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை 35,410. இதற்கான செலவு ரூ.2,418.46 இலட்சம் ஆகும்.

★ மைய அரசு மற்றும் மாநில அரசு நிர்ணயித்துள்ள ஆண்டு வருமான வரம்பிற்கு மேற்பட்ட இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறது. இதன் மூலம் 4 ஆண்டுகளில் பயனடைந்தோர் 22,159 பேர். செலவு ரூ.270 இலட்சம் ஆகும்.

★ மைய அரசு மற்றும் மாநில அரசுப் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைக்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பிற்கு மேற்பட்ட, முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும் மாணவியர்க்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதன் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் பயன் பெற்றோர் 5,816 பேர். இதற்கான செலவினம் ரூ.147.40 இலட்சம் ஆகும்.

★ 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதிதிராவிடர்/பழங்குடியின/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ/ மாணவியர் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர். இதன் பொருட்டு ஏற்படும் செலவினம் அந்தந்த கல்வி நிறுவனங்களுக்கு இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் பயனடைந்தோர் 25,29,520 பேர். இதற்கான செலவு ரூ.1,190.67 இலட்சம்.

★ 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ/மாணவியர் அனைவரும் வருமான வரம்பின்றி தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்தும் மேலும் அரசு/அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி பயிலும் ஆதிதிராவிடர் /பழங்குடியினர் /கிருத்தவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்களின் விண்ணப்பம் மற்றும் பதிவுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்படுகின்றது. இதற்கு 4 ஆண்டுகளில் பயனடைந்தோர் 7,99,829 பேர். செலவினம் ரூ.1,566.23 இலட்சம் ஆகும்.

★ மைய அரசுத் திட்டத்தின் கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பினைத் தொடரும் ஆதிதிராவிடர்/ பழங்குடியின மாணவ/மாணவியர்க்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் முறையே ரூ.1,00,000 மற்றும் ரூ.1,08,000க்கு மிகாமல் இருப்பின் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 17,39,310. இதற்கான செலவினம் ரூ.559 இலட்சம்.

★ மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்க்கு 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்காக (Post-matric) சிறப்பு உதவித் தொகை திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் இதன் மூலம் பயனடைந்தோர் 1,97,572 பேர். இதற்கான செலவு ரூ.2,392.16 இலட்சம்.

★ துப்புரவுத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு 10 ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான (Pre-matric) உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் பயன் பெற்றோர் எண்ணிக்கை

2,48,306 இதற்கான செலவு ரூ.2,893.59 இலட்சம் ஆகும்.

★ கல்விக் கடன் உதவித் தொகைத் திட்டம் மானியமாக மாற்றப்பட்டு "உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை" என வழங்கப்பட்டு வருகிறது. கல்வி நிலையம் சார்ந்த விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்க்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதற்கு ரூ.5,088.48 இலட்சம் செலவிடப்பட்டு, இதன் மூலம் பயன் பெற்றோர் எண்ணிக்கை 76,555.

★ சமுதாய முன்னேற்றத்தை அடையச் செய்வது கல்வியேயாகும். இதனை உணர்ந்து ஆதிதிராவிடர் / பழங்குடியின பெண் குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவது அவசியமாகும். பெண்கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் / பழங்குடியின பெண் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கையை 100 விழுக்காடாக உறுதிப்படுத்திடும் நோக்கத்தோடு "பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில், இதன் மூலம் பயன் பெற்றோர் 2,39,925 பேர். இதற்கான செலவினம் ரூ.1,199.63 இலட்சம் ஆகும்.

★ 6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவியர் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் 30,000 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவியர்க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு சென்னையைத் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 4 ஆண்டுகளில் பயன் பெற்றோர் 1,20,000 பேர். செலவினம் ரூ.1,200 இலட்சம்.

★ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்கள், பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாக, நற்பெயர் பெற்றுள்ள தனியார் பள்ளிகளில் சேர்ந்து படிக்க இயலாத நிலை உள்ளது. எனவே, இம்மாணவர்களுக்குப் போதிய கல்வித் தகுதி இல்லாததால், உயர்க்கல்வி பெறுவது தடைபடுகிறது. இம்மாணவர்களும் அகில இந்திய நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று உயர்க்கல்வியில் அதிக எண்ணிக்கையில் சேர வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு இவ்வின மாணவ, மாணவிகளைத் தொழிற்படிப்பிற்கான வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று பெற்றோர் / பாதுகாவலரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள மாவட்டம் ஒன்றிக்கு 10 மாணவ / மாணவிகளை (குறைந்தபட்சம் 3 மாணவிகள் உட்பட) தேர்வு செய்து மாவட்டத்தில் உள்ள நற்பெயர் பெற்றுள்ள தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. 2007–2008ஆம் ஆண்டு முதல் 2009–2010ஆம் ஆண்டு வரை 1,495 மாணவ, மாணவியருக்கு ரூ.329.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் உள்ள 385 ஒன்றியங்களில், 5 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியரை பொது நுழைவுத் தேர்வு ஒன்றியம் மூலம் தேர்வு செய்து ஒன்றியத்திற்கு ஒரு ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ, மாணவியரைத் தேர்வு செய்து அந்த மாணவர்களை நற்பெயர் பெற்ற உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. 2008–2009 & 2009–2010ஆம் ஆண்டுகளுக்கு 1,055 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.313.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ இத்துறை நடத்தும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியர்க்கும் பிளாஸ்டிக் சட்டத்தினாலான சிலேட்டுகள் ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.10.68 இலட்சம் செலவு செய்யப்பட்டு 93,179 பேர் பயன் அடைந்துள்ளனர்.

★ 2006–07ஆம் ஆண்டு முதல் 2009–2010ஆம் ஆண்டு வரை ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் 9,53,102 மாணவ, மாணவியருக்கு ரூ.1,560.99 இலட்சம் செலவில் குறிப்பேடுகள், பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ இலவச சீருடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 2006–2007ஆம் ஆண்டு முதல் 2009–2010ஆம் ஆண்டு வரை 11,57,707 மாணவ, மாணவியருக்கு ரூ.5,569.44 இலட்சம் செலவில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 2006–2007ஆம் ஆண்டு முதல் 2009–2010ஆம் ஆண்டு வரை 5,58,892 மாணவ, மாணவியருக்கு ரூ.12,831.72 இலட்சம் செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ கொத்தடிமைத் தொழிலாளர்கள் மறுவாழ்வுத் திட்டம் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் பயன் பெற்றோர் 1,217 பேர். செலவு ரூ.186.52 இலட்சம்.

★ இத்துறையின் கீழ் 1,229 மாணவர் / மாணவியர் விடுதிகள் இயங்குகின்றன. 1,229 விடுதிகளில் 1,046 விடுதிகள் அரசுக் கட்டடத்திலும் 183 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்குகின்றன. 2005–2006ஆம் ஆண்டு முதல் 2009–10ஆம் ஆண்டுவரை 76 விடுதிகள் மாநில அரசின் நிதியுதவி திட்டத்தின் கீழும் 26 விடுதிகள் மத்திய / மாநில 50:50 திட்டத்தின்

கீழும் 5 விடுதிகள் 100% மத்திய அரசின் திட்டத்தின் கீழும் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட நலப் பள்ளிகளுக்கு 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை ரூ.458.70 இலட்சம் செலவில் 131 கூடுதல் வகுப்பறைகளும், ரூ.358 இலட்சம் செலவில் 31 அறிவியல் ஆய்வுக் கூடங்களும், ரூ.66 இலட்சம் செலவில் 11 சுற்றுச் சுவர்களும் கட்டித் தரப்பட்டுள்ளன.

★ 2009–10ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் அலுவலகங்களுக்கு ரூ.32.34 இலட்சம் செலவினத்தில் புதிதாக 7 ஈப்புகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிடர் காலனிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையினை ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்வதற்கென ஏற்கெனவே நடைமுறையில் உள்ளபடி இத்துறை இளநிலை செயற்பொறியாளர்கள் / பணி மேற்பார்வையாளர்கள் மூலமாக திட்டம் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரின் நிருவாக ஒப்புதல் பெற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கு 2006–07 முதல் 2009–10ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி ரூ.60 இலட்சம் ஆகும். செலவு ரூ.59.82 இலட்சம், பணிகளின் எண்ணிக்கை 261.

★ கடந்த 4 ஆண்டுகளில் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி – ரூ.2,379.90 இலட்சம், செலவு ரூ.1,985.03 இலட்சம். பயனாளிகளின் எண்ணிக்கை 41,535.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர், கழிவு நீர்வசதி, மின்சாரம், பாதை போன்ற அடிப்படை வசதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.600 இலட்சம், செலவினம் ரூ.586.10 இலட்சம், குடியிருப்புகளின் எண்ணிக்கை 530 ஆகும்.

★ 2007–08ஆம் ஆண்டு முதல் 2009–10ம் ஆண்டு வரை இலவசத் தொழிற்கருவிகள் (தையல் இயந்திரம், இஸ்திரிபெட்டி, தச்சுக்கருவிகள்) ஆகியன வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ.300 இலட்சம். செலவு ரூ.289.96 இலட்சம் ஆகும்.

★ ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான மயானம் மற்றும் மயானப்பாதை வசதி அமைக்க நில எடுப்பு செய்யும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ.232.04 இலட்சம் செலவு ரூ.128.03 இலட்சம் ஆகும்.

★ ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை மற்றும் மயானப்பாதைகள் செப்பனிடுதல் (17 சிறு பணிகள்) திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ.44 இலட்சம். செலவு ரூ.43.83 இலட்சம் ஆகும்.

★ ஒவ்வொரு மாவட்டத்தில் பொது மக்கள் ஒற்றுமையுடனும், தீண்டாமைக் கடைப்பிடிக்காத ஒரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அக்கிராமத்திற்கு பரிசாக இத்திட்டத்தின் கீழ் ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.118 இலட்சம் ஆகும். செலவு செய்யப்பட்ட தொகை ரூ.116 இலட்சம் ஆகும்.

★ ஆதிதிராவிடர்களுக்கு ஈமச்சடங்கு செய்திட, இறந்தவரின் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.1,049.465 இலட்சம் செலவில் 20,98,93 பேர் பயனடைந்துள்ளனர்.

**பழங்குடியினர் நலன்**

★ பழங்குடியினர்களின் நலனுக்காக 296 அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளும், 2 ஏகலைவா மாதிரி உறைவிடப்பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தேவை மற்றும் நிதி ஆதாரத்தைக் கொண்டு புதிய உண்டி உறைவிடப் பள்ளிகள் துவங்கப்படுகின்றன. பழங்குடியின மாணவிகள் இடையில் நின்று விடுவதை தவிர்க்க 3 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.500ம் 6ஆவது படிக்கும் மாணவிகளுக்கு ரூ.1,000/– ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது.

★ ஏகலைவா மாதிரி பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள வெள்ளி மலையில் 1998–99 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

★ 9 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு ரூ.26.35 இலட்சத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ தொண்டு நிறுவனம் நடத்தும் உணவு விடுதிக்கு உணவு மானியம் ரூ.6.20 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளியாக ரூ.49.46 இலட்சத்தில் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. மூன்று பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் அறைகலன்கள் வாங்க ரூ.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ இரண்டு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளிகள் ரூ.97.92 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

★ வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த ஐந்து பழங்குடியினர் விடுதிகளுக்கு அரசு புதிய கட்டடம் கட்ட ரூ.200 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ 50 ஆசிரியர்கள், 50 சமையலர்கள் குடியிருப்பு இல்லங்கள் கட்ட ரூ.100 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ 95 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு தூய்மையான சுத்திகரிப்பு குடிநீர் வழங்க ரூ.8.55 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ தொண்டு நிறுவனம் நடத்தும் பள்ளிகளுக்கு ரூ.57.87 இலட்சம் கல்வி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ பழங்குடியினர் நல உண்டி உறைவிடப்பள்ளி / விடுதிகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் ரூ.2.13 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ 100 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அமரும் பலகைகள் வழங்க ரூ.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ 6 பழங்குடியினர் நல மேல்நிலைப்பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக்கூடம் கட்ட ரூ.96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ ரூ.100.32 இலட்சம் செலவில் 3 பழங்குடியினர் நல உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

★ ரூ.71.85 இலட்சம் செலவில் 5 மாவட்டங்களிலுள்ள பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளுக்கு சிறப்புப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ மூன்று பழங்குடியினர் விடுதிக் கட்டடம் கட்டுதல் மற்றும் சிறப்புப் பராமரிப்பிற்காக ரூ.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ 100 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அமரும் பலகைகள் வழங்க ரூ.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ 14 பழங்குடியினர் நல உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மேசை மற்றும் நாற்காலிகள் வழங்க ரூ.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளாக பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.1,095.03 இலட்சம் செலவில் 7,608 குடும்பங்கள் மற்றும் 62 பொதுப் பணிகள் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ ஆண்டுதோறும் குடிநீர் வசதி இல்லாத பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.32 இலட்சம் செலவில் ஆழ்துளைக் கிணறுகள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்தல் மற்றும் குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்குதல் போன்ற நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக குடிநீர் வசதிகள், 25 குடியிருப்புகளுக்கு ரூ.128 இலட்சம் செலவில் செய்து தரப்பட்டுள்ளது.

★ ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளாக 148 வீடுகள் ரூ.67.18 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

★ பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நீராதாரத்தைப் பெருக்கும் வகையில் பொதுப் பணித்துறையின் மூலம் நீரோடைகளின் குறுக்கே சிறு தடுப்பணைகள் கட்டித் தரப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 7 தடுப்பனைகள் ரூ.19.55 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

★ பரவி வாழும் பழங்குடியினர்களுக்கு (இருளர், காட்டுநாயக்கன், தோடர், கோட்டர், குரும்பர், பனியன் தவிர) பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் இலவச கறவை மாடுகள் மற்றும் ஆடு அலகுகள் வாங்கி வழங்க ரூ.40.49 இலட்சம் செலவிடப்பட்டு 337 பேர் பயனடைந்துள்ளனர்.

★ மைய அரசு பழங்குடியினர்களின் மேம்பாட்டிற்காக ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியை நிருவகிக்கவும், குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யவும், தொகுப்பு வீடுகள் கட்டவும், மற்றும் வனப் பாதுகாப்புச் சட்டம் 2006ஐ செயல்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.1,394.58 இலட்சம் செலவிடப்பட்டு 745 பேர் பயனடைந்துள்ளனர்.

★ அழிந்து வரும் நிலையிலுள்ள பழங்குடியினர்களான இருந்த காட்டுநாயக்கர், தோடர், குரும்பர், பனியன், கோட்டா ஆகியவர்களின் மேம்பாட்டிற்காகவும் அவர்களின் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர ரூ.746.964 இலட்சம் செலவிடப்பட்டு, 10,960 பேர் பயனடைந்துள்ளனர்.

★ நீலகிரியில் வாழும் பழங்குடியிர்களின் நலனுக்கான நீலகிரி மாவட்ட ஆட்சியரால் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட இயக்குநர், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் இத்திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்தி கண்காணித்து வருகிறார். 2008–09ஆம் ஆண்டில் இதுவரை ரூ.267.50 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

★ மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பழங்குடியினர் நல பகுதிகளில் சுற்றுச்சுவர் கட்டுதல், பள்ளி வகுப்பறைகள் பழுதுபார்த்தல், பள்ளி / விடுதிகள் சமையல்அறை மற்றும் தடுப்புச் சுவர் கட்டுதல், ஆடு அலகுகள் வாங்கி வழங்குதல், சாலை வசதி, குடிநீர் வசதி அளித்தல், பள்ளிகளில் ஆய்வுக் கூடம் பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள அரசு கடந்த ஆண்டுகளில் ரூ.185.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

★ பரவி வாழும் பழங்குடியினருக்கான உதவித் திட்டங்களின் கீழ், இம்மக்களுக்காக 2009–2010 வரவு, செலவு திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.10.12 இலட்சத்தில் சேலம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 34 ஆடு அலகுகளும், தருமபுரி மாவட்டத்தில் 20 கறவை மாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. 2010–2011 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.10.12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

★ பழங்குடியினர் துணைத்திட்டத்திற்கான சிறப்பு மைய உதவித் திட்டத்தின் கீழ், பழங்குடியினர்களுக்கு வருவாய் ஈட்டித்தரும் திட்டத்திற்கும், அடிப்படை வசதிகளுக்கும் செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. 2009–2010ஆம் ஆண்டில் மைய அரசு ரூ.433.34 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது. மேலும், இத்திட்டத்தின் கீழ் துணிகளில் சித்திர வேலைப்பாடு மற்றும் சம்கி வேலைப்பாடு மற்றும் செங்கல் சூளைகள் அமைக்க நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும், பழங்குடியினர் துணைத் திட்டத்தின் சிறப்பு மைய நிதியுதவி மூலம் பழங்குடியினர் பள்ளிக் கட்டிடங்களின் மேம்பாட்டு பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

★ சேலம் மாவட்டம், அபிநவம் என்ற இடத்தில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளி ரூ.2.50 கோடி செலவில் கட்டப்பட்டு செயல்பட்டுவருகிறது.

★ மைய அரசு 2009–2010இல் ரூ.684 இலட்சம் இத்திட்ட செயலாக்கத்திற்காக விடுவித்துள்ளது.

★ பண்டைய நிலையிலுள்ள பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டுதல், கறவை மாடுகள், ஆடு அலகுகள் வழங்குதல், குடிநீர் வசதி செய்தல், தெருவிளக்கு அமைத்தல் போன்ற பணிகளை செயல்படுத்துவதற்காக 2009–10ஆம் ஆண்டுக்கு இத்திட்டங்களுக்காக ரூ.740.30 இலட்சத்திற்கு முன்மொழிவுகள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

★ ஜனஸ்ரீ பீமா யோஜனா (JBY)ன் கீழ், 32,424 பேர்களுக்கு ஆயுள் காப்பீட்டு ஈட்டுறுதி ஆவணங்கள் (Policies) வழங்கப்பட்டு, ஆயுள் காப்பீட்டு தவணைத் தொகையாக இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு ரூ.164.39 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. 2008–2009 வரை 11 நபர்களின் இறப்பு இழப்பீடாக ரூ.2.90 இலட்சமும், 229 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.1.79 இலட்சம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்தில் 31.03.2010 வரை 21,389 குடும்பங்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். வாரியத்தில் சேர்க்கப்படும் உறுப்பினர்களுக்கு பல்வேறு நிதியுதவிகள் வழங்க 2009–2010இல் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 503 நபர்கள் ரூ.12.27 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளனர். 2010–2011–ல் ரூ.1.00 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)**

★ ஆதிதிராவிட மகளிருக்காக வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 5,272 பயனாளிகளுக்கு ரூ.1,644.01 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ தனி நபர் கடன் திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 35,562 பயனாளிகளுக்கு ரூ.3,742.07 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட / பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார நிதி உதவித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சுய உதவிக் குழுவைச் சேர்ந்த 1 இலட்சத்து 8 ஆயிரத்து 405 பயனாளிகளுக்கு கடந்த 4 ஆண்டுகளில் ரூ.74 கோடியே 38 இலட்சத்து 46 ஆயிரம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் ஆற்றலை மேம்படுத்த குழு ஆரம்பித்து 6 மாதங்களுக்குப் பின்னர், முதலாவதாக தர நிர்ணயம் செய்யப்பட்ட குழுக்களுக்கு ரூ.10,000 தாட்கோ மானியம் மற்றும் ரூ.40,000 வங்கிக் கடன், ஆக மொத்தம் ரூ.50,000 சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 1,57,362 பயனாளிகளுக்கு ரூ.905.69 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட / பழங்குடியின இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் (SEPY) கீழ், கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 4381 பயனாளிகளுக்கு ரூ.988.37 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதித்திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 13,014 பயனாளிகளுக்கு ரூ.998.90 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் தொழில் சார்ந்த பயிற்சி கடந்த 4 ஆண்டுகளில் 52,123 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.172.38 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ இலவசத் தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் அதிக அளவிலான வேலை வாய்ப்பு தரக்கூடிய தொழிற் பயிற்சி 79667 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு ரூ.7,764.01 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ துரித மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 3,939 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.393.90 இலட்சம் வைப்பு தொகையாக மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டது.

★ இந்திய குடிமைப்பணி முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 384 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்கள் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்களுக்கு ரூ.96 இலட்சம் வழங்கப்பட்டது.

★ சட்டப்பட்டதாரிகளுக்கு சொந்தமாக சட்டத் தொழில் தொடங்க நிதியுதவி திட்டத்தின் கீழ், 1,392 இந்து ஆதிதிராவிட சட்டப்பட்டதாரிகளுக்கு சொந்தமாக சட்ட தொழில் தொடங்க ஊக்குதவித் தொகை ரூ.139.20 இலட்சம் வழங்கப்பட்டது.

★ என்.எஸ்.எப்.டி.சி திட்டத்தின் மூலம் வாகனம் மற்றும் பிற திட்டங்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் 2,974 பயனாளிகளுக்கு ரூ.358.31 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது.

★ என்.எஸ்.கே.எப்.டி.சி திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 6,302 துப்புரவு பணியை சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.868.69 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ தேசிய துப்புரவுப் பணியாளர் புனரமைப்பு மற்றும் மறு வாழ்வுத் திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 4,009 துப்புரவு் பணியாளர் மற்றும் அவர்கள் குடும்பத்தை சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.327.99 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ துப்புரவுப் பணியாளர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 10352 துப்புரவு பணியை சார்ந்தவர்கள் பயனடையும் வகையில் ரூ.33.07 கோடி மானியம் மற்றும் கடன் விடுவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம்**

★ தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியத்தில் 23,510 குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 89,603 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

★ இவ்வாரியத்தின் மூலம் இதுவரை 1,747 உறுப்பினர்கள் பயன்பெற ரூ.29.62 இலட்சங்கள் நிதியுதவி வழங்கப்பட்டது.

★ அரசு உண்டி உறைவிடப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.25 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ மத்திய சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நல காலனிக்கு கழிவு நீர் வாய்க்கால் மற்றும் கான்கிரீட் சாலை அமைத்தல், ஆதிதிராவிட நல விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்கு கூடுதல் வசதிகள் செய்தல் போன்ற பணிகளுக்கு ரூ.207.58 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ 585 ஆதிதிராவிட நல மற்றும் பழங்குடியினர் நல விடுதி சொந்தக் கட்டடங்களுக்கு மின் விசிறிகள் வழங்கி பொருத்தும் பணிக்கு ரூ.99.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்கு பராமரிப்பு மற்றும் சுற்றுச் சுவர் பணிகளுக்கு ரூ.521.10 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

★ 121 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கு நபார்டு வங்கி கடனுதவியுடன் ரூ.5,014 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

★ 50 பழங்குடியினர் நல உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் மற்றும் சமையலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.100 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ 249 ஆதிதிராவிடர் நல குடியிருப்புகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கு நபார்டு வங்கி கடனுதவியுடன் ரூ.110.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ இரண்டு சமுதாயக் கூடங்களுக்கு சமையல் அறை கட்டுவதற்கு ரூ.4 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# மீன்வளம் மற்றும் மீனவர் நலன் காக்கும் மேம்பாட்டுத் திட்டங்கள்

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு. **கே.பி.பி. சாமி** அவர்கள்

★ தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் சராசரியாக ஆண்டிற்கு 1,80,000 மீனவர்களுக்கு கடந்த 4 வருடங்களில் ரூ.8,524.03 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 2009–10 ஆண்டிலிருந்து நிவாரணத் தொகை ரூ.1,200லிருந்து ரூ.1,800ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் சராசரியாக ஆண்டிற்கு 1,20,000 மீனவ மகளிர்க்கு கடந்த 4 ஆண்டுகளில் ரூ.5,899.03 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 2009–10 ஆண்டிலிருந்து நிவாரணத் தொகை ரூ.1,200லிருந்து ரூ.1,800ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 01.08.2006 முதல் மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக எரியெண்ணையின் அளவு படகு ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு 1,000 லிட்டரிலிருந்து 1,500 லிட்டராக உயர்த்தப்பட்டது. இயந்திரம் பொருத்திய பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு ஆண்டுக்கு 3,000 லிட்டர் வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 5,000 விசைப்படகுகளுக்கு 75,000 கிலோ லிட்டரும், 15,200 இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகுகளுக்கு 45,600 கிலோ லிட்டரும் வழங்கப்பட்டது.

★ மீன்பிடி விசைப்படகுகள் பயன்படுத்தும் அதிவேக எரியெண்ணைக்கான மத்திய கலால் வரியினை திரும்ப அளிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் சராசரியாக 5,286 மீனவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.859 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2009–2010ஆம் ஆண்டிலிருந்து மானியத் தொகை லிட்டர் ஒன்றிற்கு ரூ.1.50லிருந்து ரூ.3ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மாநில மற்றும் மாவட்ட அளவில் 10 மற்றும் +2 வகுப்புகளில் முதல் மூன்று படிநிலை பெறும் 3 மீனவ மாணவ, மாணவிகளுக்கு ரூ.300 முதல் ரூ.5,000 வரை ரொக்க ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

★ அண்மைக் கடல் பகுதிகளில் மீன்வளத்தை அதிகரிக்க 2007–08 மற்றும் 2008–09ஆம் ஆண்டுகளில் ரூ.40 இலட்சம் செலவில் 4 இடங்களில் செயற்கை முறை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

★ அண்மைக் கடல் பகுதிகளில் மீன்வளத்தை அதிகரிக்க 2008–09ஆம் ஆண்டில் தமிழக கடல் பகுதிகளில் 3 இடங்களில் ரூ. 20 இலட்சம் செலவில் 48 இலட்சம் இறால் குஞ்சுகள் வளர்த்து இருப்பு செய்யப்பட்டன.

★ கடல் மீன்பிடிப்புத் திறனை மேம்படுத்த கடந்த 4 ஆண்டுகளில் நாட்டுப்படகு மீனவர்களுக்கு 2,550 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்கி வழங்க ரூ.610 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2009–2010 ஆண்டிலிருந்து அதிகபட்ச மானியம் இயந்திரம் ஒன்றிற்கு ரூ.20,000 லிருந்து ரூ.30,000 உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ 45 நாட்கள் கடல் மீன்பிடிப்பு தடைகாலத்தில் மீனவர் குடும்பம் ஒன்றிற்கு ரூ.500 வீதம் 2008–09 மற்றும் 2009–10 ஆண்டுகளில் மொத்தம் ரூ.1,433 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

★ மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2006–07 முதல் 303 இறந்த மீனவர் குடும்பங்கள் மற்றும் நிரந்தர / பகுதி ஊனமடைந்த மீனவர்களுக்கு ரூ.151.50 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–09 முதல் காணாமல் போன 18 மீனவர்களின் குடும்பங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.50 வீதம் ரூ.7.02 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

★ 20.09.2008 முதல் இலங்கை கடற்படையினரின் தாக்குதலின் போது உயிர் இழக்க நேரிடும் மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாகவும் ஆதரவற்ற நிலையில் இருக்கும் இறந்த மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது. படுகாயமடைந்த நபர்களுக்கு ரூ.50,000மும் சிறிய காயமடைந்தவர்களுக்கு ரூ.20,000மும் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

★ 2008–09 முதல் இயற்கை இடர்பாடுகள் களையும் மேலாண்மைப் பிரிவு ரூ.6 இலட்சம் செலவில் சென்னை மீன்துறை ஆணையரகத்தில் செயல்பட்டு வருகிறது.

★ மீனவர்களுக்கான இலவச வீடு கட்டித்தரும் திட்டம் (2006–07)இன் கீழ் 2,000 வீடுகள் கட்ட ரூ.740 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

★ கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் மற்றும் தேங்காய்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு 2008–ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.6,710 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டு ஆரம்ப நிலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் ரூ.50 கோடி செலவில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கு மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

★ கட்டுமானம், சொந்தமாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையின்படி கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் மற்றும் இராஜாக்கமங்களம் துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க 2006ஆம் ஆண்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

★ உள்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி செயல்பாட்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.952.41 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியினை அதிகரிக்க தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 2008–09 மற்றும் 2009–10 ஆம் ஆண்டுகளில் நீர்த்தேக்கங்களில் வளர்ந்த விரலளவு மீன்குஞ்சுகள் இருப்பு செய்திட ரூ.352.01 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் 2007–08 மற்றும் 2008–09ஆம் ஆண்டுகளில் ரூ.836.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 2009–10 ஆம் ஆண்டில் 49 உபநதி நீர் கோட்டங்களில் மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

☆ தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மீன்வள மேம்பாட்டிற்காகவும் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் மீன்வளர்ப்போரின் திறன் மேம்பாட்டிற்காகவும், 2007–08, 2008–09 மற்றும் 2009–10 ஆண்டுகளில் ரூ.1,032.87 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

☆ மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின் கீழ் விரிவாக்கம் மற்றும் பயிற்சிக்காக 2007–08ஆம் ஆண்டில் ரூ.65 இலட்சம் செலவில் 3 பயிற்சி மையங்களும், ஒரு விழிப்புணர்வு மையமும் கட்டப்பட்டுள்ளது.

☆ தமிழ்நாடு மீனவர் நலவாரியம் 2007ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 31.03.2010 வரை 2,55,790 மீனவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு இதுவரை 3,848 உறுப்பினர்களுக்கு ரூ.1.51 கோடி நிவாரணம் பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

☆ மீனவர்களுக்கு சூரை மீன்பிடிப்பு மற்றும் மீன்வளத் தொழில் முறைகளில் பயிற்சி அளிக்க மீன்வள தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் 17.6.2009 அன்று அமைக்கப்பட்டது. திட்டப் பணிகளுக்காக ரூ.1 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 2,390 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதல் நிவாரணமாக வலைகள், ஐஸ் பெட்டிகள், உயிர்காக்கும் கவச உடைகள், மிதிவண்டிகள் போன்றவை ரூ.110.36 கோடி செலவினத்தில் வழங்க ஆணையிடப்பட்டு இதன் மூலம் 42,000 மீனவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

★ மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களின் தேசிய நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ.38.50 இலட்சம் மதிப்பில் விளையாட்டு சாதனங்களும், ரூ.8.30 கோடி செலவில் 47,000 முதலுதவிப் பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

★ சுனாமியால் சேதமடைந்த சென்னை மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்த ரூ.19.489 கோடி ஒப்பளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

★ கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தை புனரமைக்கவும், கோவளம் கிராமத்தில் குளிர்பதன நிலையம், ஆரோக்கியபுரத்தில் படகு அணையும் மேடை, இணையம்புத்தன் துறையில் மீன்பிடி இறங்கு தளம் மற்றும் பரங்கிப்பேட்டையில் மீனவர் பயிற்சி நிலையம் மற்றும் ஆய்வு மையம் ஆகியவைகள் அமைக்கவும் ரூ.4.525 கோடி செலவில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 10 மீன் இறங்கு தளங்கள் அமைக்க ரூ.49.97 கோடி ஒப்பளிக்கப்பட்டு 6 மையங்களில் பணி நடைபெற்று வருகிறது.

☆ 2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடிக் கலன்கள் கட்டுவதற்காக வங்கிகளில் பெறப்பட்ட கடன் தொகை ரூ.80 கோடி தமிழக அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனில் ரூ.63.7 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 2,715 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

☆ இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்பிடிப் படகுகளுக்கு கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்த ரூ.7.73 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

☆ தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தமிழ்நாடு தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் வட்டித் தொகை ரூ.19.56 கோடி அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது.

☆ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வாயிலாகவும், கருணை அடிப்படையிலும் பல்வேறு பதவிகளில் 126 புதிய பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

★ ★ ★



# பால் உற்பத்தியில் முன்னிலை

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
**திரு. உ. மதிவாணன்** அவர்கள்

★ உலகிலேயே அதிகமாக பால் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. இந்தியாவில் பால் உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்கிறது. மொத்த வருவாய் கிராமங்களில் 50 விழுக்காடுக்கு அதிகமான கிராமங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து இந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 22.29 இலட்சம் உறுப்பினர்கள் அடங்கிய 8,246 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

**நிதியுதவி**

★ பால்வளத்துறையின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.10,355 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியானது, கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது ஐந்து மடங்கிற்கும் அதிகமான தொகையாகும்.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பால்கொள்முதல் சராசரியாக நாளொன்றிற்கு 26.34 இலட்சம் லிட்டராக உள்ளது.

★ 2005-2006 ஆம் ஆண்டில் பால் விற்பனை நாளொன்றுக்கு 17.36 இலட்சம் லிட்டராக இருந்தது, இது 2009 - 2010ஆம் ஆண்டில் 20.50 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. சென்னை மாநகர பால் விற்பனை நாளொன்றுக்கு 8.48 இலட்சம் லிட்டரிலிருந்து 10.45 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

★ தற்பொழுது உற்பத்தி செய்யப்படும் பால் உபப்பொருட்களான ஐஸ்கீரிம், கோவா, பேரிச்சம்பழக்கோவா, யோகர்ட், நறுமணபால், டெட்ரா



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன் அவர்கள்
சென்னை, பரங்கிமலை இரயில் நிலையத்தில் புதிய ஆவின் பாலகத்தினை குத்துவிளக்கேற்றி
முதல் விற்பனையைத் தொடங்கிவைத்தார். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (29.8.2009)

பால், ஆவின் டிலைட், மாவின், மோர், தயிர், லஸ்ஸி, மைசூர்பா, குலோப்ஜாமூன் ஆகியவற்றைத் தவிர புதிய பால் உபப்பொருட்களான புரோபயாடிக் தயிர், சர்க்கரையில்லா ஐஸ்கிரீம், வே பானம், மசாலா மோர், பாதாம் மிக்ஸ் ஆகியவை கடந்த நான்கு ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

★ தரமான தூய பால் உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் குறிக்கோள் நூறு சதவிகித மானியத்தில், கிராமப்புர விவசாயிகளுக்கு தூய பால் உற்பத்தி குறித்து பயிற்சி அளித்தல், பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள், நுண்மத்தடை திரவங்கள் வழங்குதல், ஒன்றியங்கள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனைக் கூடங்களை மேம்படுத்துதல், பாலின் முதன்மைத் தரத்தை அதிகரிக்க தேவைப்படும் மொத்த பால் குளிர்விப்பான்களை சங்கத்தில் நிறுவுதல் ஆகியவை ஆகும். இத்திட்டத்தின் கால அளவு இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் ஆகும்.

★ இத்திட்டம் வேலூர், விழுப்புரம், திருச்சி, தருமபுரி, சேலம், ஈரோடு, நீலகிரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், மதுரை, திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,014.04 இலட்சம் மைய அரசால் ஒதுக்கீடு செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ இத்திட்டத்தின் வாயிலாக 52,001 கிராமப்புற விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 98 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டு குளிரூட்டும் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் கோயம்புத்தூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு தூய பால் உற்பத்தி திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு மூலம் ரூ 320.45 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ தீவிர பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் சிவகங்கை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஒன்றியங்களுக்கு, மத்திய அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,085.51 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக, 31.03.2010 நிலவரப்படி, 8 மாவட்டங்களிலுள்ள 861 சங்கங்களைச் சார்ந்த 2.42 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெற்றுள்ளனர். 124 புதிய சங்கங்கள் உருவாக்கப்பட்டும், 74 செயலிழந்த சங்கங்கள் புத்துயிரூட்டப்பட்டும் உள்ளன.

★ புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நட்டத்தில் செயல்படும் ஒன்றியங்கள் மற்றும் இணையம் ஆகியவற்றின் நட்டத்தை சரிசெய்து கொள்வதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகள் சரி சமமாக 50 விழுக்காடு தொகையை மானியமாக வழங்கும்.

★ ஈரோடு, விழுப்புரம் மற்றும் தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியங்களைச் சார்ந்த மாவட்டங்களில் இத்திட்டம் மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முறையே ஈரோடு ஒன்றியத்திற்கு ரூ.9 கோடியும், விழுப்புரம் ஒன்றியத்திற்கு ரூ.4 கோடியும், தருமபுரி ஒன்றியத்திற்கு ரூ 9.70 கோடியும் வழங்கப்பட்டு உள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், தமிழகத்தில் 15 மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 7 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் ரூ.520.865 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 145 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் 10,150 மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, நாளொன்றிற்கு சராசரியாக 26,134 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது.

★ தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் கடந்த 2007–2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.2,389.25 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு பால்வள மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.1,102.79 இலட்சம் மதிப்பீட்டில், பல்வேறு பால்வள மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ தமிழ்நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தி செய்யும் விவசாயக் குடும்பங்கள் கூடுதல் வருவாய் பெறும் வகையில் "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புர மகளிருக்கான பால்பண்ணைத் திட்டம்" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 200 கிராமங்களில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.22 கோடி செலவில் பத்தாயிரம் கலப்பின கறவை மாடுகள் இரண்டு கட்டமாக வழங்கப்படவுள்ளன. இத்திட்டத்தில் முதல் கட்டமாக கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இரண்டாம் கட்டமாக

மேலும் பிற மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் விரிவுபடுத்தப்பட உள்ளது.

★ தமிழகத்தில் சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியில் ரூ.410.40 இலட்சம் செலவில் 13 மாவட்டங்களில் 160 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அதற்கான உள் கட்டமைப்பு வசதிகள், 9 மொத்த பால் குளிர்விப்பான்கள் மற்றும் 37 பாலகங்கள் அவற்றிக்கான உபகரணங்கள் ஆகியவை அமைக்கப்பட்டன. சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் பால் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

★ இது வரை 253 கணினியுடன் கூடிய பால் கொள்முதல் நிலையங்கள் ரூ.339.91 இலட்சம் மதிப்பீட்டில் அரசு திட்டங்களின் கீழ் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் நிறுவப்பட்டுள்ளன.

★ இதுவரை 183 பால் கறவை இயந்திரங்கள் ரூ.111.16 இலட்சம் மதிப்பில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 125 புல்வெட்டும் கருவி ரூ.44.85 இலட்சம் மதிப்பீல் வழங்கப்பட்டுள்ளது.

★ எருமைக் கன்றுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2015 பெண் எருமை கன்றுகளுக்கு, ரூ 438.40 இலட்சம் செலவில் தேவையான கால்நடைப் பராமரிப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட கால்நடை தீவனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

★ தாது உப்பு கலவை நிலையங்கள் தினசரி தலா 12 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யும் திறனில் ஈரோடு, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை 277 மெட்ரிக் டன் தாது உப்புக் கலவை 2,77,000 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது

★ இதற்காக ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பைபாஸ் புரத தீவன தயாரிப்பு ஆலை ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

★ ஆவின் இல்லத்தில் சுமார் ரூ.6.50 இலட்சம் செலவில் தொழில்நுட்பப் பயிற்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி மையத்தில் பால்பண்ணைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு ஊழியர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் (Technical Subjects) மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப, கால்நடைகளைப் பராமரித்தல் (Technical Subjects- Animal Husbandry) மனிதவள மேம்பாடு மற்றும் கணினி கையாளுதல் (Computer Studies & HRD Studies) நிருவாகத்திறனை மேம்படுத்துதல் (Management Studies) ஆகியவற்றிற்கான பயிற்சிகள் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் பால்பண்ணைத்தொழில் மேலும் சிறப்புடன் செயல்படும் என்பது குறிப்பிடத்தக்கது. பால்வளத் தொழிலில் வளர்ந்து வரும் போட்டிகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் தொழில் நுட்ப திறமை மற்றும் அறிவை மேம்படுத்த 1,269 கிராம நலப் பணியாளர்கள், 413 கால்நடை மருத்துவர்கள் மற்றும் 3,850 பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

★ பால்வளத் தொழிலில் மேம்பாடுகளைத் தெரிந்து கொள்வதற்காக கடந்த நான்கு ஆண்டுகளில் 1,398 பால் உற்பத்தியாளர்கள் கல்வி சுற்றுலாவாக குஜராத், கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களுக்குச் சென்று வந்துள்ளனர்.

★ பகுதி – II திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 14,000 துறுவுறா எஃகு பால் கொள்கலன்கள் ரூ.400 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

★ நான்கு ஆண்டுகளில் 550 துறுவுறா பால் சேகரிப்புக் கலன்கள் ரூ.31 இலட்சம் செலவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ பகுதி– II திட்டம் மற்றும் மத்திய மாநில திட்டங்களின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 166 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன.

★ தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலையினை மேம்படுத்துவதற்காகவும், பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும் ஐஸ்கிரீம், பன்னீர் மற்றும் கோவா தயாரிக்கும் உபகரணங்கள் 8 சங்கங்களுக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

★ நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் தயாரிக்கப்படும் பாலாடைக்கட்டி உபபொருளிலிருந்து பெறப்படும் துணைப் பொருளான "வே" பானத்தை மதிப்புக் கூட்டி வெளிச் சந்தையில் விற்பனை செய்வதற்கு ரூ.35 இலட்சம் செலவில் "வே" பானம் தயாரிப்பு அலகு அமைக்கப்பட்டுள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் பால் குளிரூட்டும் திறன் மொத்த பால் குளிர்விப்பான்கள் மூலம் 6.56 இலட்சம் லிட்டர் உயர்த்தப்பட்டுள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் இணையம், ஒன்றிய பால்பண்ணைகள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. சென்னை மாநகர பால் பண்ணைகளில் சமச்சீர் இயந்திரம், பால்டேங்கர்கள், பால் சுத்திகரிக்கும் இயந்திரம் போன்றவை ரூ.676 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

★ ஒன்றிய பால்பண்ணைகள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் ஜெனரேட்டர், கொதிகலன்கள், குளிரூட்டும் சாதனங்கள், பால்பண்ணைக்குத் தேவையான இயந்திரங்கள் போன்றவை ரூ.1492.85 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

★ பால் கொள்முதல் விலை உயர்வு 2007ஆம் ஆண்டு பசும்பாலின் விலை லிட்டருக்கு ரூ 1.50ம் எருமைப்பால் லிட்டருக்கு ரூ.1.50ம் உயர்த்தப்பட்டது. 2008ஆம் ஆண்டு பசும்பாலின் விலை லிட்டருக்கு ரூ.2ம் எருமைப்பால் லிட்டருக்கு ரூ.4ம் உயர்த்தப்பட்டது. 2009ஆம் ஆண்டு பசும்பாலின் விலை லிட்டருக்கு ரூ.2ம் எருமைப்பால் லிட்டருக்கு ரூ.5ம் உயர்த்தப்பட்டது.

★ மொத்தமுள்ள 8,246 பால் கூட்டுறவுச் சங்கங்களில் 7,163 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. மேலும் 1,374 சங்கங்களில் உள்ள 1,24,407 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.549.70 இலட்சத்தை ஈவு தொகையாகவும், உறுப்பினர் ஊக்கத் தொகையாகவும் மற்றும் கூடுதல் கொள்முதல் விலையாகவும் இலாபத்திலிருந்து வழங்கப் பட்டுள்ளது.

★ 1,125 புதிய பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 114 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மகளிரால் நடத்தப்படுகின்றன.

★ 655 செயலழிந்த சங்கங்கள் புத்துயிரூட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ திருச்சி மற்றும் கோயம்புத்தூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்களுக்கு முறையே ரூ 522.50 இலட்சத்தை 50,240 பால் உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் ரூ.381.65 இலட்சத்தினை 19.854 பால் உற்பத்தியாளர்களுக்கும் ஊக்கத் தொகையாக வழங்கியுள்ளன. மேலும் 2009– 2010 ம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்ட ஒன்றியத்தை சேர்ந்த 20,065 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.370.28 இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

★ மாநில அளவில் 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் நடந்த +2 தேர்வில் அதிக மதிப்பெண் வாங்கிய ஒவ்வொரு ஒன்றியத்தின் சங்கங்களைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்களின் பிள்ளைகளுக்கு தலா ஒரு கணினி வீதம் 34 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ கால்நடை காப்பீட்டுத் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன். தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலமாக, இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 15 மாவட்டங்களில் மொத்தம் 2,40,941 பசு மற்றும் எருமை கறவை இனங்கள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. மொத்த பிரீமியத்தில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ தரம் உயர்ந்த ஜெர்சி கலப்பின பொலிக் காளைகளை உருவாக்கும் பொருட்டு வேலூர் மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களில் தேசிய பால்வள வாரியத்துடன் ஒருங்கிணைந்து வம்சா வழிச் சோதனைத் திட்டம் ரூ.8.64 கோடி செலவில் வரும் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

★ மாவட்ட ஒன்றியங்களின் மூலம் செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2005–2006ஆம் ஆண்டில் 2,385 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்கள் இருந்தன. 2009–2010ஆம் ஆண்டில் 2.600 செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்கள் ஆக உயர்ந்துள்ளது.

★ 2005–2006ஆம் ஆண்டில் 12.95 இலட்சம் செயற்கைமுறைக் கருவூட்டல்கள் செய்யப்பட்டன. 2009–2010ஆம் ஆண்டில் செயற்கைமுறைக் கருவூட்டல் எண்ணிக்கை 14.80 இலட்சமாக உயர்ந்துள்ளது. மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் 55.23 இலட்சம் செயற்கைமுறைக் கருவூட்டல்கள் செய்யப்பட்டன. இதன் மூலம் 8.41 இலட்சம் பெண் கன்றுகள் பிறந்துள்ளன.

★ நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் 2005–2006ஆம் ஆண்டில் 42 ஆக இருந்தது. 2008–2009ஆம் ஆண்டில் 68ஆக உயர்ந்துள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2008–2009 மற்றும் 2009–2010ஆம் ஆண்டில் ரூ.507 இலட்சம் செலவில் புதிய கால்நடை மருத்துவ வழித் தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்பொழுது, 118

கால்நடை மருத்துவ வழித்தடங்கள் செயல்பட்டு வருகின்றன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் கால்நடை மருத்துவ வசதி உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 3,401 லிருந்து 6,407 பால் கூட்டுறவுச் சங்கங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 23.71 இலட்சம் கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டுள்ளன

★ பால்வளத்துறையில் 18 பணியாளர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், பணியின் போது இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், பால்வளத்துறையில் 11 பேருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தில் 86 பேருக்கும் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் 44 பேருக்கும் பணி நியமனம் வழங்கப்பட்டது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் 13 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் 285 பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு உள்ளது.

★ இணையம் மற்றும் ஒன்றிய பணியாளர்களுக்கு, வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணம் ரூ.1,000 ரூ.2,000ஆக உயர்த்தப்பட்டது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகையாக ரூ.2,156.26 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ பால்வளத்துறையில் 48 பணியாளர்களுக்கும், 172 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் ஒன்றியத்தின் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மருத்துவ செலவு ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் ரூ.99.85 இலட்சம் வழங்கப்பட்டது.

★ ஆண் பணியாளர்களுக்கான சீருடை தையல் கூலி ரூ.300இலிருந்து ரூ.450ஆகவும் மகளிருக்கு ரூ.60இலிருந்து ரூ.110ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

★ சலவைப்படி ஒரு மாதத்திற்கு ரூ.25லிருந்து ரூ.60ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ இரவு நேரப்படி ரூ.5லிருந்து ரூ.15ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ காஞ்சிபுரம் – திருவள்ளூர் ஒன்றியத்தின் கால்நடை தீவன ஆலையின் 131 பணியாளர்கள் இணையத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

★ அனைத்து இலகு வாகன ஓட்டுநர்களுக்கும் விடுமுறை வசதிகள் மற்ற அலுவலர்களுக்கு உள்ளது போல் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது.

★ களப் பணியாளர்களுக்கான அறுதியிட்டப் பயணப்படி, ஒரு மாதத்திற்கு ரூ.100 உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ நுகர்வோரின் தேவைகளுக்கும் விருப்பத்திற்கும் இணையம் முன்னுரிமை அளித்து, ஆவின் வியாபார சின்னத்தில் விநியோகிக்கப்படும் தூய பால் மற்றும் தரமான பால் உப பொருட்களைக் குறித்த புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் வகையில் நந்தனம் விற்பனை பிரிவில் 24 மணி நேரம் செயல்படும் நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் தொடர்பு கொள்ள கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1800–4253300 நந்தனம் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

★ இந்திய தரநிர்ணய நிறுவனம் (BIS) சென்னை ஆவின் நிறுவனத்திற்குச் சிறப்பான சுற்றுப்புறசூழல் மேலாண்மையை மேற்கொண்டு வருவதன் அடிப்படையில் உலகத்தரத்திற்கான ஐ.எஸ்.ஓ. 14001:2004 சான்றிதழை வழங்கியுள்ளது.

★ முதன் முறையாக ஆவின் நிறுவனம் நடந்து முடிந்த 36ஆவது அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்ட பாலகத்தில் சுமார் ரூ.29 இலட்சத்திற்கு பால்பொருட்களை விற்பனை செய்து புதிய சாதனை படைத்துள்ளது. இது கடந்த காலங்களை ஒப்பிட்டு நோக்கும்போது சுமார் ரூ.10 இலட்சம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★



# அயல்நாட்டுக் கண்காட்சிகளில் கைத்திறத் தொழிற் பொருட்கள்

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திரு. கா. இராமச்சந்திரன் அவர்கள்

★ புதுடில்லியில் உள்ள விற்பனை நிலையம் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பெற்ற நிதியுதவியுடன் ரூ. 50 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது. மேலும், இந்நிறுவனம் தஞ்சாவூர், திருச்சி, சென்னை, பெங்களூரு மற்றும் கோயம்புத்தூரில் உள்ள விற்பனை நிலையங்களை ரூ.75 இலட்சம் செலவில் புதுப்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

★ மாநிலத்தில் பித்தளைக் குத்துவிளக்கு மற்றும் பஞ்சலோக சிலைத் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் கைவினைஞர்களுக்குப் பித்தளை, செம்பு, துத்தநாகம் போன்ற தரமான மூலப்பொருட்களை நியாயமான விலையில் தங்கு தடையின்றி வழங்கும் நோக்கத்துடன் ரூ.2 கோடி செலவில் ஒரு மூலப்பொருள் வங்கி சுவாமிமலையில் அமைக்கப்பட்டு விரைவில் செயல்படவுள்ளது.

★ தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளிநாடுகளில் நடைபெறும் சர்வதேசக் கண்காட்சிகளில் கலந்து கொண்டு வருகிறது. 2008–09ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் ஒரு கருத்துசார் கண்காட்சியினை நடத்தியது. இது தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வசிக்கும் இந்தியர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. 2009–10இல் கலிபோர்னியா (அமெரிக்கா) மற்றும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் (ரஷ்யா) ஆகிய இடங்களில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சிகளில் கலந்து கொண்டுள்ளது.

★ தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் வருடந்தோறும் பூம்புகார் மாநில விருதுப்போட்டியினை நடத்தி வருகிறது. தமிழக கைவினைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இப்போட்டியில் பரிசு பெறுவோர்களின் எண்ணிக்கையை ஐந்திலிருந்து பத்தாக உயர்த்தப்பட்டதுடன், பரிசுத் தொகையையும் ரூ.20,000லிருந்து ரூ.50,000 என உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ இந்நிறுவனம் துவக்கப்பட்டதிலிருந்து விற்பனை படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் மூலம் ரூ.9,943.16 இலட்சம் அளவில் விற்பனை செய்து அதன் மூலம் ரூ.471.68 இலட்சம் இலாபம் ஈட்டி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

★ கடந்த பல வருடங்களாக தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தற்போதைய அரசு மேற்கொண்ட நடவடிக்கையினால் 2009–10ஆம் ஆண்டில் ரூ.3.27 கோடி இலாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது.

★ தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நிருவாக செலவினத்தைக் குறைத்திட வாரியத்தின் 378 உபரி பணியாளர்களை அவர்கள் விருப்பப்படி பிற துறைகளில் ஊதிய பயனுடன் பணியமர்த்திட, ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ மூடப்பட்ட 15 கைமுறை காகித அலகு தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், இதுவரை 60 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. மீதம் உள்ள தொழிலாளர்களுக்கு நாளடைவில் மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

★ முந்தைய அரசு 2000–01 முதல் 2005–06ஆம் ஆண்டு முடிய ரூ.125.13 கோடி வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தது. தற்போதைய அரசு 2006–07 முதல் 2009–10ஆம் ஆண்டு முடிய ரூ.139.96 கோடி நிதி வழங்கியுள்ளது.

★ அமைப்பு சாரா தொழிலாளர்கள் பயன்பெறுவதைப் போன்று கதர் நூற்போர் மற்றும் நெய்வோர்கள் பயன் அடையும் வகையில் கதர் நூற்போர் மற்றும் நெய்வோருக்கு என தனியாக நல வாரியம் அமைக்கப்பட உள்ளது. இவ்வாரியம் அமைக்கப்படுவதால் 24,000 நூற்போர் மற்றும் நெய்வோர்கள் பயன் அடைவார்கள்.

★ சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு 2002–03 மற்றும் 2006–07 முடிய நீண்ட காலம் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த ரூ.25 கோடி தள்ளுபடி மானியத் தொகை தணிக்கை முடிவினை எதிர்நோக்கி, 2007–08ஆம் ஆண்டு ரூ.12.50 கோடி அரசு வழங்கியது. 2009–10ஆம் ஆண்டிற்கு தணிக்கை சான்றின் அடிப்படையில் ரூ.10.61 கோடி அரசு வழங்கியது. இதன் மூலம் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் தொழில்கள் புத்துயிர் பெற்றுள்ளன.

★ பொதுமக்களைக் கவரும் பொருட்டும் மற்றும் விற்பனையை அதிகரிக்கவும் அரசு 2008–09ஆம் ஆண்டு ரூ.25 இலட்சமும், 2009–10ஆம் ஆண்டு ரூ.10 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.35 இலட்சம் அனுமதித்து சென்னையிலுள்ள குறளகம் கதரங்காடியினைப் புனரமைத்துள்ளது.

★ 1993 முதல் வாரியத்திற்கு கதர் ஆணையத்திலிருந்து தள்ளுபடி மானியம் வழங்கப்படாமல் இருந்தது. 17 ஆண்டுகளுக்கு பிறகு கதர் ஆணையத்தி லிருந்து ரூ.48 இலட்சம் ரொக்கமாகத் தள்ளுபடி மானியம் பெறப்பட்டது.

**தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்**

★ பதநீர் கொள்முதல் விலை நீண்டகாலமாக லிட்டர் ஒன்றுக்கு ரூ.4 என்று இருந்தது. 4.11.2008 முதல் லிட்டர் ஒன்றுக்கு ரூ.7 ஆக உயர்த்தப்பட்டது. 22.03.2010 முதல் பதநீர் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.7 லிருந்து ரூ.10ஆக உயர்த்தப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

★ பனைத் தொழிலாளர்களின் நலனைக் காக்கவும், அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கும் நோக்கத்துடனும் பனைத்தொழிலாளர் நல வாரியம் 1.9.2006 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நலவாரியத்தில் 31.3.2010 வரை 31,635 பனைத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப் பட்டுள்ளனர். இந்நலவாரியத்தின் மூலம் 5,418 பயனாளிகளுக்கு உதவித் தொகையாக ரூ.1,04,92,439 வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–2009ஆம் ஆண்டு பதநீர் இறக்கி கருப்புக்கட்டி தயாரிப்பதற்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு மானியமாக தலா ரூ.4,000 வீதம் 3,747 பனைத் தொழிலாளர்களுக்கு ரூ.1.50 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

# தமிழரசு

## சந்தாதாரர் ஆகுங்கள்

தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வெளியிடப்படும் தமிழரசு இதழில் அரசு நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய உரைத் தொகுப்புகள், அரசின் முக்கிய ஆணைகள், கதை, கவிதை, கட்டுரைகள் என ஏராளமான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

**படிக்க**
**பயன்பெற**
**பாதுகாக்க**

**தமிழரசு (தமிழ்) மாத இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.10/- |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.120/- |
| ஆயுள் சந்தா | : | ரூ.1,000/- (10 ஆண்டுகள்) |

**தமிழரசு (ஆங்கிலம்) காலாண்டு இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.15/- |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | : | ரூ.500/- (10 ஆண்டுகள்) |

தமிழரசு சந்தாத் தொகையினை
வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
தமிழரசு அலுவலகம்,
110, அண்ணா சாலை,
(எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
ஆணையரக அலுவலக வளாகம்)
சென்னை - 600 002.

என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர்,
மாவட்டம் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் ஆகியவற்றை
சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இன்றே தமிழரசு சந்தாதாரர் ஆகுங்கள்**

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு
# தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – **46** ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!

வெளியீட்டு ஆணை எண். 1445/வரைகலை/விளம்பரம்/2009

R.N.I. No.21446/70 Regn.No.TN/ARD/48/09-11
& WPP No. TN/PMG(CCR)518/09-11

கரம் இணைப்போம் எய்ட்ஸை ஒழிப்போம் வாழ்வை காப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அரவணையுங்கள்



ஒன்று சேர்ந்து விளையாடுவது



கை குலுக்குவது மற்றும் கட்டி அணைப்பது போன்ற சாதாரண பழக்க வழக்கத்தினால் எய்ட்ஸ் பரவாது.



எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு நபரின் இருமல் மற்றும் தும்மலின் மூலம் மற்றவருக்குப் பரவாது.



எச்.ஐ.வி. உள்ள நபர் பயன்படுத்திய கழிவறையைப் பயன்படுத்துவது அல்லது பொருட்களை மாற்றிக் கொள்வதால் பரவாது.



கொசுக்கடி மூலம் எய்ட்ஸ் பரவாது.

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?



பாதுகாப்பற்ற முறையில் பலருடன் உடலுறவு கொண்டால் எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு பரவும்.



பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி. கிருமி உள்ள இரத்தம் மூலம் மற்றவருக்குப் பரவும்.



எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும் குழந்தைக்குப் பரவ வாய்ப்பு உள்ளது.



கிருமி தொற்றுள்ள சுத்தம் செய்யப்படாத பிளேடுகளை, ஊசிகளை பகிர்ந்துகொள்வதால் பரவும்.

**ஒரு துளி இரத்தம் போதுமே**
**உங்கள் உடல் நலனை அறிய**
திருமணம், குழந்தைப்பேறு, இரத்ததானம் ஆகியவைகளுக்கு முன் இரத்தத்தில் எச்.ஐ.வி உள்ளதா என பரிசோதனை செய்யுங்கள்




மேலும் விவரங்கள் / ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களை (ICTC) அணுகவும்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸை எவ்வாறு தடுக்கலாம்?



திருமணத்திற்கு முன் உடலுறவை தவிர்த்தல்.

திருமணத்திற்கு பின் தாம்பத்தியத்தில் ஒழுக்கமாயிருத்தல்.



பாதுகாப்பான உடலுறவிற்கு ஆணுறையைப் பயன்படுத்துதல்.



பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே பயன்படுத்துதல். இரத்த தானம் செய்யப்படுவதற்கு முன் பெறப்படும் இரத்தம் எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) கிருமியால் பாதிக்கப்படாதது என பரிசோதித்து உறுதி செய்தல் வேண்டும்.



எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து பிறக்கும் குழந்தையை எச்.ஐ.வி.கிருமி தாக்காமல் பிரசவத்தின் முன் தரும் மருந்து மூலம் தடுக்கலாம். பிரசவத்திற்கு முன்னால் உரிய சிகிச்சை மேற்கொண்டால் தாயிடமிருந்து எச்.ஐ.வி. குழந்தைக்கு பரவாமல் தடுக்கலாம்.



இரத்தம் மற்றும் மனித உடற்கசிவுகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் ஊசிகள்,பிளேடுகள் மற்றும் பிற உபகரணங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி அழித்து விட வேண்டும். இந்த உபகரணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்

**சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்**

82, திரு.வி.க. சாலை, மைலாப்பூர், சென்னை - 4.

இலவச தொலைபேசி : 1913

CAPACS

வெளியீட்டு ஆணை எண்.959/வரைகலை/விளம்பரம்/ 2010